
# தமிழர் இலக்கிய இலக்கணம்

## - ஓர் அறிமுகம் -



ஆசிரியர் :

**நா.வை.குமரிவேந்தன்**

(மகேந்திரராசா)

# தமிழர் இலக்கிய இலக்கணம்
## (ஓர் அறிமுகம்)

**நூல்களுக்குத் தரும் தொகை செலவல்ல முதலீடு**

ஆசிரியர் :

**நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா)**

வெளியீடு :

**இலங்கை குமரித் தமிழ்ப் பணி மன்றம்**

கிளிநொச்சி.

## நூல் அடக்கம்:

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழர் இலக்கிய இலக்கணம் ஓர் அறிமுகம் |
| ஆசிரியர் | : | நாவை குமரிவேந்தன் (மகேந்திரராசா) |
| வெளியீடு | : | குமரித் தமிழ்ப்பணி மன்றம்<br>இல.84, வெற்றி (ஜெயந்தி) நகர்,<br>கிளிநொச்சி, |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | : | மீனத்திங்கள் திருவள்ளுவர் ஆண்டு 2046<br>(பங்குனி 2015) |
| தொலைபேசி | : | +94776203788 |
| விலை | : | உரூபா.250/- |

## Book Details

| | | |
|---|---|---|
| Book Title | : | Thamizhar Elakkiya Elakkanam Ore Arimukam |
| Author | : | N.V.Kumariveanthan (Mahendrarajah) |
| Copy Right | : | Author |
| First Edition | : | Meenath Thinkal, Thiruvalluvar Aandu 2046<br>(March 2015) |
| Publication | : | Kumarith thamizh Pani Mantram<br>No.84, Jeyanthinagar, Kilinochchi. |
| Telephone | : | +94776203788 |
| Price | : | |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | - 05 |
| 1.0 | தமிழர் இலக்கிய இலக்கணம் | - 16 |
| 2.0 | பின்னிணைப்பு (வரலாற்றுத் திரிப்பின் பகரமாக) I | - 120 |
| 3.0 | பின்னிணைப்பு (வரலாற்றுத் திரிப்பின் பகரமாக) II | - 140 |
| | நூல்கள் யாக்கத்துணை நின்ற நூல்கள் | - 154 |

# முன்னுரை

## தமிழர் இலக்கிய இலக்கணம் (ஓர் அறிமுகம்)

இலக்கியம் வளர்ந்து வளம்பெற வேண்டுமானால் அதற்கு வேண்டியது மக்களும் இயற்கையுமே. தமிழ்ப்புலவர்கள் தம் புலமையை வெளிப்படுத்த மக்களையும் இயற்கையையும் தேர்ந்தெடுத்தனர். இம்முறையை வேறெந்த மொழிப்புலவரும் கைக்கொள்ளவில்லையென்றே கூறவேண்டும். இயற்கையை நுணுகி ஆழ ஆராய்ந்து, மக்களையும் நுண்ணிய உளவியல் வாயிலில் ஆராய்ந்து, உண்மையை மட்டும் வெளிப்படுத்துவோராகவே சங்கப்புலவர்கள் இருந்துள்ளனர். இத்தகைய சிறப்புக்குரிய சங்க இலக்கியங்களின் ஊடாகத் தமிழ்க்கலையை, தமிழ்ப்பண்பை, தமிழர் தம் ஒழுக்கத்தை, தமிழ் வரலாற்றை உறக்க நிலையிலிருக்கும் தமிழர்களுக்கும், தமிழர் இளந்தலைமுறையினருக்கும் உலகிற்கும் பரப்ப வேண்டும் என்பதில் **தனிநாயகம் அடிகள்** மிக வாஞ்சையாயிருந்தார் என்பதை கீழ்க்கண்டவாறு வெளிப்படுத்துகின்றார்.

கோமரின் "ஒடிசியையும்", வெர்யிலின் "இலியட்டையும்" மக்கள் போற்றுவது போல் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை; ஒப்புயர்வற்ற முத்தமிழ்த் தொடர்நிலைச் செய்யுளை உலகம் போற்றவும், கொன்பியூசியசு, செனக்கா ஆகிய நீதிநூல்களின் ஆசிரியர்களை உலகம் எவ்வாறு அறிந்து படிக்கின்றனரோ அவ்வாறு திருவள்ளுவரையும், அறிந்து படிக்கவும். சாபோ, எலிசபேத் பிரௌனிங், சேக்ச்பியரின் காதற் பாக்களை எப்படி விரும்பிப் படித்து இன்புறுவது போல் சங்க இலக்கிய அகத்திணைப்பாடல்களையும் படித்து இன்புறச் செய்ய முயலவேண்டுமென்பார். இதற்கு எடுத்துக்காட்டாக, குறுந்தொகைப்பாடல் 2 சுட்டலாம்.

> கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
> காமஞ் செப்பாது கண்டது மொழியோ
> பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
> செறியெயிற் றரிவை கூந்தலின்
> நறியவு முளவோநீ யறியும் பூவே?

நம் கலைகள் உலக வரலாற்றிலேயே மிகவும் சிறந்தவை. உலகெங்கனும் தேடினும் நம் சிற்பத்திற்கும், படிவ உருவக் கலைக்கும், இசை, நாட்டியத்திற்கும் இணையான கலைகளைக் காண்பது அரிதென்பார் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார். இறையனார் அகப்பொருளுரையையும் முச்சங்கங்களையும் கட்டுக்கதையென்றும், பச்சைப் பொய்யென்றும் மெத்தப் படித்த (மேதாவிகள்)வர் என்று சொல்லப்படுபவர்கள் கூறுகின்றனர். இவர்கள் வேறுருமல்ல தமிழால் பட்டங்கள் பதவிகள் பெற்றவர்கள், இவர்களுக்குச் சான்றுகள் வேண்டுமாம். முதலில் கூறப்பட்டுவந்த இன்றைய மாந்த இனத்தோற்றமான 11/2 இலக்கம் (இலட்சம்) என்ற அறிவியல் கூற்று இன்று இதற்கு முன் வாழ்ந்த மாந்த குரங்கு முன் மாந்த இனம் வாழ்ந்த காலம் 50 இலக்கத்திலிருந்து 14 இலக்கம் ஆண்டுகளென்றும், அதன் முன் வாழ்ந்த மாந்தக் குரங்கு 100 (1 கோடி) இலக்கம் காலத்தைக் கொண்டதென்றும் குறிப்பிடுகின்றனர். இமயமலைத் தோற்றம் 75 கோடி ஆண்டுகளிலிருந்து 25 கோடியாகத் தற்பொழுது கொள்ளப்படுகிறது. அறிவியல் கண்டு பிடிப்புக்களின் துல்லியத்தன்மைகள் கேள்விக்குறியாய் இருக்கும் போது வாய் வழி, செவி வழிச்செய்திகளில்; எண்களின், சொற்களிற் தவறுகள் ஏற்படுவதில் என்ன தவறு.

தமிழர்களிடம் உள்ள மிகத்தொன்மையான நூல் தொல்காப்பியம், அதில் கூட “என்ப”, என்மார்புலவர்”, “நுனித்தகு புலவர் கூறியவாறாக” கூறுகிறார். இதற்கான சான்றுகள்; அவர் கூறியவற்றை ஏற்று கேள்விகள் யாரும் கேட்பதில்லை. அதே போல் அன்று கடலடி நிலம் மேலெழுவதால் எரிமலை வெடிப்பால் நிலநடுக்கம், அழிப்பேரலை உருவாகும் என்றனர். இன்று அது நில ஓட்டு நகர்வின் போது ஏற்படும் உராய்வால் என்கின்றனர். சிலர் இல்லையில்லை இரண்டும் நடைபெறுகிறதென்கின்றனர் (இவை அறிவியல் ஆய்வாளர்களின் முரண்பாடுகள்).

மேற்குறித்த தமிழர்கள் எந்தத் தகுந்த சான்றுமின்றி தமிழிலக்கியத்தின் காலத்தை, வரலாற்றை பின்தள்ளுவதில், பொய்யெனக் கூறிவதில் என்ன பயன் பெறுகிறார்களோ தெரியவில்லை. அல்லது இவர்கள் இன்னும் வைதீக ஆரிய வடமொழியாளர்களின்

*நம்பிக்கைக்கு (விசுவாசம்) உரியவர்களா? இவர்கள் தம்புலமையினூ டாகப் பல ஆக்கமுறையிலான ஆய்வுகளை செய்யலாம், தமிழினம் நன்மையடையலாம். இலங்கைக் கல்வியாளர் ஒருவர் முனைவர் (கலாநிதி) பட்டமெடுக்க தமிழரின் இலங்கை வருகை கி.பி. 13 நூற்றாண்டு என எழுதிப்பட்டமும் பெற்றுள்ளாராம். அதுதான் பிலிப்பு 2004 கலைக்களஞ்சியத்தில் இலங்கையில் தமிழர் வரவு கி.பி 8ஆம் நூற்றாண்டு எனப்பதியப்பட்டுள்ளது போலும் அல்லது காலத்திற்குக் காலம் தமிழ் நாட்டிலிருந்து குறிப்பாக பண்டாரநாயக்காவின் மூதாதையர் கி.பி.15 ஆம் நூற்றாண்டில் (1454) நீலப்பெருமாள் என்னும் பெயருடன் புலம் பெயர்ந்து இலங்கை வந்து இந்து வாயிருந்தவர் பௌத்தராகிப் பின், போத்துக்கேயர் காலத்தில் றோ.க கிறீத்தவராகிப், பின் டச்சுக்காரர் ஆட்சிக் காலத்தில் புரட்டச்சாந்து மதத்தினராக மாறி ஆங்கிலேயர் காலத்தில் பண்டரநாயக்கா (பண்டாரநாயகம்) என்ற பெயருடன் பௌத்தராக மீண்டும் மாறி ஆட்சியைப்பிடித்தார். யெயவர்த்தனாவின் வரலாறும் இதை ஒத்ததே. இவரின் முதாதையரும் கி.பி.17ம் நூற்றாண்டில் இலங்கை வந்தவர்கள் (செட்டியார் குடும்பம்) ஆங்கிலேயர் ஆட்சியில் உயர்ந்த தமது குடும்பப் பெயரை யெயவர்த்தன என்றாக்கி; டொன் ஏட்ரியன் வியேசிங்க யெயவர்தன (தம்பிமுதலியார்)- 1830 காலமாக, இவர் தலைமுறையில் வந்த யே.ஆர்.யெயவர்த்தனா பௌத்தராக மாறி இலங்கையின் முதல் சனாதிபதியானார். (இலங்கையில் தமிழர்; கா.இந்திரபாலா.ப.367) இவர்களின் பின் இலங்கை அரசில் செல்வாக்குள்ள அமைச்சராயிருந்த சி.பி.டி.சில்வாவும் தன்னை ஒரு மலையாளி எனக் கூறிக்கொள்வார். இவர்கள் போன்ற தற்குறித் தமிழர்களை வைத்துத் தான் பிலிப் கலை களஞ்சியப் பதிவு ஏற்பட்டதோ தெரியவில்லை. அப்படியாயின், மாமரபு (மகாவம்சம்) கூறும் கி.மு.வில் எல்லாளன் - துட்டகெமுனு பற்றிய கூற்று பொய்யா? இதற்கு இப்பெரும் பதவிக்காரர் எத்தனை பேர் இதுவரையில் மறுப்புத் தெரிவித்து எழுதியுள்ளனர்.*

*மணிப்புலவர் மயீத் தாம் தமது **"சம்மாந்துறையின் தொல் (பூர்வீக) வரலாறு"** என்னும் நூலில் **மட்டக்களப்பு** முன் **மக்பார்** என்று வழங்கப்பட்டதென்றும், **ஊர்** என்னும் பெயர் **தமிழல்ல**வென்றும், இலங்கையில் அரபியர் வரவு 2000இற்கு முற்பட்டதென்று இன்னும்*

பலவும் மெழுதி வரலாற்றை முழுமையாகவே திரித்துள்ளார். (பின்னிணைப்பு (1), (2) பார்க்க) இப்படியாக தமிழைப்பேசுகின்ற, தமிழால் உடலும் உயிரும் வளர்க்கின்றவர்கள் எல்லாம் எப்படித் தமிழன்னையைக் கொச்சைப்படுத்துகிறார்கள். "நல்லது செய்யாவிட்டாலும் தீயவை செய்யாதிருக்கலாம் தானே".

இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் முச்சங்கம் இருந்தற்கான உண்மையை சுட்கிறாரேயன்றி ஒவ்வொன்றையும் வரலாற்றுத் தெளிவோடு வரையறுத்துக் கூறுவதாக எடுத்துக் கொண்டு கரகம் ஆடுவது "முட்டாள் தனமாகவே" கொள்ள வேண்டும். அகத்திய, தொல்காப்பிய நூல்களுள் எவ்வளவு இடைச்செருகல்கள் அடியாரக்கு நல்லார், பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள் எந்த மறுப்புமின்றி இக்கருத்துக்களை ஏற்கின்றனர். ஆயிரத்தி இருநூறு ஆண்டுகளின் பின் தமிழன் பண்பாட்டுக்கு, ஒழுக்கவியலுக்கு ஒவ்வாத எவற்றையெல்லாமோ கைக்கொண்டு நிற்கும் தற்குறிகள், மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள், குற்றம் காண்கின்றனர். கடைச்சங்க நூல்கள், காப்பியங்களில் சங்கம் பற்றிய (சங்கப் பலகை)ன கூறப்படுகிறது. வால்மிகி இராமாயணம் இடைச்சங்க கபாடபுரத்தை குறிப்பிடும், இதைக்கம்பன்" தென்தமிழ் நாட்டு அகல்பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேருவீரேல்" எனத் தெளிவுறக் கூறுவார்.

தொல்பழங்கால நிகழ்வுகளை பின்னவர்கள் எழுதும் பொழுது அதுவும் வாய்வழிச் செவிவழிச் செய்தியை எழுத்து வடிவில் அமைக்கும் பொழுது அக்கால இக்கால வழக்கிலுள்ள சொற்களை, எழுத்துக்களை பயன்படுத்துவது, எண்ணிக்கைகள் (வாய்வழி) மாறுபடுவது இயல்பானது. சிலவேளை இவ்வெண்ணிக்கைகள் தவறாக இருக்கலாம் அதை ஆய்ந்து சரியானதை வெளிக்கொணர வேண்டியவர்களல்லவோ? இவர்கள். ஆனால் இது அவர்களுக்கு முடியாத செயலாக இருக்கலாம் அல்லது தமிழை (நீசமொழி) த் தமிழரை (சூத்தரர் - கடைச்சாதி) வெறுக்கும் வேத வைதீக வடமொழியாரியர்களுக்கும், தமிழிலிருந்து கிளைத்த தமிழனை எதிரியாகப்பார்க்கும் அயற்றின மொழியிலாளருக்கும் தமிழன் வரலாற்றைத் தாழ்த்திக்காட்டும் எட்டப்பர்களாகவும், தற்குறிகளாகவும்

செயற்படுவதில் அவர்களுக்குபட்டம் பதவி உயர்வுகள், கம்பனுக்குப் போல் பொற்காசுகளும் கிடைக்கின்றனவோ என்னவோ? யாரறிவார்.

தொன்றுதொட்டு வைதீக வேதமரபார் தமிழன், தமிழ்மொழி இலக்கியங்களை (வரலாற்றை) முதலில் இல்லாமற் செய்வதற்கும், பின் அது சிறிது வெளிப்படத் தொடங்கிய காலத்தில் இருட்டடிப்புச் செய்யவும், காலத்தால் பின்தள்ளவும் இன்று வரை தொடர்ந்து முயன்று கொண்டிருக்கின்றனர். இந்திய நிலப்பரப்பை ஆங்கிலேயர் ஆண்டு கொண்டிருந்த போது **1812இல் தமிழ்மொழி நூல் பதிப்புத் தடைச் சட்டம்** ஏற்படுத்தப்பட்டிருந்தற்கு அன்றைய அரசில் வைதீகவேத ஆரியரின் செல்வாக்கு (இன்றுவரை) மேலோங்கி இருந்ததே காரணமாகும். இவர்களின் அழிப்புக்களை இருட்டடிப்புக்களை நான் யாத்த எல்லா நூல்களிலுமே குறிப்பிட்டிருக்கின்றேன். வரி வடிவமற்ற சமற்கிருதமொழி என்றோ செம்மொழித்தகுதியைப் பெற்றிருந்தும், தொல்காப்பிய, கடைச்சங்க இலக்கிய காலத்திலேயே செம்மொழித் தகுதியோடு யாக்கப்பெற்று 1910 ஆண்டளவில் வெளிவந்த சங்க இலக்கியங்களிருந்தும், 100 ஆண்டுகள் கழித்து தமிழ்நாட்டு திராவிட அரசு வைதீகவேதமேலாண்மை நடுவனரசுடன் ஒட்டி உறவாடிக்கொண்டிருந்ததால் (இவர் பக்கத்துணையுடன்) செம்மொழித் தகுதி தமிழுக்கு வழங்கப்பட்டது.

நீண்டகால எல்லையிலுள்ள ஒரு இலக்கிய (வரலாற்று)ச் செய்தியைத் தொகுக்கும் பொழுது அச்செய்தியானது பலவகை முரண்பட்ட, மாறுபட்ட, எதிர்ப்பட்ட மொழியியல், இனவியல், மதவியல், கருத்தியல், பண்பாட்டியல், அரசியல், அகப்புறத்தாக்கங்கள் என்பவற்றுள் நீந்திக்கடந்து தமிழர் கையில் சேர்ந்திருக்கிறதென்றால் அதில் திரிப்புகள், முறிவுகள், சேர்ப்புக்கள், தவிர்ப்புக்கள், சிதைவுகள், மறைவுகள், மறைப்புக்கள், குறைப்புக்கள், புனைவுகள், புகுத்தல்கள் நிகழ்ந்திருக்குமென்பதை ஏற்கத்தான் வேண்டும். கைமாறுதல், காலமாறுதல், புடை பெயர்தல், நடையதர்தல் போன்ற நிலைகளில் மேற்சொல்லப்பட்ட அனைத்தும் நிகழ்ந்திருக்கலாம். அதன் அடிமுடிகளைக் காணமுடியாதவொன்று, நாடும், நகரும், ஊரும், உலகமும் (கண்டங்களும்) மேடிட்டு, (மண்மூடி), மூழ்கிப் (நீர்) போகும் போது இவற்றிற்கெல்லாம் தப்பி வருதல் கண்டு பெருமையும் மகிழ்வும் கொள்வது தான் அறிவுடைமையாகும்.

*இருப்பதை கற்பனை, பச்சைப்பொய்யென புலம்புவதை விடுத்து வள்ளுவன் கூறுவது போல்" "யாகவாராயினும் "நா"காக்க" என்றும், "இனநலம் எல்லாம் புகழ் தரும்" என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மொழியை வேற்று மொழிக்கலப்பிலிருந்து தடுத்திருக்கலாம் (இன்றும் செயலாம்) மத போற்றிகளை (பூசனைகள்), மாந்த இன்பியல், துன்பியல் நிகழ்வுகளை அன்னைத் தமிழில் செய்ய முனைந்திருக்கலாம். மொழியை, மதத்தை (சைவம்) தூய்மைப்படுத்தப் பல செய்யலாம். சாதிய மேலாண்மையைக் களைந்தெறிய முயன்றிருக்கலாம். கீதை தமிழில் - மதுரைக் காஞ்சி (கி.பி 14 நூ.ஆ.) உரையில் முதல் முதல் சுட்டப்பட்டது. இதையெல்லாம் உண்மை என நம்பலாம், கரன் கரி கூட்டு ஐயப்பன், நாரதர், கிட்டினன் கூட்டு 60 சமற்கிருதப்பிள்ளைகள் போன்ற எத்தனையோ ஒழுக்கவியல் சீர்கேடுகளைக்களைந்து சீர்படுத்தியிருக்கலாம். இவற்றையெல்லாம் விடுத்து 1200 ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்ட ஒன்றைக் கொடுக்கிழுத்துக்கட்டிக் கொண்டு, கட்டுக்கதை பச்சை பொய் என்று கூற இவர்களுக்கு எப்படி மனம் இசைகிறது.*

*பொதுவாக வல்லரசுகள் மேலாண்மை செலுத்துகின்ற ஏழைநாடுகள், பெரும்பான்மை மேலாண்மை செலுத்தும் அதே நாட்டின் சிறுபான்மையினர், குறித்த மத மேலாண்மை செலுத்துகின்ற நாடுகளில், இந்த ஏழை நாடுகளின் மக்கள் அல்லது சிறுபான்மை இன (மொழி) மக்கள், சிறுபான்மை மதங்களைப் பின்பற்றுகின்ற மக்களின் இலக்கிய, வரலாற்று வரைவு முழுமை பெறுவதை மேலாண்மை செலுத்துவோர் விரும்புவதில்லை. எனவே குறித்த மக்களின் கருப்பொருட்களான தொன்மங்கள், இலக்கியங்கள், செவிவழிச் செய்திகள், மரபுகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை வரலாற்றுப்பாடுப் பொருள் என்ற வகையில் கொச்சைப்படுத்தச் சில தற்குறிகளையும் இணைத்துக் கொண்டு செயற்படுகின்றனர்.*

***மொழியியல்; ஒப்பியன் மொழியியலும், வரலாற்று மொழியியலும், எழுத்தும், இலக்கணமும் வாய்க்கப்பட்ட மொழிகளுக்குரியவை. அவையில்லாத பல மொழிகளுக்கு எழுத்தும் இலக்கணமும் அமைப்பதற்கு பயன்படுவது வண்ணனை மொழியியல்.***

எழுத்தும், இலக்கணமும் யாக்கப்பட்ட பின் அம்மொழியின் ஒப்பியன் மொழியியலையும் வரலாற்றையும் வரையறுக்க முடியும். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பார் தொல்காப்பியர். ஆனால் "எல்லாச் சொல்லும் இடுகுறியே" என்னும் நன்னூல் வாய்பாடு அன்று தமிழுக்கு ஏற்பட்ட நெருக்கடியைச் சுட்டுகின்றது. எனெனில் இது வண்ணனைக் மொழியியலின் அடிப்படைக் கோட்பாடாகும். இதுவே சோவித் நாட்டிலும், பிறநாடுகளின் எழுத்து, இலக்கணமில்ல மொழிகளுக்கு அதை வகுத்துத் தரப்பயன்படுத்தப்பட்டது. அதை தமிழுக்கும் பயன்படுத்த வேண்டுமென்கின்றனர் சிலர்.

இவற்றோடு இருத்தலியம், அமைப்பியம், இற்றையியம் (நவீனத்துவம்), பின் இற்றையியம் போன்ற புதிய கோட்பாடுகளும் இலக்கிய (வரலாற்று)க் கருப்பொருளாகத் தந்த தரவுகளின் பயன்பாட்டைத் தடுக்கும் முயற்ச்சிகளாயுள்ளன. இவற்றை புரியாமலும், புரிந்தும், மறைத்தும், பொத்தகக் கல்வி கற்றறிந்த பல அறிஞர்களும் தற்குறிகளாகப் பணத்திற்கும், பதவிக்கும், பட்டங்களுக்கும் தம்மை விலை பேசுகின்றனர். சிலர் என்ன செய்கிறார்கள் அந்த நொடிவரையுள்ள அறிவியல் செய்திகளை விரல் நுனியிலுள்ளதெனக்காட்டிக் கொள்ள, பெருமை பாராட்ட அக்கருத்துக்களை பரப்புவோராய் செயற்ப்படுகின்றனர்.

தமிழினத்தின் மீதும், தமிழ்மொழியின் மீதும், தமிழர் வரலாற்றின் மீதும் பற்றும், பரிவும் கொண்ட பலர் இவற்றைப் புரிந்து கொள்ளாமல் சிந்திக்க மறந்தவர்களாய் தம்மாலும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க முடியும் எனும் தன்னம்பிக்கையற்றவர்களாய் தற்போதுள்ள கருத்துகளில் தவறுகளுண்டென்று உணர்ந்தாலும் அதை எதிர்த்து தம் கருத்தை முன் வைப்பதற்கான சிந்தனைத்துணிவும், நெஞ்சுத்துணிவும் அற்று இருக்கின்றனர். எனவே இவர்கள் தமது கோட்பாட்டை நிலை நிறுத்த கையாளும் கருப்பொருட்களைப் பற்றி இவர்கள் கூறும் திறனாய்வுகளை கணக்கிலெடுக்க வேண்டியதில்லை.

வல்லரசு மேலாண்மை, இனமேலாண்மை, மதமேலாண்மை செலுத்துகின்ற அரசுகள் தாம் மேலாண்மை செலுத்துகிறவர்களின்

வரலாறு இலக்கியம் அற்றுப்போவதே தம் நலன்களுக்கு உகந்ததென செயற்படுகின்றனர். இவர்கள் எந்த ஆய்வை மேற்கொண்டாலும் அவை ஏழை நாட்டுமக்களுக்கு, சிறுபான்மை மக்களுக்கு (எந்த நாட்டினராயினும்) எந்தவொரு உளவியல் வலிமையையும் முன்வைக்க மாட்டார்களென்பது உறுதி. அவர்கள் வைக்கும் முடிவுகளை சரிபார்க்கவோ! போராடி மாற்றவோ பொருளியல், அறிவியல், அரசியல் வலிமை அற்றவர்களாகவே இந்த ஏழைநாடுகளும், சிறுபான்மை (மொழி, மத) மக்களும் உள்ளனர்.

இலங்கையின் உயர் பௌத்தமத நூலாகவும், பெரும்பான்மைச் சிங்களரின் நூலாகவும் கொள்ளப்படும் மாமரபு (மகா வம்சம்) நூல் இந்தியாவின் லாலா நாட்டிலிருந்து நாடுகடத்தப்பட்ட விசயனும் அவன் தோழர்களும் கி.மு.6 நூற்றாண்டுகளில் வந்திறங்கியதிலிருந்து 1000ஆண்டுகளின் பின் கி.பி.5ஆம்நூற்றாண்டில் சிங்களமென்ற ஒரு மொழியில்லாக் காலத்தில் பாளி மொழியில் பௌத்த மதத்தை நிலை நிறுத்த (இந்தியாவில் களையெடுக்கப்பட்டது போல் அழிந்து விடாமலிருக்க) மகாநாமதேரரால் வாய்வழிச் செய்தியாக இருந்தவற்றைத் தொகுத்து எழுதப்பட்ட நூல். இதில் விசயன் இலங்கையில் கரையொதுங்கிய போது இயக்கர், நாகர் என்ற இனங்கள் இருந்திருக்கிறது. இந்நாட்டு மக்கள் நாகரிகம் அடைந்திருந்தார்களென்பதைச் சுட்ட அவர்கள் ஆடை நூற்கும் தொழில் தெரிந்திருந்தார்களென்றும் கூறப்படுகிறது.

இவர்களின் தலைவியாயிருந்த குவேனி என்னும் பெண்ணை மணந்ததின் மூலம் இலங்கையின் தெற்குப் பகுதி அரசுரிமையை விசயன் பெற்றானாம். பின் இவளைக்கொன்று பாண்டிநாட்டு மன்னனுடன் தொடர்பு கொண்டு விசயனும் அவன் தோழர்களும் பாண்டிய நாட்டு இளவரசியையும், அந்நாட்டுத் தமிழச்சிகளையும் மணந்ததாக மாமரபு (மகாவம்சம்) கூறும். அத்தோடு கி.மு இரண்டாம் நூற்றாண்டில் இலங்கை முழுமையையும் நீதிநெறி தவறாது நடுநிலையில் செங்கோண்மை செலுத்திய **எல்லாளனை** அது குறிப்பிடுகிறது. இவனது 40ஆண்டுகள் ஆட்சியின் பின் துட்டகாமினி என்னும் தமிழ் சிற்றரசனொருவனின் மகன் (ஆய்வுக்குரியது) எல்லாளனை வெற்றி கொண்டு ஆட்சியைக் கைப்பற்றியதாகவும் கூறும்.

துட்டகாமினி சிறுவனாயிருந்தபோது அவன் படுக்கையில் கூனிக்குறுகிப்படுதிருப்பதைக் கண்ட தாய் அவனை நீட்டி நிமிர்ந்து படுக்குமாறு வேண்டிய போது ஒரு பக்கம் (தெற்கு) கடலும் மறுப்பக்கம் (வடக்கு) தமிழனும் நெருக்கும் போது தன்னால் எப்படி நீட்டி நிமிர்ந்து உறங்க முடியுமென வினவியதாக அறியக்கிடக்கிறது. இது இந்து சமயீகள் பௌத்தத்தை (இந்திய நிலப்பரப்பிலிருந்து ஒதுக்கியது போல) நெருக்கிறார்கள் எனவே அதிலிருந்து விடுபட வேண்டுமென்பதையேயாகும் (இதை ஒரு பௌத்த நாடாகக்க வேண்டுமென்பது மகாநாமதேரின் நோக்கமாய் இருந்திருக்கலாம்) எனலாம்.

காமினி வடக்கே தமிழரென்றது இந்துக்களையேயாகும். எனெனில் மாமரபு எழுதுவதற்கு முழுக்க முழுக்க உதவியவர்கள் காஞ்சிபுரத்துத் தமிழ் (பௌத்த)த் துறவியரே. துட்டகாமினி பாலி மொழியில் பேசினா? அல்லது மாகதி, சூரசேனியில் பேசினான அல்லது தமிழிற்றான் பேசினான என்பது கேள்விக்குறியே. ஏனெனில் அன்று சிங்களமென்று ஒரு மொழியிருக்கவில்லை என்பதை துல்லியமாகத் துலக்கும். ஆனால் இதை அரசியலாளர், மதகுருமார் தமிழனுக்கு எதிரான ஒரு அறை கூவலாக செயற்படுத்துகின்றனர்.

எனது ஆக்கங்கள், பட்டங்கள் (விருதுகள்) பதவிகள், பெருமைகளுக்காக யாக்கப்படவில்லை உண்மைகள் வெளிப் படுத்தப்பட வேண்டும், எம் இனம் தற்குறித்தன்மையிலிருந்து விடுபட வேண்டும், எமது இலக்கியத்தை, வரலாற்றை ஓரளவுக்கேனும் எல்லோரும் நம்ப, தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே நோக்கம். ஆய்வுப்பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் தமது "பௌத்தமும் தமிழும்" என்னும் நூலின் முன்னுரையில் குறிப்பிடுவது "ஆராய்ச்சி செய்வோர் உவத்தல், வெறுத்தல் இன்றி சான்றுகள் காட்டும் ஆராய்ச்சி முடிவுகளை உள்ளது உள்ளவாறு கூறுதல் வேண்டும். தமது கொள்கைக்கு முரண்பட்டதாக இருப்பினும் உண்மையையே நடுநின்று கூறினால் உலகம் சீறும் என்னும் அச்சத்தினால், உண்மையைக் கூறாமல் விடுவோர் தமக்கும், தம் இனத்திற்கும், நாட்டிற்கும் தீங்கிழைப்போர் ஆவர் என்பார். இக் கூற்றை அடிப்படையாகக் கொண்டே நூல்களை யாக்க

முயல்கின்றேன். இந்நூல், இந்நூலைப் படிப்போரின் கருத்துக்களுக்கு முரண்பட்டதாய் இருந்தால் என் மீது சீற்றம் கொள்ள வேண்டாம். எந்த மதத்தையாவது போற்ற வேண்டும் அல்லது குறை கூறவேண்டும் என்பதும் நோக்கமல்ல உண்மையை உணரவேண்டும் என்பதற்காகவே எழுதப்பட்டது. எனது நூல்கள் ஆய்வு சார்ந்து நிற்பதால் சிலவற்றைத் திரும்பத்திரும்பக் கூறுவதால் (கூறியது கூறல்) அதைக் குற்றமாகக் கொள்ளாமல் அது தெளிவு பற்றி கூறப்பட்டதாக ஏற்றுக்கொள்ளவும்.

மேற்குறித்த ஆய்வாளர்கள் (வரலாற்றுத் திரிப்பாளர்கள்) பற்றி ஆற அமரச்சிந்திக்கும் பொழுது அவர்களின் செயற்றப்பாடுகள் எப்படியிருக்கின்றதென்றால் தாங்கள் தங்கள் கண்ணால் காணாத, வேறெவர்களோ கூறிய கூற்றுக்களை வைத்துக் கொண்டு தங்கள் தாயையே ஒழுக்கங்கெட்டவள் என உறுதிப்படுத்த தர்க்கிப்பது (வாதிடுவது) போல் உள்ளது. எனெனில் அவள் எல்லோரோடும் "யாதுமூரே யாவரும் கேளிர்" என்றவாறு பழகுகின்றாளாம். அதனால் இவர்கள் பேரன் பாட்டனைப் பெற்றான் என்ற தர்க்கங்கள் (வாதங்கங்கள்) தான். இவர்கள் போன்றவர் காலத்துக் காலம் தோன்றத் தான் செய்வார்கள். இவர்கள் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. எனவே தமிழர்தம் புதையல்களாகிய சங்க இலக்கியங்களை, இலக்கணங்களைக், காப்பியங்களை, திருக்குறளை, ஒளவை நூல்களைக் கற்று அகவாழ்விலும் புறவாழ்விலும் மேலோங்கி பண்பு, ஒழுக்கம், உயிரிரக்கம், அறம், அறிவு, அன்பு நிறைந்தவர்களாய் மொழி(நா), இனம் காத்து பேரின்ப வாழ்வை யாவரும் பெற வாஞ்சித்து இந்நூலை ஆக்கியுள்ளேன். வாங்கிப் படித்து பயன்பெற வேண்டுகின்றேன்.

இலக்கிய இலக்கண மெய்யியல், வரலாற்று அறிவுகள் நாம் கற்கும் பள்ளி நூல்களில் மிகமிகக்குறைந்து காணப்படுகின்றது. இந்நூல்களை (தமிழர் மெய்யியல் கோட்பாடு, தமிழர் இலக்கிய இலக்கணம், உலக உயர் தனிச் செம்மொழி செந்தமிழ் போன்றன) மாணவர்கள் கற்றுத் தமிழின் அடிப்படைகளை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவும் இதன் மூலம் வளரும் தலைமுறையினர்

பண்பில், பணிவில், ஒழுக்கத்தில், மொழி, இன உணர்வில் மேம்பட்டு வளம்பெற வேண்டுமென்பதே அடியேனின் பெருவிருப்பாகும். இவற்றை பொத்தகக் கல்வியோடு மாணவர்களுக்கு ஊட்ட ஆசிரியச் சான்றோர் முன்வரவேண்டும். **இந்நூல்களை அடிப்படையாகக் கொண்டு ஆண்டுதோறும் தேர்வுகள் நடத்தவும், அவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கவும் மனம் கொண்டுள்ளேன்.** எனவே இதற்கு மாணவர்களோடு தொடர்புடைய கல்வி அமைச்சர்கள் (நடுவன், மாகாண), கல்விப் பணிப்பாளர்கள், பள்ளி முதல்வர்கள், ஆசிரியச் சான்றோர்களையும், மாணவர்களின் பெற்றோர்களையும், குமுகாயச் சான்றோர்களையும் ஒத்துழைப்பும், ஊக்கமும் தருமாறு வேண்டி நிற்கின்றேன்.

வாழ்கதமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக
தமிழர்பண்பாடு!!!

# தமிழர் இலக்கிய இலக்கணம்
## (ஓர் அறிமுகம்)

01) திருக்குறள் காட்டும் மறுமை அல்லது வீடுபேறு எது?
மாந்தனை மாந்தநேயன் ஆக்குவது, மாந்தனை வாலறிவனாக்குவது, மாந்தனைப் பகுத்தறிவாளன் ஆக்குவது, மாந்தனைத் தெய்வமாக்குவது, மாந்தனை இறைவனாக்குவது, இறவாப்புகழ்தந்து வானோன் ஆக்குவது போன்றவற்றையே வள்ளுவரின் மறுமை அல்லது வீடுபேறடைதல் ஆகும்.

02) திருக்குறள் அறைகூவல் முழக்கம் என்ன?
"யாகாவாராயினும் நாகாக்க"
"இனநலம் எல்லாப் புகழும் தரும்"

03) திருக்குறளின் செம்பொருள் கூறுக?
"என்பும் உரியர் பிறர்க்கு"
"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

04) திருவள்ளுவரின் ஏனைய பெயர்கள் என்ன?
செந்நாப் புலவர், செந்நாப் போதார், தெய்வத் திருவள்ளுவர், தெய்வப் புலவர், தேவர், நாயனார், பெருநாவலர், பொய்யா மொழியார்.

05) திருக்குறளின் மறு பெயர்கள்?
பொதுமறை, பொய்யாமொழி, தெய்வமாமறை, தமிழ் மறை, முதுநெறி, முதுமொழி, முப்பால், முப்பொருள், வள்ளுவர் வாய்மொழி, உயிரிரக்க வரையறைநூல், மாந்தநேய வரைவிலக்கணம், வாழ்வியல் வரைபு போன்றன.

06) திருவள்ளுவமாலைத் தொகுப்பின் பாடலாசிரயர்கள் யாவர்?
இறையனார், கபிலர், பரணர், நக்கீரர், அரசில் கிழார், நத்தத்தனார், மாங்குடி மருதனார், மதுரைத் தமிழ்நாகனார், இடைக்காடர், ஔவையார் போன்ற பலர்.

07) திருக்குறளுக்குப் புகழாரம் சூட்டும் உலகப்பெருஞ் சான்றோர் யாவர்?
காந்தியடிகள், இறாபாட் ஆல்பர்ட்டு சுவைட்சர், மைக்கேல், துறு, போப் ஐயர், றொபாட்டு கால்டுவெல், இலாசரசு, கிரௌல், அந்திரோனவ், பிரடெரிக் பின்காட், தால்சுதாய், இங்கர்சால்.

08) திருக்குறளுக்கு வாழ்வியல் வரைபு, உயிரிரக்க வரையறை நூல், மாந்தநேய வரைவிலக்கணம் போன்ற பெயர்களைச் சூட்டியவர் யார்?
குமரித்தமிழ்ப்பணிமன்ற நிறுவநர், நா.வை.குமரிவேந்தன்.

09) திருக்குறள் என்பதன் கருத்தென்ன?
குறள் யாப்பால் ஈற்டியில் எழுசீரகளைக் கொண்டு அமைந்ததால் குறள் என்றும், அதன் சிறப்பும், பெருமையும் கருதி "திரு" என்றும் அடைமொழியுடன் இணைத்து "திருக்குறள்" என்றனர்.

10) அறநூல்களுள் திருக்குறளுக்குள்ள ஒப்பிட முடியாச் சிறபென்ன?
அரசர் ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழியில் இயற்றப்பட்ட நூல். நாடு மொழி, இனம், சமயம், நிறம், சாதிய, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கொள்ளாமல் உலகு வாழ் அனைவர்க்காகவும் யாக்கப்பெற்ற தனிப்பெரும் சிறப்புடைய உலகப்பொது மெய்யியல் நூல்

11) திருக்குறளை முப்பால் நூல் என்கின்றனர் ஏன்? இது தமிழ்நெறிப்பட்டதா?
திருக்குறள் அகத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பிரிவாய் அமைந்துள்ளதால் முப்பால் எனப்பட்டது. தொல்காப்பியர் அறம் முதலாகிய மும் முதற் பொருள் "என்றும்" இன்பமும், பொருளும் அறமும் என்றும் முப்பால்
கூறியுள்ளார். புறநானூற்றில் "அறமும், பொருளும், இன்பமும்" என (புற.28) முதுகண்ணன் சாத்தனாரும், "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல" (புற.31) எனக் கோவூர்க்கிழாரும் கூறியமைவதால்

முப்பால் நெறியே தமிழர்நெறி என்பது வெள்ளிடை மலை.

12) அறம், பொருள், இன்பத்திற்கு திருவள்ளுவர் அறம், பொருள், காமம் என்கிறாரே இது சரியா?
தொல்காப்பியர் அறம் பொருள் இன்பம் என முறை செய்து இன்பம் எல்லா உயிர்க்கும் பொது என்றார். ஆனால் வள்ளுவர் அறிவுடை மாந்தர் இனத்திற்கு உயிர்கள் கொள்ளும் இன்பமாயில்லாம் அது என்றும் வளர்வதால், "நிலை பெறுவதாய், முறைமை உடையதாயிருந்ததால்" நிறை இன்பத்தைக் காமம் என்றார் அதாவது "கமகம" எனத் தொடர்ந்து வருவதால் கமம் காமம் ஆயிற்று இதைத் தொல்காப்பியர் "கமம் நிறைந்தியலும்" என்பார்.

13) திருவள்ளுவர் முதற் பாவலரா? அவருக்கேன் அப்பெயர் வழங்கப்பட்டது?
வெண்பாவில் முதற்பா, ஈரடி வெண்பாவாகிய குறட்பாவாகும். இவருக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாதிருந்ததால் இவரை முதற் பாவலர் என்றனர்.

14) இறைவணகத்தில் (முதலாம் அதிகாரம்) எக்கடவுளரின் பெயரும் குறிப்பிடப்படவில்லையே ஏன்?
திருக்குறள் யாக்கப் பெற்ற காலத்தில் (2000 ஆண்டு முன்) மதுநெறி வைதீகர் (இந்து), பௌத்தர், சமணர் ஆகிய மதத்தாருக்கிடையில் போட்டிகளும், பூசல்களும், அழிப்புக்களும் தலைவிரித்தாடின. முதல்வன், பகவன், இறைவன், எண்குணத்தான் (பகுத்தறிவாளன்), வாலறிவன் போன்ற வாழ் வாங்கு வாழ்ந்த உயிருள்ள மாந்தர்களையே முதன்மைப்படுத்திக் குறள் செய்தார். சமயம் - கடவுள் பெயரால் உலகம் இடர்படவோ, அழியவோ கூடாதென்னும், பரந்துபட்ட மாந்தநேய நோக்கினால் குறள்யாத்தார்.

15) ஒழுக்க நூல் அல்லது அறநூல் ஒன்றுக்கு வான் சிறப்புத் தேவைதானா?
வான் மழையாகிய ஒழுக்கு இல்லையானால் (வரட்சி)

மக்களுக்கு ஒழுக்கு (ஒழுக்கம்) ஏற்படாது. இதை "நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும் வானின் றமையாது ஒழுக்கு" என்பார்.

16) திருக்குறளின் அறத்துப்பால் அமைப்பு முறையை விளக்குக?
திருக்குறள் முப்பால் நூலாக அறம், பொருள், இன்பம் (காமம்) போன்ற தலைப்புக்களை தாங்கியுள்ளது. இறவாப்புகழாளர போற்றி (இறைவணக்கம்), மழையின் சிறப்பு, நித்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் போன்ற நான்கு அதிகாரங்களையும் குறளின் தொடக்கத்தில் வைத்துப் பாயிரம் ஆக்கப்பட்டுள்ளது. அறத்துப்பால் இல்லறம், துறவறம், ஊழியலாக பகுத்து அன்பையும், விருந்தோம்பலையும், ஒப்புரவறிதல், ஈகை போன்ற உயிரிரக்கக் கோட்பாட்டுச் சிந்தனைகளை முன்வைக்கின்றார். அடுத்து அருளுடைமை, மெய்யுணர்வு, அவாவின்மை (பற்றறுத்தல்), தவம் (நோன்பு), துறவு போன்றனவற்றை உயிரக்கத்தின் வெளிப்பாடாக விரித்துரைக்கின்றார். ஊழியலானது இயற்கையின் வெளிப்பாடென்பதையும் மாந்த வாழ்வில் அது மாந்தனுக்கு எவ்வளவு தூரம் முரண்பட்டு நிற்கிறதென்பதையும், இம்முரண்பாடு ஒரு நேர்ச்சியாக (தற்செயல்) மாந்த வாழ்வை எப்படி மாற்றிவிடும் என்பதையும் தெளிவுற விளக்குகிறது.

17) திருக்குறளின் பொருட்பாலின் அமைப்பு முறை எதை வெளிப்படுத்தும்?
இது அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் போன்றவற்றை நுண்மான் நுழை புலத்துடன் ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றார். இன்று மேற்கத்தைய (முதலாளிய), சமத்துவ (பொதுவுடைமை) மக்களாட்சி நடத்துகின்ற உலக நாடுகளின் அரசுகள் வள்ளுவர் இங்கு குறிப்பிட்டவையையே அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்துகின்றன என்பதை கண்கூடாகக் காண முடியும். இதிலிருந்து அரசுகள் தவறுக்கின்ற பொழுது மக்கள் புரட்ச்சி எப்படி வெடிக்கும் என்பதையும் மறைமுகமாகவும் நாகரிகமாகவும் எடுத்துரைக்கின்றார் (கு.555) கண்ணீர்,

*புரட்ச்சியின் வெளிப்பாடு, குறள். 1062 - "பரந்து கெடுக்" என்பதும் புரட்ச்சியின் வெளிப்பாடு - இவை மக்களைப் புரட்ச்சிக்குத் தூண்டும். கருத்துக்கள்)*

*18) திருக்குறளின் காமத்துப்பால் எப்படி அமைந்துள்ளது. விளக்கு? இங்கு செந்நாப்போதர் பண்பாட்டின், ஒழுக்கத்தின் மேன்மைகளை மிக நாகரிகமாகவும், நயம்படவும் மாந்த வாழ்வின் நுகர் பொருளாகிய இன்பத்தை அகவாழ்வில் களவு, கற்பு என்னும் களங்களில் வைத்து கலைநயத்தோடும், கற்பனைத்திறத்தோடும் ஒருவர், இருவர், மூவர் சேர்ந்து நடிக்கும் நாடகம் போல் அமைத்து மனதில் பதிய வைக்கின்றார்.*

*19) திருக்குறளுக்கு எவ்வகைத் தலைப்புக்களைக் கொடுக்கலாம்? இந்நூலுக்கு உலக வாழ்வியல் மெய்யியல் நூல், உயிரிரக்கக் கோட்பாட்டு நூல், அறஅறிவு இலக்கியம், தமிழர் பண்பாட்டு ஒழுக்கவியல் நூல், இது ஓர் உணர்ச்சிக் காப்பியம். பெண்ணிழிவை, மாந்த ஏற்றத் தாழ்வுளைக் களையும் நூல், பொதுவுடைமைநூல், இறாவாப்புகழாளர் போற்றி நூல், எனப் பல தலைப்புக்கள் இந்நூலுக்குப் பொருந்துவனவாகும்.*

*20) திருக்குறளின் முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்தெனக் கூறப்படுகிறதே இது பொருத்தமுடையதா? திருக்குறள் யாக்கப்பட்ட காலம், அன்றிருந்த சூழல், அன்று பின்பற்றப்பட்ட மரபுகள் என்பவற்றை உள்வாங்கியும், பொது நிலையிலும் ஆக்கப்பட்டதே இந்நூல். இந்நூல் வாழ்வாங்கு வாழும் மாந்தர்களை வைத்து அவனது மேம்பாடு நோக்கி, அவன் தனக்காகவும், (அகம்), பிறருக்காகவும் (புறம்) எப்படி வாழ வேண்டுமென்பதை ஆணித்தரமாகச்சுட்டி, அவனை ஒரு இறவாப்புகழாளனாக ஆக்க யாக்கப்பட்டது தான் இந்நூல். எனவே கடவுள் வாழ்த்து, இறை வணக்கம் என்னும் தலைப்புக்களை விட அவ்வதிகாரத்திற்கு "இறவாப்புகழாளர போற்றி" என தலைப்பிடுவது பொருத்தமாயிருக்கும்.*

21) வாழ்க்கைத்துணை என்பது பெண்ணை, மனைவியை இரண்டாம் இடத்தில் வைப்பது திருவள்ளுவருக்கு உடன் பாடா?
வாழ்க்கைத் துணை என்பதால் ஆணுக்கோ, பெண்ணுக்கோ சிறுமை, பெருமையென்றில்லை. இல் வாழ்க்கையின் முதல் இரண்டு குறள்களில் தலைவனே துணையென்பதை "இல் வாழ்வான் என்பான் துணை" யென்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறுவார். 1234 ஆம் குறளிலும் தலைவி தலைவனை துணையென்றே கூறுவார். இங்கு ஒருவர்க்கு ஒருவர் துணை என்பதையே வள்ளுவர் சுட்டுவார். அதுவே நிறைவான இல்லறம்.

22) திருவள்ளுவர் மக்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கவேண்டும் என்கின்றார்?
பட்டறிவும், உண்மையறிவும், நுண்ணறிவும், மெய்யறிவும் பெற்றவர்களாயும், பண்பும், ஒழுக்கமும் உள்ளவராயும், பழிப்புக்கு இடந்தராதவராகவும், உலகு வாழ் மக்கள், பிற உயிர்களுக்கும் நலமே செய்யும் மாந்தநேய - உயிரிரக்கப்பிறப்பாய் இருக்க வேண்டும் என்பதுமேயாகும்.

23) பெற்றவர் தம்மக்களிடமிருந்து எதிர்பார்ப்பவை யாது?
சான்றோர், அறிவோர் (உலகோர்) தம்பிள்ளைகளைப் அறவோர், பாராட்டுவதைச் செவியாரக்கேட்டு மகிழவே விரும்புவர். அதாவது "இவ்வளவு பண்புடைய மகவைப் பெற இவர் என்னதவம் செய்தனரோ" என்னும் கூற்றே.

24) திருவள்ளுவர் காட்டும் அன்பு விரிவாகும் வகை எது?
விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறை (பொறுமை) உடைமை, ஒப்புரவறிதல், ஈகை பெருக்கல் என்பவற்றின் வழி "அன்பின் வழியது உயர் நிலை"யென்றும், "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்றும் விரித்துரைப்பார்.

25) வள்ளுவர் காட்டும் அன்பின் தடைக்கற்கள்" சுட்டுக?
ஒழுக்கம்கெடுதல், பொறாமைப்படுதல், பிறர் பொருள் விரும்பல்,

புறங்கூறல், பயனில பேசுதல், இழி செயல்களைச் செய்ய அஞ்சாமை, என்பனவாகும்.

26) "எழுமையும் எழுபிறப்பும்" என்கிறாரே வள்ளுவர், அவர் மறுபிறப்பை ஏற்றுக்குறள் செய்தாரா?
வள்ளுவர் எழுமை என்றது ஒரு பிறப்பிலே மாந்த உடல் பெறும் ஏழு பருவ மாற்றங்களான மகவு, பாலன், காளை (குமரன்), இல்லறத்தான், முதுமை, பொல்லூன்றுபருவம், பாடைப் பருவம், ஒவ்வொருபருத்திலும் அவன் இறந்து பின் அடுத்த பருவம் எடுப்பதையும். ஏழுபிறப்பென்று கூறியது வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பொதுவாக ஒருவர் 80 - 90 ஆண்டுகள் வாழ்கின்றார் (பெண்களின் பூப்பு 11 - 13 ஆண்டுகள்) பெண்கள் 13 அகவையை அடையும் பொழுது திருமணமாகிவிடுகின்றனர். எனவே அவர்கள் உயிருடன் இருக்கும் போதே ஏழுதலைமுறைகளைக் காண முடிகிறது (தந்தை, மகன், பேரன், பூட்டன் என்றவாறாக) எனவே தான் எழுமையும் எழுப்பிறப்புமென்றது ஒருவரின் வாழ்நாளில் ஏற்படும் உடல் மாற்றத்தையும், அவரின் ஏழு வழித்தோன்றல்களையுமே ஆகும்.

27) வள்ளுவர் காட்டும் விண்ணோர் அல்லது விண்ணுலக வாழ்வு எது?
ஒருவன் தனது வாழும் காலத்திலே அடைகின்ற மனமாற்றம் அதாவது மாந்தநேயனாகுவது, வாலறிவனாகுவது, ஒன்றைப் பலவாறாகச் சிந்தித்து உண்மையறிவையும், மெய்யறிவையும், நுண்ணறிவையும், பட்டறிவையும் பெறுவதும், அழியும் உலகில் அழியாமல் வாழ (உடல் அழிந்தாலும்) அழியா உடலாகிய புகழுடலைப் பெறுவதுமே விண்ணுலக வாழ்வென்பார். "ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பது ஒன்று இல்" (கு 233). இதையே வள்ளுவரின் 24ஆம் அதிகாரமான புகழ் வெளிப்படுத்தும்.

28) வள்ளுவர் கூறும் ஊழ் பற்றி விளக்கு?
உலகத்து இயற்கையே ஊழ் என்பார் வள்ளுவர். மழை,

வெய்யில், காற்றுத் தீ, வெளி, நிலம் ஆகியன உலகமக்கள் அனைவருக்கும் பொதுவான இயற்கைச் சூழல்."ஆக்கமும் கேடும்" காலத்துக்குக் காலம் விளைவிப்பவை; நிலநடுக்கம், புயல், ஆழிப்பேரலை வெள்ளப்பெருக்கு, சுழல் காற்று (சூறாவளி) போன்றன எல்லாம் இயற்கை ஆகிய ஊழே. இல்லறத்தார், துறவறத்தார் (பற்றறுத் தோர்) பொதுமக்கள், ஆள்வோர் யாவரும் அறிந்து கொண்டு வெல்ல வேண்டியவை. ஆனால் இவற்றை வெல்ல முடியாதவாறு ஊழ் எனும் இயற்கையும் செயல் செய்யும்.

29) திருக்குறள் செயல், செயல் என்று கூறுகிறதே! அது ஒரு செயல் நூலா?

திருக்குறள் கற்பது மனமாசுகளை நீக்கி, அதைப் பின்பற்றி நிற்கவேண்டும் என்பதற்கேயாகும். இது வாழும் நெறிகாட்ட யாக்கப்பெற்ற நூல். எனவே தான் தெரிந்து செயல் வகை, வலியறிதல், காலம் அறிதல், இடன் அறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், ஆள் வினையுடைமை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல் வகை போன்ற பல அதிகாரங்களை வைத்தார். (அதிகாரங்கள்: 47, 48, 49, 50, 51, 52, 62, 66, 67, 68)

30) இறையாண்மைக்கு இன்றியமையாதவை எவை?

படை, குடி, கூழ் (பொருள்), அமைச்சு, நட்பு, அரண், ஒற்றும் தூதும் என்பனவாகும்.

31) முப்பாலும் தொடர்புபட்டவையா? அல்லது அவற்றிற்கிடையில் முரண்பாடுகள், ஒவ்வாமைகள் உண்டா?

எப்பாலில் எவ்வதிகாரமாயிருந்தாலும் அவை மக்களாய் பிறந்த அனைவர்க்குமே பொதுவானது. ஆனாலும் அவரவரக்குக் கட்டாயமானதாகவும் உள்ளது. கல்வி, கேள்வி, அறிவுடையமை, நட்பு, சான்றாண்மை, பண்புடைமை, பெருமை, புகழ், ஒப்புரவு, ஈகை, உழவு என்பவற்றை பொருட்பாலில் வைத்ததால் மற்றைய பாலாருக்கு ஏற்புடையதல்லாததாகிவிடுமா? எல்லாம் முப்பாலுக்கும் உரியதே.

*32) திருவள்ளுவர் கூறும் கண்ணோட்டம் என்பது யாது?*
*தண்டிக்கப்படவேண்டிய தவறு செய்தவரையும் பொறுத்து அவர் உணர்ந்து திருந்தும் வகையில் ஈவு இரக்கம் காட்டுவதே கண்ணேட்டமாகும். உலக நலனே இக்கண்ணோட்டத்திற்றான் உள்ளது. பாடற்குப் பண் போன்று கண்ணுக்குக் கண்ணோட்டமே சிறந்தது என்பார் வள்ளுவனார்.*

*33) நட்புப்பற்றி திருக்குறள் கூறுவதென்ன?*
*நட்பினால் ஆக்கமும் அழிவும், மேன்மையும் கீழ்மையும் உண்டாதலே இயல்பு. எனவே தான் வள்ளுவனார் நட்பு (79), நட்பாராய்தல் (80), பழைமை (81), தீ நட்பு (82), கூடா நட்பு (83), பெரியாரைத் துணை கோடல் (45), சிற்றினம் சேரமை (46) போன்ற பல அதிகாரங்கள் வகுத்து நட்பினை வெளிப்படுத்துவார். நல்ல நட்பு வளர்பிறை போன்றதென்றும், பழகப்பழக நூல் நயம் போல் சிறக்குமென்றும், உடை இழந்தவன் கை போல இடுக்கண்களையும்மென்றும் கூறுவார். மகிழ்வதற்கு மட்டுமன்றி இடித்துரைப்பதற்கும் துணிவாய் நிற்குமென்றும் கூறுவார்.*

*34) உடைமை என்பது யாது?*
*உடைமையென்பது ஒருவரின் பண்பொழுக்கம் தவறாத் தன்மையாகும். உடைமை மானம் கருதி அதை நெகிழவிடாமல் கட்டிக்காப்பது போல் கட்டிக்காக்கப் படவேண்டியது உடைமையாகும்.*

*35) வள்ளுவர் காட்டும் உடைமைகள் எவை?*
*அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அருளுடைமை ஆகியனவற்றை அறத்துப்பாலிலும் அறிவுடைமை, ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, நாணுடைமையை பொருட்பாலிலுமாக பத்து உடைமைகளைச் சுட்டுவார்.*

36) *பொருளுடைமை என்னும் ஓர் அதிகாரத்தை ஏன் வள்ளுவர் வைக்கவில்லை?*
அற்பர்கள், கஞ்சர்களிடம் தான் பொருள் சேர்ந்து குவிகின்றது. எனவே அது ஆக்கத்தைத் தரமாட்டாது பொருளென்பது குருதியோட்டம் போல் பரவவேண்டும். அதுதான் பொருளுக்கும்,பொருளுடையானுக்கும் பயனும், சிறப்பும், புகழும் தரும். பொருள் செயல் வகையெனும் ஓர் அதிகாரம் (76) வைத்து செய்கபொருளை என ஏவியவரும் அவர். பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்றும், பொருளுடன் புணர்ந்த பக்கம் (இல்வாழ்வு)," பொருளென்பது
பொய்யா விளக்கமெனவும் கூறுபவர் அவர். எனவே பொது நலமாம் பொருள் ஓரிடத்தில் தங்கிவிடக் கூடாதென்பதால் பொருளுடைமை என்னும் தலைப்பைத் தவிர்த்தார்.

37) *வள்ளுவர் வெளிப்படுத்தும் ஆமைகள் எவை? இவை ஆமைகள் தானா?*
சொற்பொழிவாளர்கள் தாம் சுவையாகச் சொல்வதாக நினைத்துக் கொண்டு "ஆமை" என்றும் ஓர் உயிரியைப் பயன்படுத்துகின்றனர். அந்த உயிரியை அடக்கமுடைமை என்றும் அதிகாரத்தில் வள்ளுவனார் "ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்கலாற்றின் எழுமையும் ஏமாப்புடைத்து" (கு.126) என்பார். ஆனால் ஆமைகள்; கள்ளாமை, கொல்லாமை, நிலையில்லாமை என்பவற்றையே சுட்டுவன. எனவே சொல்லிறுதி ஆமையென ஒலிக்கிறதே தவிர அவை உயரி ஆமையை அல்லது அதன் செயலைக் குறிப்பதாகாது.

38) *வள்ளுவரின் காமத்துப்பால் வெளிப்படுத்துவதென்ன?*
முன்னோர் வைப்பு முறையில் தொல்காப்பியம் இன்பம், பொருள், அறமென்றதை (அகவாழ்வு) வள்ளுவனார் அறம், பெரும், காமம் (புறவாழ்வு) என மூன்றுபாலாக்கிக் கடைசியல் காமத்துப்பாலை (மூன்றாம் பால்) வைத்தார். காமமாகிய அகப்பொருளின்; முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றுள் இறுதியான உரிப்பொருள் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல் ஊடல் ஆகிய ஒவ்வொன்றிற்கும் ஐந்து

அதிகாரங்களாக ஐந்திணைகளுக்கும் ஏற்ப 25 அதிகாரங்களை யாத்தார் வள்ளுவனார். காமத்துப்பாலை இவ்வளவு தூ ய்மையாகவும், நயமாகவும், கூறிய ஒரேயொரு உலகியல் நூ ல் திருக்குறள். எதுநோயை ஆக்குமோ, அதுவே நோயைத் தீர்க்கும் மருந்தென் ஒல்லியல் மருத்துவ (ஓமியோ மருத்துவம்) அடிப்படையென்பது காமத்துப்பாலின் சிறப்பாகும்.

40) தொல்காப்பியக் கல்வியால் என்ன பயன்?
தமிழர், தமிழ் மொழி பற்றிய வாழ்வியலின் உயரிய, விரிவான செய்திகளையும் தொல் தமிழர் தம் வழித்தோன்றல்களுக்குத் தேனீக்களைப் போல் சேர்த்து வைத்துள்ளதேட்டத்தின் அருமை பெருமைகளையும், ஆற்றுக்குக் கரைகள் போன்று அமைந்து தொன்று தொட்டு இன்றுவரை உயிராக உடலாக மலை மேல் இட்ட சுடர் போல் தொடர்வது தொல்காப்பியமே என்பதில் பெருமையும் பெருமகிழ்வும் கொள்ளலாம்.

41) தொல்காப்பியம் தனது பண்டு நிலையில் அதாவது மரபு நூலாய், முழுமை பெற்றதாயுள்ளதா?
தமிழனுக்குக்கிடைத்துள்ள அரும்பெரும் செல்வக்களஞ்சியம் தொல்காப்பியம் தான். இன்றைய ஆய்வுகளின்படி கிட்டத்தட்ட 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழன்கையில் கிடைக்கப்பெற்ற பல்துறைகளை உள்யடக்கிய தமிழியலை பாதுக்காக்கும் பேர் அரண். அதுவும் நீண்டநெடுங்கால எல்லையில் பலவகை முரண்பட்ட மாறுபட்ட, எதிர்ப்பட்ட மொழியியல், இனவியல் மதவியல், கருத்தியல், பண்பாட்டியல், அரசியல், அகப்புறத்தாக்கங்கள் என்பவற்றுள் நீந்திக்கடந்து கிடைத்திருக்கிறது. ஆனால் அதில் திரிப்புகள், முறிவுகள், சேர்ப்புகள், புனைவுகள் புகுத்தல்கள் நிகழ்ந்திருக்க முடியாதெனக் கொள்ள முடியாது. இந்நூலுக்கு உரைதோன்றுவதற்கு முன்னரே தொல்காப்பிய மரபியலுக்கு ஒவ்வாத (பொருந்தா) செய்திகள் சேர்க்கப்பட்டு விட்டதால் உரைகண்டவர்கள் முழுவதற்கும் உரையெழுதிவிட்டனர். குறிப்பாக அந்தணர், அரசர் வைசிகர், வேளாளர் பற்றிய வருணப் (சாதிய) பிரிப்புச் செய்திகள் மரபியலோடு ஒவ்வாதவை பிறக்கும் போது எவரும் கோல், வேல், சமன்கோல் (தராசு),

ஏர் (கலப்பை) ஆகியவற்றோடு பிறப்பதில்லை. இது போன்று இன்னும் பல இடைச்செருகல்கள் உண்டென்கின்றனர் அறிஞர்கள்.

42) தொல்காப்பியத்தின் முன்னும் நூல்கள் இருந்தனவா?
அகத்தியம், ஐந்திரம் போன்ற பல நூல்கள் இருந்திருக்கின்றன என்பதற்கு சான்றுகள் உண்டு. என்ப! என்மார்புலவர்! நுனித்தகு புலவர் கூறிய................ என்றவாறாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவதால் இது தமிழரின் முதல் நூலல்ல, வழி நூ லே ஆயினும் முதல் நூலெனக் குறிக்கப்பட்டவை அழித்தொழிக்கப்பட்டு விட்டன என்பதேயாகும். இவற்றின் அடி முடிகாண விளைவது இயலாத வொன்று நாடும், நகரமும், ஊரும், உலகமும் மேடிட்டு மண்மூடியும், கடல் பெருகி நீரில் மூழ்கியும் போகும் போது இவற்றிற்கெல்லாம் தப்பிப்பிழைத்து வருதல் கண்டு தேர்வதே அறிவாகும்.

43) தொல்காப்பியம் என்னும் நூற்பெயர் நமக்கு வெளிப்படுத்துவதென்ன?
அதாவது தமிழனுக்குக்கிடைக்காமல் போய்விட்ட இலக்கிய இலக்கண நூல்களின் தொகுப்பாகக் கிடைத்துள்ளதும், தொல் மொழி மரபு நிலையையும், வாழ்வியல் மரபு நிலையையும் வெளிப்படுத்தி அதை கட்டிக்காக்கும் நூல் தான் தொல் + காப்பு + இயம் = தொல்மரபைக் காப்பது.

44) பாயிரம் என்றால் என்ன?
இன்றைய நாட்களின் முகவுரை, அணிந்துரை போன்றது தான் பாயிரம். இது நூல், நூலாசிரியர், நூல் கூறும் பொருளை நூ ல் கற்பவர் அறிந்து கொள்ள எழுதப்படுவது. இவ்வழக்கு கி.பி 9ஆம் நூற்றாண்டில் தான் தொடக்கப்பட்டதென்பார் பலர்.

45) தெல்காப்பியப் பாயிரம் படியவர் யார்?
பனம்பாரனார். இவர் பனம்பாரம் என்னும் நூலை இயற்றியவராகவும் கருதப்படுகின்றார். தொல்காப்பியம் எழுத்து சொல், பொருள் ஆகிய மூன்று பெரும் அதிகரங்களாக

மக்கள் வாழ்க்கையையும், நூல் வழக்கையும் செம்மையாக அறிந்து கொள்ள நூல் செய்து "நிலந்தரு திருவில் பாண்டியன் அரசவையில் "ஐந்திரம்" நிறைந்த தொல்காப்பியரால் அதங்கோட்டாசான் என்ற தமிழ் ஆர்வலர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது.

46) தொல்காப்பியர் கால தமிழ் கூறு நல்லுலகம் எனக் கூறப்பட்ட பகுதி எது?
வடக்கே வேங்கட மலையும், தெற்கே குமரிமலையும் மேற்குக் கிழக்கு கடல்களை எல்லைகளாகவும் தமிழ் கூறு நல்லுலகம் கொண்டு இருந்தது.

47) தொல்காப்பியப் பெரும் பிரிவுகள் எவை? விளக்குக?
தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்ட, அதன் உட்பிரிவுகளுக்கு இயலெனப் பெயரிட்டு ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒன்பது இயல்களாக 27 இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

48) இயல்களை விரித்துக் கூறுக?
எழுத்ததிகாரம், நூல் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரம், என்பனவும், சொல்லதிகாரம்; கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபியல் பெயரியல், வினை இயல், இடையியல், உரி இயல், எச்ச இயல் என்பனவும், பொருளதிகாரம்; அகத்திணை இயல், புறத்திணை இயல், களவு இயல், கற்பு இயல், பொருள் இயல், மெய்ப்பாட்டியல், உவமை இயல், செய்யுள் இயல், மரபு இயல் என்பனவுமாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

49) தமிழ் இலக்கணத்திற்கும், மற்றைய மொழி இலக்கணங்களுக்கும் இடையில் வேறுபாடு உண்டா?
தமிழிலக்கணம், எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் என முப்பெரும் பிரிவாக உள்ளது.

ஆனால் மற்றைய மொழி இலக்கணங்கள் எழுத்து சொல் இலக்கணங்களை மட்டுமே கொண்டிருக்கிறது.

50) *பொருளிலக்கணச் சிறப்பைக் கூறுக?*
*இது வாழ்வியல் இலக்கணமாகும். மக்கள் வாழ்வில் வீட்டுக்கடமைகளாகிய குடும்ப வாழ்வு பற்றியவையும், நாட்டுக் கடமையெனப்பட்ட பொது நலக்கடமை பற்றியனவுமாக இரண்டு வகைக்கடமைகள் உண்டு.*

51) *தொல்காப்பியம் வெளிப்படுத்தும் மரபுகள் எவை?*
*தொல்காப்பிய இயல்களில் நூல்மரபு, மொழிமரபு, தொகை மரபு, விளி மரபு, மரபியல் என வெளிப்படையாகவே இவ்வியல் பெயர்கள் உள்ளன. மேலும் "என்ப" என் மார்புலவர் போன்ற கூற்றுக்களை சுட்டுவதாலும் இது விளங்கும்.*

52) *மரபு என்பதன் விளக்கம் தருக?*
*ஒரு விதை நிலத்திலிடப்பட்டு, நீர் ஊற்றி, வெப்பம் காற்று ஆகிய இயற்கைப் பண்புகளால் முளைத்துக்கிளைத்து மரமாகின்றது. பின் பூத்துக் காய்த்துக் கனிந்து விதையாகிறது. இச்சூழற்ச்சி மாறாது தொடர்நிலையாய் வருவதால் இதுவே "மரபு" எனச்சுட்டப்படும். அதுபோன்றே மரம், செடி, கொடி, கிழங்கு முதலியனவும் மக்களும் மரபு வழக்குடன் உட்படுகின்றது. "மரபு நிலை திரியின் (மாறின்) பிறிது பிறிதாகும்" என்றும் "மாற்றருஞ் சிறப்பின் மரபு" என்றும் தொல்காப்பியர் கூறுவார் எனவே மரபு காத்தலே முதன்மையானது. தவறின் மொழி, பண்பாடு, கலை என்பன சிதைந்து சீரழிந்து போகும்.*

53) *மரபு அழியாதிருக்கத் தொல்காப்பியர் கையாண்ட வழியென்ன?*
*ஒரு மரத்தை "ஆல்" என்று கூறும் பொழுது மற்றொருவர் அதை வேல் என்றால் எது மரபு? எது அழிப்பு? என்பதை எப்படி இனங்காண முடியும். மரபு நிலை கைக்கொள்ளப்பட்டால் மாத்திரமே மக்கள் வழக்கிலும் நூல் வழக்கிலும் மொழி சிதைக்கப்படாமல், சீரழியாமல் காக்கப்படும். எனவே தான் நூ ல் மரபு எனத்தொடங்கி மரபியல் எனத் தம் நூலை முடித்தார்*

தொல்காப்பியர்.

54) தொல்காப்பியம் கூறும் நூல் மரபை விளக்கு?
எழுத்துக்கள் ; உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் எனவும் உயிரெழுத்தைக் குறில், நெடிலென்றும் மெய்யெழுத்தை ; வல்லினம், மெல்லினம், இடையினம் என்றும் நெட்டெழுத்துக்கள் நீண்டு உயிர் அளபொடை எனவும் குற்றெழுத்துக்கள் குறைந்து குற்றியலுகரம், குற்றியலிகரம் எனவும் ஒற்றெழுத்து இன்னொரு ஒற்றெழுத்துப் பெற்று ஒற்றளபெடை ஆவதாயும் குறிப்பிடுவார். சுட்டெழுத்துக்களையும், (அ, இ, உ), வினா (ஆ, ஏ, ஓ) எழுத்து எவையென்பதையயும், கைநொடிக்கும், கண்ணிமைக்கும் பொழுதையும் ஒரு மாத்திரை என்றும் கூறுவார். சொல்லின் முதலில், இடையில், இறுதியில் நிற்கும் எழுத்துக்கள் எவையெவை எனவும் வெளிப்படுத்துகின்றார். இவையெல்லாவற்றையும் அறிவதே நூல் மரபு (இலக்கணம்) ஆகும்.

55) பிறப்பு இயல் என்றால் என்ன?
எழுத்துக்கள் ஒலிவடிவாக வெளிப்படும் முறை பிறப்பு இயல் எனப்படும். அ, ஆ வாயைத் திறந்த அளவில் வெளிப்படும் ஒலி இ, ஈ, எ, ஏ, ஐ மேற்குறித்த முறையிலிருந்து மாறி ஒலிக்கும். உ, ஊ, ஒ, ஓ, ஔ வேறொருவகையில் ஒலிக்கும்.

56) தொகை மரபை விளக்கு?
நிலைமொழி; வரு மொழி மரபுகளைத் தொகுத்துக் கூறுவது "தொகை மரபு" ஆகும். வேற்றுமைத் தொகை, அவ்வழித்தொகை எனத் தொகை இருவகைப்படும். வேற்றுமை உருபு மறைந்து வருவது வேற்றுமைத் தொகை. வேற்றுமை எட்டு வகையாகும். முதலும், எட்டாம் வேற்றுமையும் மரபு எழுவாயும், விளிவேற்றுமையுமாகும். ஐ, ஆல், கு, இன், அது, கண் ஏனவையாகும்.

57) புள்ளி மயங்கியலை விளக்கு?
புள்ளி எழுத்தாகிய மெய்யெழுத்து நிலைமொழி இறுதியில் நிற்க, அதன் முன் வருமொழி முதல் எழுத்துக்கலக்கும்

முறையைக் கூறுவது புள்ளி மயங்கியல் மண்+ குடம் = மட்குடம், மரம் + பெட்டி = மரப்பெட்டி, குளம் + கரை = குளக்கரை, அகம் + கை = அங்கை, நும் + கண் = நுங்கண் என்றவாறாய் வரும்.

58) குற்றியலுகரம் பற்றி?
இறுதி எழுத்து கு, சு, டு, து, பு, று எனும் எழுத்துக்களில் ஒன்றாயிருக்கும் (எடு, நாடு, மார்பு, அஃது, சுக்கு, நஞ்சு)

59) குற்றியலிகரம் பற்றி?
யகரம் வருமொழி முதலாக இருந்தால் நிலைமொழி உகரம் இகரமாகத்திரியும். இதுவும் குற்றியலுகரம் போல அரை மாத்திரையாகும். (எடு; நாகு + யாது = நாகியாது, வயிறு + யாது = வயிறியாது)

60) சொல் என்பதை விளக்கு?
பொருந்திய பொருளைத் தருவது சொல்லாகும். தமிழில் பொருள் தராத சொல் எதுவுமில்லையென்பர் தொல்லறிஞர் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பது சொல்லின் வரையான சொல்லிற்கு நெல் என்னும் கருத்தும் உண்டு.

61) சொல்லதிகாரத்தின் சிறப்பென்ன?
சொல், சொல்வகை, சொல்லாக்க வகை போன்றனவற்றை விரித்துரைக்கும் பகுதி சொல்லதிகாரமாகும். இது எழுத்துக்கும் பொருளுக்கும் இடைநின்றதாலும் அவற்றின் அடி மணையாகவும் இருந்ததாலும் இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் தெய்வச்சிலையார் போன்றோரின் உள்ளங்கவர்ந்து உரைக்காணச் செய்ததாகும்.

62) கிளவியாக்கம் பற்றி விரித்துரைக்க?
கிளவியென்றால் சொல், இதற்கு இரட்டைக்கிளவி சான்றாகும். (எடு; மளமள, கடகட, சலசல போன்றன) சொல்லின் குறைகள் களைந்து ஆக்குதல் கிளவியாக்கமாகும். இதில் உயர்திணை வழு, கால வழு, வினா வழு, விடை வழு, மரபு வழு,

வழுநீக்கம் ஆகிய பற்றி கிளவியாக்க இயலில் விரிவாகவும், தெளிவாகவும் அறிய முடியும்.

63) வேற்றுமை இயல் பற்றிக் கூறுக?

முதல் எழுவேற்றுமைகளின் இலக்கணத்தை வேற்றுமை இயல் வெளிப்படுத்தும். முதலாம் வேற்றுமை எழுவாய் அல்லது பெயர்வேற்றுமையென்றும் குறிக்கப்படும். ஐ, ஆல், கு, இல், அது, கண் என்பன ஏனையையாகும். இது பெயரின் பொருளை வேறுபடுத்துவதால் வேற்றுமை எனப்பட்டது. எட்டாம் வேற்றுமையாகிய விளிவேற்றுமையை "விளிமரபு" எனத் தனி இயலாக விளங்க்கியுள்ளார். ஒரு வேற்றுமை உருபு வர வேண்டிய இடத்தில் வேறொரு வேற்றுமை உருபு வந்தாலும் உரிய வேற்றுமைப் பொருளைக் கொள்ள வேண்டும் என்பது உருபு மயக்கம் அல்லது வேற்றுமை மயங்கியல் எனப்படும். "யாதான் உருபிற் கூறிற்றாயினும் பொருள் சொல்மருங்கில் வேற்றுமை சாரும். ஆகுபெயர், அன்மொழித்தொகை பற்றியும் இவ்வியலில் கூறுவார்.

64) விளிபற்றி விளக்குக?

விளித்தல் என்பது கூப்பிடுவது, அழைப்பது எனப் பொருள் படும். விளி ஏற்கும் பெயர், விளி ஏவாப்பெயர், விளி ஏற்கும் போது ஈறு திரிதல், இறுதிக்கு அடுத்த எழுத்து நீளல், வேறெழுத்து வருதல், எவ்வேறுபாடும் இல்லாது இயல்பாதல் என்பவற்றால் விளிமரபு இயம்பப்பட்டுள்ளது. எடு ; அண்ணன் - அண்ணா ; தங்கை தங்காய், அம்மை - அம்மா! அம்மாவோ! அம்ம! ; தம்பி - தம்பி

65) பெயர் என்பதை விளக்கு.

பெயர்தல் அல்லது மாறுதல் அதாவது தளிர், துளிர், கொழுந்து, இலை, பழுப்பு, சருகு என்றும். பிள்ளை, குழந்தை, குமரன், காளை, வாலிபன், முதியன், பெருமுதியன் என ஒன்று வெவ்வேறு பெயர்களை பெற்றமையைக் காணலாம். அடிப்படையில் பெயர்ச்சொல், வினைச் சொல் என இரண்டு எனும் தொல்காப்பியர் இவற்றைச் சார்ந்தனவாக இடைச்சொல்,

உரிச் சொற்களைச் சொல்வார். அவன், அவள், அது என மூன்று சுட்டுப்பெயர்களால் அத்தனையும் குறித்தார் மெய்கண்டார் (சிவஞான போதம்)

66) வினை என்பதை விரிக்க?
பொருள் தன் நிலையிலிருந்து பெயர்தல் அல்லது புடைப்பெயர்ச்சி வினையாகும். வருதல், நிற்றல், கேட்டல், செல்லல் என்பவை ஒருவனின் செயல் மாற்றம். வினை என்பது தொழில், வேற்றுமை உருபு கொள்ளாது காலம் காட்டும். பலவகை வினவுதலுக்கும் காரணமாயிருந்து விளங்கச் செய்வது வினையாகும். அவள் எழுதினாள் உயர் திணை, பெண்பால், படர்க்கை, ஒருமைத் தெரிநிலை, வினை முற்று என இலக்கணம் சொல்ல ஏதுவானது. முக்காலம் (இறந்த, நிகழ், எதிர்வு) இருவினை (தெரிநிலை, குறிப்பு) ஈரெச்சம் (பெயரெச்சம், வினை எச்சம்) தன்வினை, படர்க்கை வினை, தன்மை ஒருமை, தன்மை பன்மை ஆகியவற்றின் ஈறு அ∴றினைக்குரிய ஈறு, இருதிணைகளுக்கும் பொதுவானவை, வினை எச்ச வாய்ப்பாடுகள் இதில் விளக்கப்படுகின்றன.

67) உரியியலை விளக்கு.
உரி என்பது தோலைக்குறிக்கும் ஓரறிவு உயிரி முதல் ஆறறிவு உயிரிவரை தோல் உண்டு. இவ்வுயிரி தோன்றி வளர மூலமாயிருப்பது தோல். தொல் - தோல். இதுபோல் சொற்களின் அடிச்சொல்லாக அல்லது வேராக பெரிதும் செய்யுள் வழக்கிற்கு உரியதாய் இருப்பதால் உரி எனப்பட்டது. மக்கள் வழக்கிலும் இது வழங்கும் தவப்பிஞ்சு, கூர்நுனை, தவ, கூர் என்பவை உரிச்சொற்கள், அருஞ்சொற்பொருள் விளக்கும் ஒரு நூல் "உரிச்சொல் நிகண்டு" என்பது.

68) இடையியல் என்பது என்ன?
"இடையெனப்படுப பெயரொடும் வினையொடும் நடை பெற்றியலும், தமக்கியல்பு இலவே" என்பார் தொல்காப்பியர், தலைமைப் பொருள் தன்மை தனக்கென இல்லாமையாலும், பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடைப்பட்டதாயும்,

முன்னும் பின்னும் வரலொடு இடை வருதல் மிகுதியாலும் இடையியலெனப்பட்டது. மன், தில் கொள், உம், ஓ, எ, என, என்று, மற்று, அம்ம, சொல், எல், மா முதலிய இடைச்சொற்களின் பொருளையும் வரும் வகையையும் குறிப்பிடுவார்.

69) எச்சவியல் என்பது எதனை?
மேற்குறித்த எட்டு இயல்களிலும் சொல்லப்படாத மேலும் சொல்ல வேண்டும் வகையாக உள்ளவற்றைச் சொல்வது எச்ச இயலாகும். எச்சம் - மீதமாய் உள்ளது. விகாரம், பொருள் கோள், அறுவகைத் தொகை, முற்று எச்சம், வழுக்காத்தல், குறைவகை, செய்யுட் சொல் போன்றவற்றை விரிவாகக் கூறுகிறார்.

70) பொருளதிகாரம் என்றால் என்ன?
அகப்பொருள், புறப்பொருள் ஆகியவற்றையும், நூற்கு வேண்டியதுமான மெய்பாடு, உவமை, செய்யுள், மரபு பற்றி விளம்புவதால் பொருளதிகாரமெனப்பட்டது. அகம் என்பது மனத்தையும், மன உணர்வையும், மனை வாழ்வான இல்லற வாழ்வையும் குறிக்கும். அகத்திணை இயல் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் போன்றன மக்கள் நல்வாழ்வுக்கு அடிப்படையானவை, இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய், ஒன்றில் ஒன்று சிறந்ததாயுள்ளதால் தனி வாழ்வும், கூட்டுவாழ்வும், உலகப்பொது வாழ்வும் சிறப்புறும் என உணரவைக்கின்றார் தொல்காப்பியர். அகவாழ்வில் எல்லாம் செய்தபின் மனைவி மக்களுடன் சேர்ந்து மக்களோடும், சுற்றத்தோடும், அவர்க்கு வேண்டியன ஆற்றி இல்லறத்துறவராக வேண்டும் என்றும் கூறுவார். இதை விரித்துரைப்பதே பொருளதிகார "அகத்திணை இயல்" ஆகும்.

71) முதற்பொருள் என்பதை விளக்கு?
மாந்தரால் செய்யப்படாததாய், இயற்கையாய் அமைந்து இருப்பது முதற்பொருள் ஆகும். இது நிலம், பொழுது அல்லது இடம், காலம் என்னும் இரண்டாகும். இடத்தால் காலமும், காலத்தால் இடமும் தொடர்புடையவை, இடத்தால் காலமும் காலத்தால்

இடமும் தீர்மானிக்கப்படுபவை. ஐன்சுதீன் கோட்பாடும் இதுவே. நிலம் ஐந்து வகைப்படும் குறிஞ்சி (மலை), பாலை, முல்லை (காடு), மருதம் (வயல்), நெய்தல் (கடல்) எனக் கொண்டனர் பழந்தமிழர். சிலர் பாலையை குறிஞ்சி முல்லையின் வரட்சிக் கால மாற்ற நிலையென்கின்றனர். ஆனால் அது பொருளதிகார கருப்பொருளுக்கு முரணானதாகவே தோன்றும். இது தமிழ் நாட்டின் நில அமைப்பை அடிப்படையாகக் கொண்ட கருத்தென்றே கொள்ளவேண்டும்.

உலக நாகரிக வளர்ச்சியின் திறவுகோல் பாலை நிலமே. நைல்நதி நாகரிகம், மொசப்பெத்தேமிய நாகரிகம், சிந்துவெளி நாகரிங்ககள் இப்பாலை நிலத்தை அண்டியே உருவாகின. எனவே தமிழரின் ஐந்திணையும் அந்த அடிப்படையினதே. தமிழரின் தொல் பெருநிலப்பரப்பான குமரிநிலம் கடல் கோள்களால் நீரில் மூழ்கிய போது முழுவளர்ச்சி கண்டிருந்த தொல் தமிழர் இடம் பெயர்ந்து தமிழ் நாட்டுள் புகுந்து தாம் வகைப்படுத்தியிருந்த அறிவியல், இயல், இசை, நாடகம் போன்ற அத்தனை கலைகளின் அடிப்படையிலேயே இந்தத் தொல்காப்பிய நூல் யாக்கப்பெற்ற தென்பதை நுண்ணிய நோக்கில் ஆராய்ந்தால் இது புலனாகும். இன்றும் கூட ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு புலம்பெயர்கின்ற போது தமது கலை பழக்கவழக்கங்கள், பண்பாடு, மொழியியல் விழுமியங்களை செயற்படுத்துவது ஒரு இயல்பாய் அமைந்த செயற்பாடென்பது குறிப்பிடத்தக்கது.

72) பொழுதுப்பிரிப்பு எத்தனை வகை? விளக்கு.

காலம்; பெரும் பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். பெரும்பொழுது கார், கூதிர் (குளிர்) முன்பனி, பின்பனி, இளவேனில், வேனில் என ஆறுவகையாகும். அவை ஆவணி முதல் இரண்டு, இரண்டு மாதங்களாகும். சிறுபொழுதையும் ஆறுவகையாகப் பகுக்கப்பட்டது. யாமம், வைகறை, விடியல், நண்பகல், மாலை, ஏற்பாடு (முன்னிரவு) என்பவை அவையாகும். ஒவ்வொரு சிறுபொழுதும் 4மணிக் கூறு உடையதாகும். $2^{1}/_{2}$ நாழிகை ஒரு மணித்துளி என்றும் ஏற்று கொள்ளப்பட்டது

கதிரோன் கதிரின் நிழலாலும், கன்னல் என்னும் நுண்மணல் சொரியும் கலம் கொண்டும் முன்பு நாழிகையைக் கணித்தனராம். கணியர் என்பார் வானியல் முதல் கணிப்பவர். வளி தொழிலாண்ட உரவோர் பருவக்காற்று அறிந்து கலம் செலுத்திய தமிழர்.

73) கருப்பொருள் பற்றி விரிக்க?

நிலமும் பொழுதும் ஆகிய முதற்பொருள் வழியாகக் கருக்கொண்டு தோன்றிய பொருள் கருப்பொருள். தெய்வம், உணவு, விலங்கு, மரம், புள், பறை, தொழில், யாழ் போன்றன கருப்பொருள்களாகும்.

74) தெய்வம் கருப்பொருளாகக் கொள்ளபடுவதேன்?

உலகில் வாழ்வாங்கு வாழ்ந்த, வாழுகின்ற பெருமைக்கு உரியவர்களை, அவர்களின் கருவிகளை வைத்து, சிலை வடித்தும், படிமங்கள் வைத்தும், மண்டபம், கோபுரம் அமைத்தும் அவற்றிற்கு மதிப்புச் செய்வதும் இன்று வரையிலுள்ள நடைமுறையாகும். இன்றும் நாம் நினைக்கின்ற ஒருவரை சந்திக்கும் பொழுது அவரை கடவுளை, தெய்வத்தைக் கண்டது போலுள்ளதெனக் கூறுவது வழக்கமாயுள்ளது. இவர்கள் இறவாப் புகழானர்களாகவும் உள்ளனர். இவையெல்லாம் மாந்தச் சான்றோர்களுக்காக மாந்தரால் உருவாக்கப் பெற்றவை. எனவே கருப்பொருள் என்றார் தொல்காப்பியர்.

75) உரிப்பொருள் விளக்கு?

உயிர்களுக்கு இயற்கையாகவும் இனப்பெருக்கம் ஆவதற்கும் ஏற்பட்ட உணர்வு உரிப்பொருளாகும். பூக்கள் முதல் மாந்தர் வரை ஆண், பெண் என அமைந்துள்ளமை உரிப்பொருள் உயிர்ப்பிறப்பொடு வந்த உணர்வுப் பொருள். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பன ஐந்தும் உரிப்பொருளாகும். எல்லா உயிர்க்கும் இன்பம் பொதுவானது.

பருவ ஒப்புடைய ஆண், பெண் மனம் பொருந்துதல் புணர்தல் ஆகும். மனம் பொருந்திய ஆண், பெண் ஒருவரையொருவர்

பிரிந்து செல்லல் பிரிவு, பிரிந்தாலும் பிரியாத மனத்தினராய் எண்ணியிருத்தல் இருத்தல் ஆகும், சந்திக்க முடியாது நெடுநாள் பிரிந்து வருந்துதல் இரங்கல் ஆகும், (பொருள், கல்வி, தூது, போர் போன்ற காரணங்களால் நெடிய பிரிவு ஏற்படும்.) சிறுசிறு செயல்களால் பேசாதும், நெருங்காதும் இருத்தல் ஊடல் ஆகும்.

76) ஐந்நிலத் தெய்வங்களாக தொல்காப்பியர் சுட்டுபவர் யாவர்?
மலை நிலமாம் குறிஞ்சிக்கு சேயோன்
பாலை நிலமாகிய வரண்ட நிலத்திற்கு கொற்றவை (வெற்றி)
காட்டு நிலம் முல்லைக்கு மாயோன்
வயல் நிலம் மருதத்திற்கு வேந்தன்
கடல் நிலம் நெய்தலுக்கு வருணன் போன்றோர் போற்றப்பட்டனர்.

77) அகத்திணை எவை?
அகத்திணை ஏழு வகைப்படும். அவையாவன கைக்கிளை, குறிஞ்சித்திணை, பாலைத்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல்திணை, பெருந்திணை என்பன கைக்கிளை காதல் உருவாகும் நிலை (ஒருதலைக்காதல்), குறிஞ்சி முதல் நெய்தல் வரை காதல் உருவாகிய அன்பின் ஐந்திணை, பெருந்திணை என்பது பொருந்தாக்காமம் எனப்படும்.

78) எவர் வாழ்வு சிறப்பதில்லை என்று தொல்காப்பியம் கூறும்?
அடிமையர், குடும்பம் மறந்து பொருள் தேடலையே குறியாகக் கொண்டவர்கள், ஏவியதைச் செய்வதே வாழ்வாகக் கொண்டவர்களின் அகவாழ்வு சிறப்படைதலில்லை என்பர்.

79) தொல்பழங்காலத்தில் மனைவியை கடல் கடந்து சொல்லும் கணவன் கூட்டிச் செல்வதில்லை ஏன்?
பிறந்த மண்ணையும் பெற்றோர், உற்றோரையும், மறந்து போகுமிடத்திலேயே தங்கிவிடலாம் என்ற முதன்மைக் காரணத்தினாலேயே அன்று கூட்டிச் செல்லும் வழக்கமில்லை.

இதை இன்று கண்கூடாகவே பார்க்க முடிகிறது. "முந்நீர் வழக்கம் (கடலில் செல்லல்) மகடூஉ வோடு இல்லை" என்று கூறும் தொல்காப்பியம்.

80) மடல் ஏறுதல் பற்றி விளக்கு?

காதலித்த ஒருத்தியை மணம் முடிக்க அவளின் பெற்றோர் தடையிருப்பராமாயின் தன் காதலை ஊராருக்கு வெளிப்படுத்த பனையின் மடலாகிய கருக்கு மட்டையால் செய்யப்பட்ட குதிரை அல்லது மாட்டுக்கான்று போன்ற ஒன்றில் அவன் ஏறி ஊர்வலம் வருவதும், கருக்குகள் வெட்டி அரத்தம் சொட்டுவதையும் ஊரார் கண்டு அப்பெண்ணின் பெற்றோருடன் பேசி அவளை அவனுக்கு மணம் முடித்து வைத்தலேயாகும்.

81) உடன் போக்கு என்றால் என்ன?

கருத்திசைந்த காதலர் அவரின் பெற்றோரின் இசைவுகிட்டாத நிலையில் அவர்களுக்குத் தெரியாமல் இருவருமாக தூர இடம் சென்று மணம் முடித்து வாழ்தலேயாகும்.

82) அகப்பொருள் கூறும் பாடல்களின் தனிச்சிறப்பென்ன?

இப்பாடல்களின் தலைவன் தலைவி அல்லது கிழவன் கிழத்தி எனச் சுட்டப்படுவார். பெயர் குறிப்பிடப்படுவதில்லை. பண்டைய நாளில் காதலித்த இருவர் மணம் செய்து இல்லறம் நடத்தத் தவறியதில்லை.

83) அகத்திணையை முடிக்காமல் புறத்திணையை உட்புகுத்தி மீண்டும் (தொல்காப்பியர்) தமது நூலில் அகத்திணையை கூறுவதேன்?

கையென்பது பல பொருள் ஒரு சொல். ஒழுக்கம் என்பதும் அதன் ஒரு பொருள். கைக்கும் அகம், புறம் என இரண்டு பக்கங்கள் உண்டு. அகத்திணையை ஏழு என்றவர் புறத்திணையும் ஏழு என்பதால் அதையும் கூறி முடித்து அகத்திணையாகிய களவு, கற்பு, பொருள் என்பவற்றை கூறினார் போலும். இந்நூ லொழுங்கை சிதைக்காமல் கைக்கொள்வது சிறப்பாகும்.

84) புறத்திணை ஏழினையும் கூறி விளக்கு?

| | |
|---|---|
| வெட்சித்திணை | ; பகைவர் ஆ (பசு)க்களைப் போரின் அடையாளமாகக் கவர்தல். |
| வஞ்சித்திணை | ; எதிரி நாட்டைப் பிடிக்கப்போரிடல் |
| உழிஞைத்திணை | ; பகை நாட்டினரின் அரணை (மதிலை)க் கவரப்போரிடல். |
| தும்பைத்திணை | ; ஒரு அரசன் தன் வலிமையை வெளிப்படுத்தப் போரிடல். |
| வாகைத்திணை | ; போரில், வேறுவகைகளில் பெறும் வெற்றிகளைக் கூறுவது. |
| காஞ்சித்திணை | ; நிலையாமையைக் கூறி, நிலை பெறத்தக்க வாழ்வை வலியுறுத்தல். |
| பாடாண்திணை | ; ஒருவரின் ஆளுமைச் சிறப்புக்களை, கடவுளை, குழந்தையைப் பாடுதல். |

85) போர் என்பதை விளக்கு?

பொருதல் என்பது போர். சம பலம் வாய்ந்த இருவர் ஒத்த படைக்கலம், ஒத்த ஊர்தி, கரவுத்தன்மையில்லாது நேருக்கு நேர் போரிடுவதும், போரில் பங்கு கொள்ளாத மக்கள், ஏனைய உயிர்கள், தோற்றுப் புற புதுகுகாட்டுவார்களோடு போரிடல் போரறமன்று. போரும் பகல் பொழுதில்லல்லாமல் இரவில் நடைபெறுவதில்லை. அத்தோடு அந்நாட்டின் கோவில்கள் பள்ளிகள், மருத்துவமனைகள், கலைக்கூடங்கள் போன்றவற்றிலும் தாக்குதல் போரறமாகக்கருதப்படவில்லை. இது கிட்லர் காலமாகிய இரண்டாம் உலகப்போரில் (1945) கூடக் கிட்லராலும் கடைப்பிடிக்கப்பட்டது. இன்று போர் என்பது ஓட்டு மொத்தமாக மக்கள், உயிர்கள், சொத்துக்கள் அத்தனையையும் தகர்த்தழித்து அப்பைந்திரத்தைச் சுடுகாடாக்குவதும், எரிகுண்டுகள், நச்சுக்குண்டுகள், பல்குழல் ஏவுகணைக்குண்டுகள் போன்றனவற்றையே பயன்படுத்தி போரறமற்ற போரையே நடத்தி மக்களழிப்பை மேற்கொள்கின்றனர். அன்று போரில் தோற்றவர்க்கும் வேண்டும் உதவிகளை முன்னுற நின்று செய்வதே போரறமாகக் கொள்ளப்பட்டது இதைத்தான் ஊராண்மை அல்லது

பேராண்மை என்பார் வள்ளுவனார்.

86) துறை என்பது எது?
திணையின் உட்பிரிவுகளே துறை எனப்படும் நீருண் துறை, நீராடு துறை, கல்வித்துறை போன்ற பல. ஒவ்வொரு திணையும் பல்வேறு துறைகளை உள்ளடக்கியது. அகத்திணை, புறத்திணை ஆகியவற்றிற்கும் துறைகள் உண்டு. கண்ணை மூடுவது ஒருதுறை, விழிப்பது இன்னொருதுறை போன்ற பல துறைகள்.

87) களவியல் எனபதை விளக்கு?
முன்பின் அறியாத ஒருவனும் ஒருத்தியும், ஒரு சூழலில் எதிர்ப்பட்டு உளம் ஒன்றி ஒரு மித்து முடிவு கொள்ளல் களவாகும். பொருள்திருடும் களவு குற்றமானது. ஆனால் ஒருவர் மனதை ஒருவர் கவர்ந்து ஒருவர்க்கொருவர் இன்றியமையாதராய் இருவரும் ஒருவராதல் குணமிக்க பண்பாகும் பண்பாடுமாகும்.

88) களவுக் காலச் சிறப்புக்கள் எவை?
களவுக் காலப்பகுதியில் தலைவன், தலைவி ஒருவரையொருவர் தோழன், தோழி இல்லாது (மறைவு) சந்தித்தல் இல்லை. அத்தோடு தலைவன் தலைவிக்கிடையில் அகத்தொடர்பு மட்டுமே இருந்ததென்பதை சங்கச்சான்றோர் பாடல் சான்று காட்டும். இக்கால கட்டத்தில் தலைவிக்கு ஏற்படும் உள, உடல் வேறுபாடு நோக்கி வேலன் வெறியாடல் (சாமியாடல்) நடத்திக் குறிகேட்கும் வழக்கமுமுண்டு.

89) கற்பியலை விளக்கு?
எந்நிலையிலும் நீயே என் கணவனென்று தலைவியும், உன்னைப்பிரியேன், பிரியின் உயிர் தரியேன் எனத் தலைவனும் தம் களவுக்காலத்துக் கூறிய தங்கள் உறுதி மொழிப் படி மணம் செய்து கொண்டு இல்லறம் ஏற்று நடத்துதல் கற்பியலாகும். கற்பென்பது மன உறுதி "கற்பென்னும் திண்மை" என்பார் வள்ளுவனார். இது இருவருக்கும் ஏற்புடைய தன்மையாகும்.

90) தொல்பழங்காலத்தில் திருமணங்கள் எவ்வாறு நடத்தப்பட்டன?
இல்லறத்தில் இணைந்து நல்லறம் நடத்தினர். ஆனால் காலப்போக்கில் இல்லற வாழ்வில் ஏற்பட்ட வழுவினால் ஒரு கரண (சடங்கு) முறையை ஏற்படுத்திப் பலபேர் முன்னிலையில் வெள்ளுவா (பூரணை) நாளாகிய முழுமதி நாளில் (முழுத்த நாள்) பொதுப்பணி மகளிர் திருமணங்களை நடத்தி வைத்தனர். இதை அகநானூற்றுப் பாடல்களான 86, 136 வெளிப்படுத்தும்.

91) கூற்று என்றால் என்ன?
அகப்பொருள் களவு, கற்பு ஆகியவற்றில் கூற்று என்னும் துறை அல்லது சிறுபிரிவு இடம்பெறும். கூறுதல் என்பது அதன் பொருள் தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழிகூற்று, செவிலி கூற்று, கண்டோர் கூற்று என்பவை கூறும் இடங்களும், கூறும். அளவுமாகும். பின்னையோர் இதை கிளவியென்றும் கூறினர். கிளவி விளக்கம் என நூல்களும் வெளிவந்துள்ளன (களவியல்காரிகை)

92) ஓதற்பிரிவு பற்றி விளக்குக?
தலைவனின் பிரிவு வகைகளில் ஓதல்பிரிவும் ஒன்றாகும். இல்லற இணைப்பின் பின் தலைவன் கல்வியினை மேம்படுத்தப் பிரிந்தனர் என்பது கல்வியின் மேன்மையை வெளிப்படுத்தும். ஆனால் இது பெண்களுக்குக் கூறப்படவில்லையாயினும், சங்ககாலத்தில் முப்பதின்மர் பெண்பாற்புலவர்களாக இருந்துள்ளனர் என்றால் இவர்கள் தம் இல்லங்களிலிருந்தே கற்றிருக்கவேண்டும் என்பது தெளிவு. பொருள் தேடச் செல்வதற்கு ஓராண்டு என வரையறுத்தவர்கள் கல்விக்கு மூன்றாண்டுகள் வரையறுத்துள்ளனர். என்றால் அது கல்வியின் சிறப்புக் கருதியே "வேண்டிய கல்வியாண்டு மூன்று இறவாது" (கடவாது) என்று கூறப்படுகிறது.

93) இல்லற வாழ்வின் உயர் சிறப்பை கூறுக?
சிறப்புற இல்லறம் நடத்தி நன் மக்களைப்பெற்று கல்வி தொழில் முறையிலும் சிறந்து விளங்கச் செய்து அறமும், அறிவும் அமைந்த சுற்றத்தோடு கூடியிருந்து அவர்களுக்கு

நல் வழிகாட்டித் திகழ்வதே இல்லற வாழ்வின் சிறப்பென்பார் தொல்காப்பியர். இல்லறத்துறவியாய், நல்வழிகாட்டியாய் நாடு சிறக்க வாழும் வாழ்வே உயர் வாழ்வாகும்.

94) பொருளியல் கூறுவன விளக்கு.
பொருளதிகாரத்தில் பொருளியல் ஒரு கூறாகும். இது புது நூல் செய்வார்க்கு வழிகாட்டுதல்கள் உள்ள பகுதியென்பார் பேரா.இலக்குவனார். சொற்கள் தம் பொருளை வேறுப்பட்டு உரைப்பினும் பொருளாகும் என்பதால் பொருளியலாயிற்று என்பார் நச்சினாற்கினியர். கால இடமாற்றங்களால் மொழியில் உண்டாகும் மாற்றங்களில் ஏற்பவற்றைத் தக்க வகையில் பயன்படுத்தி மொழியைக்காக்கும் வழி கூறுவதே பொருளியல். பேசாதன பேசுவது போலவும், உயிரில்லாதன உரைப்பது போலவும், தனக்குத் தானே சொல்வது போலவும் கூறுதல் பொருளியலாகும்.

95) மெய்பாடுகள் பற்றி விரித்துரைக்க?
உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி, உடல் வழியாகப் பிறர் உணர வெளிப்படுத்துவது மொய்பாடு எனப்படும். குறிப்புரைத்தலும், குறிப்பறிதலும் வள்ளுவர் கூறுவதும், மக்கள் வழக்கிலுள்ளதுமாகும் மெய்ப்பாடுகள் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என எட்டுவகையாகும். நகைச்சுவை தோன்றும் வகையை நான்கு என்பார் தொல்காப்பியர்.
"எள்ளல் இளமை பேதைமை, மடன் என்று உள்ளப்பட்ட நகை நான்கு என்ப" என்பார். இதை போல் எல்லா மெய்ப்பாடுகளும் தோன்றும் வகைகளையும் கூறுகிறார். களவியல் மெய்ப்பாட்டில் காதல் தொடங்குதலில் இருந்து மெய்பாடுகளை நான்கு நான்காகப்பகுத்து ஆறுவகையில் காட்டுவார். முகமலர்தல், வியர்வை தோன்றல், நகை உண்டாதலை மறைத்தல், தன்மாற்றம், பிறர் அறியாதவாறு மறைத்தல் ஆகிய முதல் நான்கெனச்சுட்டி ஆறு வகைகளையும் கூறுவார்.

*96) திருமணப்பொருத்தங்களென தொல்காப்பியர் கூறுபவை எவை?*
நற்குடியில் பிறந்து, நல்லொழுக்கம் உள்ளவராயும், குடும்பம் நடத்தும் முறை ஒத்திருத்தல், வயதுப்பொருத்தம், தோற்றப் பொருத்தம், பாலியல் அமைவுப் பொருத்தம், கட்டொழுங்கு அமைவு, மனநிறைவு, அருளுணர்வு, புரிந்து கொள்ளும் திறன், செயல்நிலை ஆகிய பத்துப் பொருத்தங்கள் ஒத்திருத்தலைக் கூறுவார். ஆனால் இன்றோ பிறப்பியம் (பஞ்சாங்கம்), நாளும் கோளும் பார்த்தல்.

சம்பந்தர் சமணருடன் வாதிட சென்ற போது அப்பர் அடிகள் தடுக்க எல்லா நாளும் நல்ல நாளே என்று கூறிச் சென்று வென்று வருகிறார். (வேயுறு தொழிபங்" இது எவர்க்கும் பொருந்தும்) பேர், எண்பொருத்தங்களைப்பார்த்தும் குழப்புகின்றனர். பொருத்தமென்பது மணமக்களின் மன இசைவு, தொழில்பொருத்தம், உடற்பொருத்தம், உடல்நல (மருத்துவ) ப் பொருத்தம், கல்விப்பொருத்தம், அகவைப்பொருத்தம், கருத்துப்பொருத்தம் (பண்புடையாராயின் வெவ்வேறு மதத்தினராயும் இருக்கலாம்) குடும்பநிலைப்பொருத்தம் கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை. இதைப் பெரியவர்கள் உணர்ந்தால் வருங்காலத் தலை முறையினராவது நல்வாழ்வு பெறுவர்.

*97) குடும்ப வாழ்வுக்குப் பொருந்தாதவையாகத் தொல்காப்பியர் கூறும் குணங்கள் எவை?*
பொறாமை, தீயவை எண்ணல், தற்பெருமை கூறல், புறங்கூறல், வெகுளல், கடமைகளை மறத்தல், சோம்பல், தாமே மகிழ்வாய் இருப்பதாய்க் கூறல், அறிவில்லாமை,மறதி, பிறருடன் ஒப்பிட்டுப் பேசல் என்னும் குணங்களைக் கூறுவார்.

*98) உவமை பற்றி விளக்கு.*
அறிந்த ஒரு பொருளைக் கொண்டு அறியாத பொருளை குறித்துக் காட்டி அறியச் செய்தல் உவமையாகும். "வினை, பயன், மெய், உரு என்ற நான்குமே வகை பெற வந்த உவமைத் தோற்றம்" என்பார் தொல்காப்பியர். எடு; மான் போலத் துள்ளினாள் - வினை, மழை போல் கொடை -

பயன், உடுக்குப் போல் இடுப்பு - மெய் பொறிபோலும், புன் கம்பூ - உரு என்பவற்றால் தெளிவு பெறலாம். பொருளை உவமையாகவும், உவமையைப் ளபொருளாகவும் மாற்றுதல் உருவக அணி எனப்படும். தாமரை முகம் என்பது தாமரை போலும் முகம் எனவும் அதனை முகத்தாமரை என மாற்றிக் கூறினால், முகமாகிய தாமரை எனப்பொருள் தந்த உருவமாகும். பொருளையும் உவமையையும் இணைக்க வரும் சொல் "உவமை உருபு" எனப்படும். போல, ஒப்ப, இயைவ, அன்ன, இன்ன, எனப்பல, மிகப்பல உருபுகள் உண்டு.

99) செய்யுளியல் பற்றி விளக்கு.

செய் + உள் = செய்யுள், செம்மையாக படைக் வேண்டியதும், மீண்டும் மீண்டும் எண்ண வேண்டியதும் செய்யுளியலாகும். யாப்பு, பாட்டு, தூக்கு, பனுவல், பா என்பனவும் செய்யுளின் மறு பெயர்கள். செய்யுளியலை மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவு, திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம் (குறிப்பு), பொருள், துறை, மாட்டு, வணணம் என 26 வகையும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என எட்டு வகையும் சேர்ந்து 34 வகையாக முறைப்படுத்திக் கூறுவார்.

100) பா வகைகள் எவை? விளக்கு.

"ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என நாலியற்று என்ப பாவகை விரியே" எனத் தொல்காப்பியர் கூறினாலும் இதை ஆசிரியம், வெண்பா ஆகிய இரண்டு வகையினுள் அடக்கலாமென்றும், "ஆசிரிய நடைத்தே வஞ்சி, வெண்பா நடைத்தே கலி" என்றும் தொல்காப்பியர் கூறுவார். நால்வகைப் பாவுடன் வெண்பா முன்னும் ஆசிரியம் பின்னும் இணையும் "மருட்பா" என்றும், பல்வகைப்பாவுறுப்புக்களைக் கொண்டது "பரிபா" என்றும் கூறுகிறார். தொல்காப்பியத்தின் பெரிய இயலே செய்யுளியல் ஆகும்.

101) மரபியலுக்குப் பொருத்தாச் செய்தி தொல்காப்பியத்தில் உண்டா?

உண்டு. அவை தொல்காப்பியத்துள் பின்னவர் சேர்த்ததாகும். உரை தோன்றுவதற்கு முன்னரே சேர்த்து விட்டதால் உரை கண்டவர்கள் அவர்வாக்கினதே என நம்பி உரையொழுதி விட்டனர். அந்தணர், அரசர், வைசிகர், வேளாளர் பற்றியவை மரபியலோடு பொருந்தாதவை. பிறக்கும் போது எவரும் கோல், வேல், சமன்கோல், ஏர் ஆகியவற்றோடு பிறப்பதில்லை. தொல்காப்பியத்தில் உள்ள படி நூற்பாக்கள் 1610 என்றும் கணக்கிட்டுள்ளனர். விடுபாடுகள், சேர்ப்புக்கள் ஆகியனபற்றி நோக்கும் போது இவ் எண்ணிக்கை பொருந்தியதாகாது.

## சங்க இலக்கியங்கள்

102) முச்சங்கங்கள் என தொல்பழங்காலத்தில் தமிழ் வளர்ப்பு கழகங்கள் இருந்தனவா? விளக்குக.

தொல்பழங்காலத்தில் செவி வழியூடாகப் பெற்ற அல்லது கூறப்பட்டு வந்த மரபுச் செய்திகளை கதைகளினூடாக கற்பனையுடனும் கலந்து மனதில் பதியுமாறு பல வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்கியதாகவே சங்க இலக்கியங்கள் உருவாக இச்சங்கங்கள் உதவின. முதன் முதலாக முச்சங்கங்கள் இருந்ததற்கான சான்றாக கி.பி.8ஆம் நூற்றாண்டுளவில் நக்கீரர் என்பவரால் உரைக்கப்பட்டதே இறையனார் அகப்பொருளுரையாகும். இதன் விரிப்பு வருமாறு.

### முதற்சங்கம்

இடம் கடல் கொண்ட தென்மதுரை, தமிழ் வளர்த்த மன்னர்கள் 89 பேர், காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை, 4449 ஆண்டுகள், பாடிய புலவர்கள் 4449 பேர், சங்க உறுப்பினர் தொகை 549, இயற்றிய நூல்கள் **பெரும் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியா விரை எனவும் புலவர்கள் அகத்தியர், சிவபெருமான், முருகவேள், முரஞ்சியூர் முடி நாகராயர், நிதியின் கிழவர் என்போராவர்.**

## *இடைச்சங்கம்*

*இடம் கபாடபுரம், தமிழ் வளர்த்த அரசர்கள் 89 பேர், படிய புலவர்கள் 3700 பேர், காலம் 3700 ஆண்டுகள், அரசர் வெண்டேர்ச் செழியன் முதல் மூடத்திருமாறன் வரை, உறுப்பினர்கள் 59 பேர். இயற்றிய நூல்கள்* ***பெருங்கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை (அகவல்), அகத்தியம், தொல்காப்பியம், மாதொன்மம் (புராணம்), பூதத்தொன்மம் (புராணம்), இசை நுணுக்கம் போன்றனவும் புலவர்கள் அகத்தியர், தொல்காப்பியர், மோசி, வெள்ளூர்க்காப்பியனார், சிறுபாண்டரங்கன், திரையன், மாறன், கீரந்தை என்போர்.***

## *கடைச்சங்கம்*

*இடம் இன்றய மதுரை, அரசர்கள் 49 பேர் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதிவரை, காலம் 1850 ஆண்டுகள், பாடிய புலவர்கள் 449, சங்க உறுப்பினர்கள் 49 பேர், இயற்றிய நூல்கள்* ***பெருந்தொகை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது, கலி, பரிபாடல், கூத்து, வரி, குற்றிசை பேரிசை அத்தியம் தொல்காப்பியம், புலவர்கள் சிறுமேதவியார், சேந்தம் பூதனார், பெருங்குன்றூர் கிழார், இளந்திருமாறன் நல்லந்துவனார், மருதனின் நாகனார், நக்கீரனார். என்போர்***

*103) சங்கம் இருந்ததற்கான சான்றுகள் உண்டா?*

*உண்டு. இரண்டாம் (இடைச்) சங்கம் இருந்த இடமாகிய கபாடபுரத்தை வடமொழிக் காப்பியங்களான மபாரதத்(மகாபாரதம்) தில் வியாசரும், இராமாயணத்தில் வால்மீகியும் குறிப்பிடுவர். இதை சாணக்கியரும் தமது நூலில் குறிப்பிடுகின்றார். பண்டைத் தமிழகம் (குமரிநாடு) பல கடல்கோள்களால் அழிந்ததை கலித்தொகை (முல்லை கலி), சிலப்பதிகார நாடுகாண் காதை குறிப்பிடுகின்றன. அத்தோடு 2002 இல் இங்கிலாந்தைச் சேர்ந்த சிறந்த கடலாய்வாளரும், வரலாற்றாய்வாளரும் ஆன*

**"கிரகாம் உல்கக்"** என்பார். தமிழ் நாட்டின் கிழக்குக் கரையான **புகார் தொடக்கம் தரங்கபாடி வரை** செய்த கடலாய்வில் **கடலுக்கடியில் 11000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று கூறக்கூடிய கட்டிடங்கள்** காணப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார். அதுமாத்திரமல்லாது **பொம்பே வளைகுடாவிலும் குயராத்திற்கு அண்மித்த கடலுக்கடியில் அமிழ்ந்து போன கிட்டத்தட்ட 11000 ஆண்டுகள் பழமை வாய்ந்த நகரமொன்று (நாகரிக வளர்ச்சி கண்ட) காணப்படுவதாக அந்திராதோவ் என்னும் உருசிய வரலாற்று ஆய்வாளர் தமது "மூவாரிப் புதிர்கள்"** என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். **(தமிழாக்கம் பி.இராமநாதன்)**

**மரபுவழிக்கதைகள்** : கடைச்சங்கப் புலவர்களாகிய 49 பேரையும் பதுமைகளாக அமைத்து பொய்யாமொழி எனப் பெயர்கொண்ட புலவரைக் கொண்டு பாண்டிய அரசனொருவன் பாடச் செய்தபோது அப்பதுமைகள் அப் பா இனிமையில் தலையசைத்ததாக இருபழம்பாடல்கள், ஒரு அகவல்பாட்டும் கூறுகிறதாம். கம்பர் சங்கமுத்திரை பெற்ற பின்பே தம் கம்பராமாயணத்தை அரங்கேற்றியதாகவும், பெரிய தொன்மம் (புராணம்) சங்கமமைத்தே நூல் இயற்றினர் என்றும் பலவாறாகக் கூறப்படுகிறது.

**இலக்கியச்சான்று :**

1. தொல்லானை நல்லாசிரியர்
   புணர் கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
   நிலந்தரு திருவி னெடியோன் - **மதுரைக்காஞ்சி**
2. பொத்தி யாண்ட பெரும் சோழனையும்
   வித்தை யாண்ட விளம் பழையன் மாறனையும்
   வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று - **பதிற்றுப்பத்து**
3. தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே - **அகம் 58**
4. தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மதுரை - **மதுரைக்காஞ்சி**
5. தென் தமிழ் மதுரை - **மணிமேகலை**
6. தென்தமிழ் நாட்டுத் தீதுதீர் மதுரை - **சிலப்பதிகாரம்**
7. தமிழ் வையைத் தண்ணம் புனல் - **பரிபாடல் 6**
8. தலைச்சங்கப் புலவனார் தன்முன் - **சேக்கிழார்**

**கம்பராமாயணம் தந்த கம்பரும்** "தென்தமிழ் நாட்டு அகல்பொதியில், திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேருவீரேல்" எனத் தெளிவுறக் கூறுகின்றார்.

**உரையாசிரியர் கூற்று :**
சங்கம் இருந்த செய்தியை இறையனார் அகப்பொருள் உரை விரிவாக எடுத்துரைக்கின்றது. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் முதல் ஊழி இறுதிக்கண் தென்மதுரையில் தலைச்சங்கம் என்று வேனிற் காதையிலும், இரண்டாம் ஊழியதான கபாடபுரத்தில் இடைச்சங்கம் என்றும், கடைச்சங்கம் இரீஇய பாண்டியருள் கவியரங்கேறிய பண்டியன் மதிவாணணார் நாடகத்தமிழ்நூல் என்று தெளிவாகக் கூறுகின்றார்.

தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த பேராசிரியர் "மூன்றுவகைச் சங்கத்து நான்கு வருணத்தொடுபட்ட சான்றோரும் மூன்று வகைச் சங்கத்தாரும் என விளம்புவார். தொல்காப்பியச் செய்யுளியலுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்" தொல்காப்பியம் செய்த காலத்தில் தலை, இடைச் சங்கத்தார் கட்டளைப்படி பயிற்றுவர் செய்யுள் செய்தார் என்பதும், பின் கடைச்சங்கத்தாருக்கு அது அரிதாகலினால் சீர்வகையடி பயிற்றரச் செய்தார் என்றுணர்க" என்பார். இவை சங்கம் இருந்ததை உறுதி செய்யும்.

**செப்பேட்டு உண்மை** : கி.பி.10 ஆம் நூற்றாண்டின் சிம்மனூர்ச் செப்பேடும் "மகாபாரதம் தமிழ்படுத்தும், மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என வெளிப்படுத்தும் ஆகவே இச்சான்றுகள் சங்கம் இருந்ததை உறுதி செய்யும்.

104. 1) இறையனார் களவியலின் முச்சங்கங்களின் கூற்றைப் பொய்யென்கின்றனரே!,

இறையனார் அகப் பொருள் (களவியல்) என்றும் இது கூறப்படும், சிறந்த அகப்பொருள் இலக்கணநூல். இது களவு, கற்பு என்னும் இரு அகப்பொருள்களையுடையது. களவில் (33) உம், கற்பில் 27 உம் ஆக 60

நூற்பாக்களை உள்ளடக்கிய நூல். இன்னூலை ஒட்டக்கூத்தர் "அமுத சூத்திரம் அறுபதாய்ச் சமைந்த நூல்" எனப் புகழ்ந்துரைப்பார். இது தமிழில் தோன்றிய முதல் உரைநடை நூலாகவும், இதன் பின் தோன்றிய உரைநடை நூல்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் அமைந்த நூல். இந்நூலைப் படிக்கும் போது இலக்கண உரை படிப்பது போன்ற உணர்வு விடுபட்டு இலக்கியச் சுவை சொட்டும் இன்ப இலக்கியம் போல் தோன்றும். இதில் எளிதில் பொருளுணர்த்தும் தெளிவாய் அமைந்த நடை, சிறந்த மேற்கோள்கள் உவமைகள், பழமொழிகள், வெற்றிநடை போடும் வீரனின் பீடு (பெருமை) நடை போன்றன வெளிப்பட்டு நிற்கின்றன.

உரைநடையின் கருத்து, விளக்கம் கற்போர் மனதில் ஆழவேரூண்டி இன்ப உணர்வை நெஞ்சத்தில் செந்தமிழ் தந்த இன்பத்தால் நிரப்புகின்றது. இந்நூ லின் உரையாசிரியர் நக்கீரனாரின் எதிரொலியாகவே இவரின் பின்வந்த உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியார், அடியார்க்கு நல்லார், மயிலைநாதர் போன்றோரின் உரையும் காணப்படுகின்றது. இதுவரையில் எவரின் உரையும் இறையனார் அகப்பொருளுரைக்கு இணையானதாக யாக்கப்படவில்லை என்பர் அறிஞர்.

மாபாரதத்திலே இருபெரும்படைகள் பாண்டவர், நூ ற்றுவர் (துரியோதனன்) எதிர்த்தெதிர்த்து (எதிரெதிரே) நிற்க. கண்ணன் அருச்சுணனுக்கு கீதையின் பகுதிகள் பதினெட்டையும் காதில் ஓத முடியுமா? போரிடத் தயங்கியவன் மட்டுமா களத்தில் நின்றான். இவன் ஓதிமுடிக்க எத்தனை மணிநேரம் முடிந்திருக்கும். இதை களத்தில் நின்ற ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் பார்த்து வாழ நிற்பார்களா? சரி வில்லேந்தி நின்றவன் ஏடும் எழுத்தாணியும் எந்தக் கைகளில் வைத்திருந்தான். அல்லது தன்னுள் மனப்பாடம் செய்து கொண்டானா? அல்லது எங்கோ நின்று சஞ்சயன் எப்படிக் கேட்டான்.

இதை எப்படி திருதராட்டினனுக்கு இவன் கூறினான். குருடரான திருதராட்டினன் எப்படி எழுதினார்? தலை சுற்றுகிறதா? சரி அவற்றை விடுவோம்!

"பிறப்பின் நோக்கம் கடமை செய்தலே" என்பதை வலியுறுத்த யாரோ ஒரு மெய்யிலாளரால் எழுதப்பட்டு கண்ணனுக்குக் கடவுள் வடிவம் கொடுத்து இடைச்செருகலாக புகுத்தப்பட்டதே கீதை என்பது எவருக்கும் தெட்டத்தெளிவாக புரிந்துகொள்ளமுடியும். இது வைதீக வடமொழியாளர் மேலாண்மைப்பட்டதாய் இருப்பதால் மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். கேள்வி கேட்பதில்லை? இறையனார் அகப்பொருளுரையோ தமிழையும், தமிழ்க்கடவுள் (சிவன்) முன்னிருத்தி சொல்லப்படுவது மேற்குறித்தவர்களுக்கு ஏற்புடையதானதல்ல எனவே அவர்சார்ந்தோர் அப்படி எதுவுமில்லை, பச்சைப் பொய்யென்கின்றனர்.

2) தமிழின், தமிழ் நாகரிகத்தின் தொன்மையை விளக்கும் சான்றுகள் இன்று காணப்டுகின்றனவா?

பல சான்றுகள் உள்ளன. இச்சான்றுகளை மேற்சென்று ஆய்வதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். நாமாகச் செய்வதற்கும் ஒரு அரசோ அல்லது ஒழுங்கமைக்குப்பட்ட ஒரு அமைப்போ அல்லது பொருளாதார வல்லமையோ இல்லாததினால் **குமரிமா வாரியில் (இந்துக்கடல்) பூம்புகாரை அண்மித்த தமிழ்நாட்டின் கிழக்கு கரையில் இங்கிலாந்தை சேர்ந்த கடலாய்வாளர் "கிரகாம் உலகக்" கண்ட 11000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கட்டட அமைப்பையோ, காம்பே வளைகுடா ஆய்வில் கண்ட 11000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கடலடி நகரத்தையோ (அந்திராகோவின் - மூவரிப்புதிர்கள்) சிந்துவெளியிற் கண்ட 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட அரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகம் பற்றி வெளிப்பட்ட அகழ்வாய்வுச்** சான்றுகளை இந்திய நடுவணரசு இவற்றைப்

புறக்கணித்தும், இருட்டடிப்புச் செய்தும், மேற்கொண்டும் ஆய்வுகளைத் தொடரவிடாமலும் செயற்படுவதால் பல உண்மைகள் மூடி மறைக்கப்படுகின்றன. இது வைதீக மேல்லாண்மையே என்பதை துல்லியமாக வெளிப்படுத்தும். அண்மையில் **பாகித்தானின் கூக்கூர் மாவட்டத்தில்** செய்த அகழ்வாய்வில் **திருக்குறள் சொற்கள் பொறித்த முத்திரைகள் (இவை போன்றன சிந்துவெளியிலும் காணப்பட்டவை)** கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவையும் இற்றைக்கு 11000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக கொள்ளப்படுகின்றன. **ஆனக்கோட்டை, கந்தரோடை, பூநகரி** போன்ற இடங்களிலும் **தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூ ர் அரிக்கமேடு போன்ற இடங்களிலும், கி.மு.வை சேர்ந்த ஓட்டெழுத்துத் தடையங்கள்** பல இடங்களிலும் நில அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் தமிழின், தமிழனின் தொன்மைகளை துல்லியமாக துலக்குவன.

இலங்கையின் கரையோரம் முழுவதும் தமிழர்கள் தொல்பழங்காலம்தொட்டு வாழ்ந்தார்கள் என்பதை ஊர்களின் பெயர்களுடன் அங்கு கோவில்கொண்டு இருக்கும் தமிழ்த் தெய்வங்களும் சான்றுபகரும். **வடக்கே யாழ்ப்பாணம், மேற்கே பாணன்துறை , யாழ்ப்பாணனில் ஒரு நல்லூர், பாணன்துறையில் ஒரு நல்லூர் (பாணந்துறை), வடக்கே கொழும்புத்துறை மேற்கே கொழும்பு, நீர்கொழும்பு வடமேற்கே மாதோட்டம், சிலாபத்துறை தெற்கே மாத்துறை, மேற்கே சிலாபம்,** (மாத்தறை) அம்பன்தோட்டம் (அம்பாந்தோட்டை) **தென்மேற்கே காலி** [கால் - காற்று, காலி;காற்று தொடர்ந்து நிறைந்த இடம்].

**தெற்கில் தெய்வேந்திரமுனை (தெவிநுவர) இன்று திசைமாறாதகமம்** (திசைமாறாகம) இங்கு பெரியதொரு சைவக்கோவில் இருந்து போர்த்துகேயர் காலத்தில் அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. பின் இங்கு பெண் (கண்ணகி - பத்தினித்தெய்வியோ) தெய்வழிபாடு

நடைபெற்றதாகவும், இது இன்று சிங்களமக்களாலும் தொடர்ந்து போற்றப்படுகிறது. இந்த முனையிலிருந்த கலங்கரைவிளக்கு (வெளிச்சவீடு) கடலில் நாவாய் (கப்பல்) செலுத்துபவர்களுக்கு வழி (திசை)காட்டியாயிருந்துள்ளது.

அடுத்துக் **கதிர்காமம், நாயன்மார்களால் பாடப்பட்ட குறிஞ்சி நிலத்தலைவனும், முத்தமிழ் தலைவனுமான முருகன் கோயில் கொண்டிருக்குமிடம்.** காலைக்கதிரவன் தோன்று தென்கிழக்கு மூலை கடலை அண்மித்துள்ள இடம். சிலகாலங்களில் கடல்வற்றும் நேரங்களில் கடலின் வெகுதூரத்தில் கட்டிட அமைப்புக்களின் முனைகள் வெளித்தெரிவதாகவும் கூறப்படுகிறது. அடுத்து **அம்பாறை, மட்டக்களப்பு 100 இக்கு 100 விழுகாடு தமிழ்பேசும் மக்களைக் கொண்டிருந்த இடம் அடுத்துத் திருக்கோணமலை காளி, சிவன்** (கோணேசுவரம்) கோயில் கொண்டிருக்குமிடம், தொடர்ந்து **மணலாறு, நாயாறு, கொக்கிளாய், வெற்றிலைக்கேணி, நாகர்கோவில், காங்கேசன்துறை, ஊர்காவற்துறை அத்தனையுமே** தமிழர் வாழ்ந்ததைச் சுட்டும் பெயர்கள். இப்படி கி.பி.1500ஆம் ஆண்டு வரையில் இலங்கையின் நூறு விழுக்காடு இடப்பெயர்களும் தனித் தமிழாயே இருந்துள்ளன. புத்தளம் மாவட்டத்தில் வெடியரசனுக்கு சிலை கூட வைக்கப்பட்டிருந்ததாம்.

105. முதல், இடைச்சங்க காலங்களில் இருந்த நாடுநகரங்கள் (குமரிக்கண்டம்) கடலுள் அமிழ்ந்ததாகக் கூறப்படுகிறதே இது உண்மையா? சான்றுகள் உண்டா?

கண்டம் போன்ற ஒரு பெரும் தொகுதியாயில்லாவிட்டாலும் மரபுவழியாக வாய்வழி செவிவழிச் செய்தியாக பல உலகநூல்களில் வெள்ளப்பபெருக்குகள் நாடு நகரங்கள் கடலில் மூழ்கிய செய்திகள் பற்றியும் அதிலிருந்து தப்பியவர்கள் பற்றியும் கூறப்படுகின்றன. கி.பி.2 ஆம் நூற்றாண்டினதாகக் கொள்ளப்படும் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரக் காப்பியத்தின் பாயிரத்தில்

"ப.்.றுப் ளியாற்றொடு பன்மலையடுக்கத்து

குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்றவாறாக கூறுவார்" நக்கீரரின் இறையனார் அகப்பொருளுரை **அடியார்க்கு நல்லார் உரையில் கூறப்படும் 700 காதாவம் கடலில் அமிழ்ந்த வரலாறு; ப'.றுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடைப்பட்ட ஏழ்தெங்கு நாடு, ஏழ்சிறுபனை நாடு, ஏழ் முன்பாலை, ஏழ் பின்பாலை, ஏழ் மதுரை நாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குணகரை நாடு போன்ற 49 நாடுகள் கடலில் மூழ்கியமை, கனகசபைப்பிள்ளையின் "1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகமென்னும்" நூலில் குமாரிக்குத் தெற்கே இலங்கையின் பெருநிலப்பரப்பு கடலில் மூழ்கியமை பற்றிய சான்று, 15000** ஆண்டுகளுக்கு முன் இலங்கை இந்தியா ஒரே நிலப்பரப்பாயிருந்ததென்ற கூற்று, கிறீத்தவர்களின் நூலான "பழையேற்பாடு கூறும் வெள்ளப்பெருக்கிற்கு தப்பிய நோவாவின் கதை", **"கில்கா மோசின் கடல்பெருக்கிலிருந்து தப்பிய கதை"** என்பனவும், அறிவியல் ஆய்வுகளின்படி **பனிஉருகலில் இறுதிக்காலம் 10,000** ஆண்டுகள் வரை நடைபெற்றதாகவும் இக்காலகட்டத்தில் **கடல் நீர் 500 - 600 அடி வரை** உயர்ந்ததாகவும் இதனால் பல நகரங்கள் கடலில் மூழ்கிப் போனதாகவும் கூறப்படுகின்றது. எனவே பெருநிலப்பரப்புக்கள் கடலில் மூழ்கியது உண்மையே.

106. இறையனார் அக்பொருளுரை யாரால் எப்போது எழுதப்பட்டது?
நக்கீரரால் உரைக்கப்பட்ட இவ்வுரை செவிவழிச் செய்தியாக இவரின் பத்தாம் தலைமுறையினரான முசிறி நீலகண்டனாரல் எழுதப்பட்டதாக இவ்வுரை செப்புகின்றது. இது கி.பி. 8 ஆம் நூற்றாண்டினதாக இருக்கவேண்டுமென்பார் அறிஞர்.

107. சங்ககாலம் ஒரு பொற்காலமென்கிறார்களே! இதன் அடிப்படைதான் என்ன?
தமிழர் வரலாற்றில் தமிழர்கள் கல்வியற் சான்றோர்களாகத் திகழ்ந்த காலம் சங்ககாலமேயாகும். ஏனெனில் குலவேறுபாடு, மதவேறுபாடு, தொழில் வேறுபாடு, ஆண்பெண் வேறுபாடு, அரசன் ஆண்டி வேறுபாடு இன்றிக் கல்வியறிவு பெற்றவரால், தமிழினம் மேன்மைபெற மரபுக்கவிதைகள் யாத்தனர். இவை மனித வாழ்வை விளக்குவதோடு அதை நன்னெறிப்படுத்தும்

உயர்ந்த இலக்கியப் பண்பையும் கொண்டுள்ளன. எனவேதான் சங்ககாலம் பொற்காலமெனப் போற்றுகின்றனர்.

108. *சங்க இலக்கிய நூல்களெனக் கூறப்படும் பதினெண் மேற்கணக்கு நூல்கள் எவை? அந்நூல்கள் எவ்வாறு பிரிக்கப்படுகின்றன? அவற்றைப் பாடியவர்கள் யார்? ஒவ்வொன்றிலும் எத்தனை பாக்கள்*

**பதினெண் மேற்கணக்கு நூல்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை** நூல்களென கூறப்படும் **பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை முருகக் கடவுளை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நக்கீரரால்** பாடப்பட்டவை, **பெருநராற்றுப்படையை பெண்பாற்புலவரான முடத்தாமக் கண்ணியரால் கரிகாலனைப் பாட்டுடைத்தலைவனாகவும், சிறுபாணாற்றுப்படை நல்லியக்கோடனை பாட்டுடைத் தலைவனாய் வைத்து நத்தத்தனாரால் பாடப்பட்டது. பெரும்பாணாற்றுப்படை கண்ணனாரால் இளந்திரையானை பாட்டுடைத் தலைவனாய் கொண்டு பாடியது. மலைபடுகடாம் எனப்பட்ட கூத்தராற்றுப்படை கௌசிகனாரால் நன்னன் சேய்நன்னனை பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு** பாடியது. இந்நூல்களெல்லாம் **ஆற்றுப்படை நூல்களெனப்படும்.**

**ஆரிய அரசன் பிரகத்தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கபிலரால் பாடப்பட்ட நூல் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு கப்பூதனரால் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடியது. உத்திரங்கண்ணனாரால் கரிகாலனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடியது. பட்டினப்பாலை இவை மூன்றும் அகப்பாடல்கள் எனப்படும். பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு நக்கீரரால் பாடப்பட்டது நெடுநல்வாடை. மாங்குடி மருதனாரால் பாடப்பட்டது மதுரைக்காஞ்சி. இவை இரண்டும் புறப்பாடல்கள் எனப்படும்.**

**எட்டுத்தொகை நூல்களாவன; ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநாநூறு, கலித்தொகைப் பாடல்கள்,**

**அகப்பாடல்கள் என்றும், புறநானூறு, பதிற்றுப்பத்து, என்பன புறப்பாடல்களென்றும், பரிபாடல் அகமும் புறமும் கலந்த நூலென்றும் கூறப்படும் எட்டுத்தொகை நூல்களின் பாடல்களை பல புலவர்களால் பாடப்பட்டதாகும்.**

109. பத்துப்பாட்டில் அடங்கியுள்ள நூல்களின் உட்பொருளைச் சுருங்கக் கூறுக?

**ஆற்றுப்படை நூல்கள்**

**திருமுருகாற்றுப்படை :** இதன்பொருள் முருகனிடம் ஆற்றுப்படுத்தல் என்பது இது ஆற்றுப்படை எனும் இலக்கணத்திற்கே மாறானது. முனைவர் துரைசாமிப்பிள்ளையவர்கள் இதற்கு அன்பர்களிடம் அன்பைப்பெற முருகனை ஆற்றுப்படுத்தலென்பதுதான் என்பார். இது **முருகனின் ஆறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) திருவாவினன்குடி (பழனி), திருவேரகம்(சுவாமிமலை), குன்று தோறாடல், பழமுதிர்ச்சோலை (அழகர்மலை)** போன்றவற்றைப் புகழும் ஆறு பகுதிகளதகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதற்பகுதியில் முருகனின் உருவம், அணியும் மாலை, சூரமகளிர் செயல், சூரனை அழித்தல், மதுரையின் சிறப்பும் திருப்பரம்குன்றத்தின் இயற்கைவளமும் கூறப்படுகிறது.

இரண்டாம் பகுதியில் அவரின் யானையின் இயல்பு, ஆறுமுகங்களின், 12 கைகளின் செயற்பாடுகள், திருச்சீரலைவாயிலில் அவரின் தோற்றமும் கூறப்படுகின்றன. மூன்றாம் பகுதி முனிவரின் பண்புகள், தையலர் வனப்பு போன்றன உணர்த்தப்டுகின்றன. நான்காம் பகுதியில் அந்தணர் ஒழுக்கமும், வழிபடும் முறையும் சொல்லப்படுகின்றன. ஐந்தாம் பகுதி குன்றக்குரவையின் நிகழ்ச்சியும், மாடு ஆடு மகளிர் பண்புகளும், ஆடை, அணி, செய்கை போன்றனவும் சொல்லப்டுகின்றன. ஆயும் பகுதி முருகனின் இடங்களையும், ஆற்றுப்படுத்தும் முறையையும், அருள்பெறும் வழியையும், பழமுதிர்சோலையில் உள்ள அருவியின் சிறப்பையும் விரித்துக் கூறுகிறது.

**பொருநர் ஆற்றுப்படை :** ஏர்க்களம், போர்க்களம், பரணி

பாடுவோர் என பொருநர் மூவகைப்படுவர். இங்கு பொருநர் என்பது புகழ்ந்துபாடுவோரை சுட்டும். பரிசில் பெறக்கருதிய ஒரு பொருநனை பரிசில் பெற்ற ஒரு பொருநன் சோழன் கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்துவதாக 218 வரிகளில் முடத்தாமக் கண்ணியார் பாடியுள்ளார்.

இந்நூல் பெருவளத்தானின் கொடைத்திறன் "வெண்ணி"யில் சேரமன்னனை வென்ற வீரச் செய்தியையும், அரசியல் மேன்மையையும் கூறுகிறது. சோழநாட்டின் கலை, இயற்கைச் செல்வங்கள், காவிரிச்செழிப்பு, யாழின் சிறப்பு, அதில் பிறக்கும் இசையின் உயர்வு பற்றிக் கூறுவதால் இசையின் அன்றிருந்த மேன்மையை வெளிப்படுத்துவதாய் உள்ளது. அத்தோடு பாம்பின் தோல்போல் வழவழப்பும் பளபளப்பும் அமைந்த துணிகளை நெய்யும் நெசவாளர் அன்றிருந்ததைக் குறிபிடுகிறது. உண்பதற்கு முன் காக்கைக்குச் சோறிடும் வழக்கத்தை இந்நூல் வெளிப்படுத்தும்.

**சிறுபாணாற்றுப்படை** : பாணரென்போர் பண்பாடுவோர். இவர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், இரந்துண்டுவாழும் மண்டைப்பாணர் என மூவகைப்படுவர். பெரும்யாழை வாசிப்போர் பெரும்பாணார் என்றும் சிறுயாழை வாசிப்போர் சிறுபாணர் என்றும் பிரிக்கப்படுவர். பரிசில் பெற்ற பாணன் ஒருவன் பரிசில் பெற நிற்கும் ஒருவனை ஓய்நாட்டு நல்லியக் கோடன்பால் ஆற்றுப்படுத்துவதாக இடைக்கழி நாட்டைச் சேர்ந்த நல்லூ ர் நத்தத்தனார் பாடியது. சிறிய யாழைக் கொண்ட பாணனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் சிறுபாணராற்றுப்படையெனவும் கொள்ள முடியும்.

இங்கு வஞ்சிமாநகரின் பெருமையும், தமிழ்நிலை பெற்ற மதுரையின் மேன்மையும், உறையூரின் செழிப்பும், வனப்பும், மயிலுக்குப் போர்வை வழங்கிய பேகன், முல்லைக்கொடிக்குத் தேர் ஈந்த பறம்பில் பாரி, ஓரி, காரி, ஆய், அதியமான், நள்ளி ஆகிய கடையெழுவள்ளல்களின் கொடைச்சிறப்புக்களையும், நெய்தல், முல்லை, மருதம் போன்ற. நில இயல்புகளையும்

யாழ் வருணனையும், பாணரின் ஏழ்மையும், நல்லியக் கோடனின் தோழாண்மையும், பாணனை வரவேற்று அடிசிலும், பரிசிலும் வழங்கும் சிறப்பும் இந்நூலில் இடம்பெறுகின்றன. அது மாத்திரமல்லாது பாணனின் மிகவும் தாழ்ந்த வறுமை நிலையை கூறும்போது உண்ண உணவின்றி வேளைக்கீரையைக் கிள்ளியெடுத்து உப்பிடாது அவித்து மற்றவர்கள் இதைக்கண்டு நகைப்பார்களோ எனக் கருதி வாயிலை மறைப்பிட்டு மறைத்து சுற்றத்துடன் உட்கார்ந்து உண்ணும் காட்சியை உரைப்பதானது நெஞ்சத்தை நெகிழவைப்பதாகும்.

**பெரும்பாணாற்றுப்படை** : பரிசு பெற்ற பெருயாழ்பாணன் வறுமையால் வாடியமற்றொருவனைத் தொண்டைமான் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துவதாக 500 அடிகளில் பாடியுள்ளார் உருத்திரங்கண்ணனார். இதைப் பாணாறு என்றும் கூறுவர். பாணனின் யாழின் இயல்பு, வறுமைநிலை, இளந்திரையனின் ஆளுமைச்சிறப்பு, உப்பு வணிகர் செலவு, எயிற்றியர் குடிசை புல்லரிசி உணவு, வீரக்குடி மகளிர் மாண்பு, இடையர், உழவர் குடியிருப்புக்களின் அமைப்பு, அவர்களின் தொழில்கள், பணிகள், வலைஞர், அந்தணர் செயல்கள், குடியிருப்புக்கள், நலன்கள், பட்டினத்தின் சிறப்பு, திரு.வெ.ஃ. காலில் திருமாலின் பள்ளிகொள்ளும் அழகு, காஞ்சிநகரின் சிறப்பு, கலங்கரைவிளக்கத்தின் மாண்பு, இளந்திரையனின் வீரமும், நெஞ்ச ஈரமும் பரிசிலரை ஓம்பும் சிறப்பும் விரிவாகக் கூறப்படுகின்றன.

அதுமட்டுமல்ல ஐந்திணைகள் பற்றிய விரிப்பும், அந்நில மக்களின் வரவேற்று விருந்தோம்பும் பண்பும் நெல்லின், வரகரிசி, வெள்ளைச் சோறுகள், உடும்பு, கோழி, அவரை பருப்பு, இறைச்சி, கள், மாதுளங்காய்ப் பொரியல், மாங்காய் ஊறுகாய் போன்றவற்றையும் விருந்தினர்க்கு வழங்குவதையும், ஆடையும், பொன்னும் பொருளும் அளித்து குதிரை (புரவி) த்தேரில் அவர்களை அனுப்பும் செயல்களையும் இந்நூல் சிறப்புற எடுத்தியம்புகின்றது.

***மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)*** : *பரிசு பெற்ற கூத்தன் வழியில் வாடி நின்ற கூத்தனை நன்னனிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்துவதாக இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் 583 அடிகளில் இந்நூலை யாத்துள்ளார்.* **யானையை மலையாகவும், அதன் மதநீர் ஓசையை கடாம் என்றும் சிறப்பித்ததால் இது மலைபடுகடாம் என்றாயிற்று.** *யாழின் இயல்பு, பலவகை இசைக்கருவிகளின் பெயர்கள், குறவர் வேடர்களின் விருந்தோம்பும் பண்பும், நன்னனது ஊரின் பெயரையும், அவனைக் காண வருவோர் கொண்டுவரும் பரிசுப் பொருட்களும், பன்றி, பாம்பு போன்றவற்றால் ஏற்படும் இடையூறுகளை தவிர்த்து உதவும் குறவர்களின் உதவிகளும் விளக்கப்பட்டுள்ளன.*

*மான்கள், புலிகள், மயில்கள், கடாக்கள், குரங்குகள், யானைக்கன்றுகள், பாம்புகள் போன்றவற்றின் தோற்றங்களையும், செயற்பாடுகளையும், இயற்கைக் காட்சிகளையும் சிறப்புற வரிக்குவரி காணக்கிடக்கிறது. அத்தோடு இருபது (20) வகை மலை ஓசைகளையும் நூல் குறிப்பிடும், மலையின் இயல்பையும், அம்மலைவாழ் மக்களையும் இந்நூல் கூறுவது போல் வேறெது நூலும் கூறவில்லையென்பர்.*

**அகப்பொருள் நூல்கள் :**

***குறிஞ்சிப்பாட்டு*** : *இந்நூல்; ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழைப் பற்றிக் கூறுவதாகக் காதலரின் களவொழுக்கத்தை சிறப்புறக்கூறும் குறிஞ்சிப்பாட்டு, தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி செவிலித்தாயூடாகக் கூறி கற்பொழுக்க (திருமண)த்திற்கு இட்டுச் செல்லும் முறையில் கபிலரால் 261 அடிகளில் பாடப்பட்டது. இயற்கை நிகழ்ச்சிகளை மனதில் பதியுமாறு படம்போல எடுத்துக்காட்டுகின்றார்.*

*ஆசிரியரின் மாலை நேர வருணனை மனத்தைக் கொள்ளை கொள்வதாயுள்ளது. அடுத்து தலைவனின் மலைவளம் பற்றி விரிக்கும் பகுதி மிகமிகச் சிறப்புடையது. பொன்னாலும்,*

மணியாலும், முத்தாலும் செய்யும் அணிகலன்கள் குறைவுபட்டாலும் அதை நிறைவு செய்து கொள்ளலாம். ஆனால் மக்களின் பண்பொழுக்கம் சிதைவுபட்டால் அதை ஈடுசெய்ய எதுவுமில்லை என்பார். காந்தாள் பூ முதல் எருக்கு வரையுள்ள 99 மலர்களையும் குறிஞ்சி நில ஒழுக்கத்தையும் இந்நூல் காட்டுவது போல் இதற்கு இணையான நூல் வேறெதுவுமில்லை என்பர் அறிஞர்.

**முல்லைப்பாட்டு** : பத்துப்பாட்டில் மிகவும் சிறியது 103 அடிகள் மட்டுமே பிரிந்த தலைவன் திரும்பும்வரை ஆற்றியிருக்கும் தலைவியின் முல்லை என்ற கற்பினை காவிரிப்பூம்பட்டின பொன் வணிகர்மகன் நப்பூதனார் மேன்மையுறப் பாடுகின்றனர். இங்கு முது பெண்டிர் விரிச்சி பார்க்கும் முறை, பாசறை அமைப்பு, இதில் பள்ளியறை அமைப்பு, யானையைப் பழக்கும் முறை, வீரமங்கையர், நாழிகைக் கணக்கர், மெய்காப்பாளர் தொழில்முறைகள், தழும்புபட்ட வீரனை அரசன் கண்டு, நினைந்து துன்புறல், தலைவியின் ஆறாத்துயர், கார்காலப்பொழுதில் வனவழியில் தோன்றும் இயற்கை அழகு போன்றன சிறப்புற வெளிப்படுத்தப்படுகின்றன.

இது கற்போர் மனதை கவர்ந்திழுக்கும் பிரிந்த தலைவனின் வரவையும், கார்கால வரவையும் மிகநுட்பமாக எடுத்தியம்பும் இம் முல்லைத்திணைப்பாட்டு அகநானூறு ஆகியவற்றில் கூட இல்லை என்பார் கற்றறிந்தார். மறைமலை அடிகளும் இதற்குச் சிறந்த உரையொன்றை எழுதியுள்ளாராம்.

**பட்டினப்பாலை** : காவிரிப்பூம்பட்டினத்தின் வளத்தையும், பாலைத் திணையையும் ஒன்றாய் கூறுவதால் இந்நூல் பட்டனப்பாலை எனப் பெயர் பெற்றது போலும். கரிகாலனின் பெருவளம் கண்டு கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் இந்நூல் இயற்றப்பட்டது. பொன்கொழிக்கும் காவிரியாற்றின் பொய்யா வளமையையும் கழனிகள், மக்களின் வாழ்க்கை, அட்டிற்சாலை, அறச்சாலைகளின் இயல்புகளையும், பரதவர், சுங்கத்தொழிலர், துறைமுகத்தில் குவிந்து கிடக்கும் பன்னாட்டு

வளம், ஆவணச் செழிப்பு, காட்சியளிக்கும் கொடிகளையும், அங்கு வாழும் அந்தணர், வணிகர், வேளாளர் தொழிலையும், பண்பையும், கரிகாலன் இளமையில் சிறையிருந்த செய்தியையும், அரசுரிமை பெற்றதையும் பகைவர் நாடுகளைச் சூறையாடியதையும், ஒளியர், அருவாளர், வடவர், குடவர், பொதுவர், இருங்கோவேள் மருங்குசாயவும் அடக்கி ஒடுக்கி வென்ற கரிகாலனின் திறத்தையும், உறையூரை, குளம் தொட்டு வளம் பெருக்கியதையும் ஆசிரியர் அழகுற கற்பனைத் திறத்தோடு ஆக்கி அமைத்துள்ளார்.

வயங்குவெண்மீன், திசை திரிந்து தெற்கே சென்றால் நாட்டிற்குத் தீங்காகும் என்று கூறுவது ஆசிரியரின் வானநூல் அறிவை வெளிப்படுத்தும். நீரின் வழி புரவியும், நிலத்தின் வழி மிளகும், வடமலையிலிருந்து ஆரமும், அகிலும், தென்கடலிலிருந்து முத்தும், குணக்கடலிலிருந்து பவளமும், ஈழத்திலிருந்து உணவும், காழத்தி (பர்மா)லிருந்து விளை பொருட்களும் காவிரிப்பூம்பட்டினத்தில் குவிந்து கிடந்தன என்றும் கூறுகின்றார். இவையெல்லாம் ஆசிரியரின் வரலாற்றறிவை துலக்கி நிற்பவையாகும். ஆசிரியரின் கற்பனைத்திறனோ நினைந்து நினைந்து மகிழவைப்பது என்பதை காயும் நெல்லைக் கவரவரும் கோழிகளை பொன்னணி காதில் அணிந்திருந்த பெண்கள் அவ் அணிகளால் விரட்ட அம்மணிகள் கழன்று சிறுவர்கள் ஓட்டிச் செல்லும் தேர் சில்லில் பொறுத்துத் தடுப்பதை போன்று **"விலக்க விலகும் பகையல்லது வேறு உள்ளத்தைக் கலக்கக் கலங்கும் பகையில்லை"** என்று கூறுவது எவ்வளவு நயம்மிக்க கூற்று இப்படிப்பல. இவை ஆசிரியரின் கற்பனைத்திறத்திற்கு ஒப்பற்ற சான்றாகும்.

### புறப்பொருள் நூல்கள்

**நெடுநல்வாடை :** தலையாங்கானத்து செருவென்ற பாண்டியனைப் பிரிந்து வருந்தும் அரசியின் துயர் நீங்க அரசன் போரில் வென்று விரைவில் வரவேண்டும் எனக் கொற்றவையைப் பரவிப்பாடுவதாக நக்கீரரால் 188 அடிகளில் பாடப்பட்டது. கூதிர் காலத்தில் குளிரின் வருத்தல், அரசியின் அரண்மனை

அமைப்பு, அவள் துயிலும் கட்டிலின் கைத்தொழில் வனப்பு, பாயலின் சிறப்பு, அரசி அரசனைப் பிரியுமுன்னும் பின் இருந்த நிலை, பிரிவின் வருத்தம் அத்துயர் தீர செவியியரும், மகளிரும் ஆற்றும் முறைகள், அரசிக்கு பிரிவுத்துயரால் வாடைக்காற்று நெடியதாகவும், போரில் நின்ற அரசனுக்கு வெற்றி பெற வாடைக்காற்று நன்றாய் அமைத்தால் இந்நூல் "நெடுநல்வாடை" என கலையழகுமிக்க தலைப்பாய் அமைத்துள்ளார் ஆசிரியர்.

கூதிர் காலச் சித்தரிப்போ இலக்கிய நயமும் ஓவிய அழகும் வாய்ந்ததாய் இயற்கை எழிலை கவின்பட வெளிப்படுத்தும் ஆற்றலில் நக்கீரர் எவ்வளவு கைதேர்ந்தவர் என்பதை எடுத்துரைக்கும். அரசர் தளும்புற்ற வீரரை மழை, இரவென்று பாராது, துயிலாது அவர்களைச் சென்று பார்த்துப் பாராட்டும், ஆறுதலும் கூறும், செயல் அவனது எளிமையை, அருள் உள்ளத்தை வெளிப்படுத்துவதாகும். பூமலர்ந்து பொழுதறியும் வழக்கத்தையும், மாலைக்காலத்தை மகளிர் கொண்டாடும் (தகழியில் நெய்யிட்டு திரியைக் கொளுத்தி வீளக்கேற்றிப் பூவும் நெல்லும் தூவி இல்லுறை தெய்வத்தை வணங்குவது) முறையையும் இந்நூல் சிறப்பித்துக் கூறும். இந்நூலை பத்துப்பாட்டில் ஒரு முத்துப் பாட்டென்பார் **"தமிழ் இலக்கிய வரலாற்றி"ல் பேரா. எம்மார். அடைக்கலசாமி.**

**மதுரைக்காஞ்சி** : மாங்குடி மருதனாரால் 782 அடிகளில் உலக இன்பம், செல்வம், இளமை, இவ்வுடல் ஆகியவையை பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கு நிலையில்லாதவை எனக் காட்ட யாக்கப்பெற்றதே இம்மதுரைக்காஞ்சி நூலாகும். அதாவது காஞ்சித்திணையை விரித்துக் கூறுவது. இவன் போரைப் பொழுதுபோக்காகவும், உலக இன்பத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுமிருந்தான். தமிழ்நாடு முழுவதையும் தனித்து ஆண்டவன். இருபெரும் வேந்தனையும் ஐம்பெரும்வேளிரையும் நொடிப்பொழுதில் வென்ற அவனின் ஆண்மை, அவன் முன்னோர்களின் ஆட்சித்திறன், அரசியல் நேர்மை, போன்றவற்றை விரித்துக்கூறி கடைசியில் மற்றவர் போல் எல்லாவற்றையும் இழந்து மறையவேண்டியதை அதாவது

காஞ்சிக்கருத்தை திறம்பட சில வரிகளில் எடுத்துக்கூறுவது புலவரின் பேரறிவிற்குச் சான்று பகர்வதாகும்.

அத்தோடு பாண்டி நாட்டின் ஒவ்வொரு நிலத்திலும் நடைபெறும் நிகழ்ச்சிகள், காட்சிகள், பற்பல ஓசைகள் பற்றிக் கூறுவதோடு மதுரையின் சிறப்பு, மதில்கள், வைகையாறு, அகழிகளின் சிறப்பையும், நாளங்காடி, அல்லங்காடி போன்றவற்றையும் விரித்துரைக்கின்றார். அத்தோடு மதுரை வாழுநர் மாலை தொடங்கி மறுநாள் காலை வரையான பொழுதைக் கழிக்கும் முறைகளை, பௌத்தப்பள்ளிகளின் செயற்பாடு போன்ற பலவற்றைக் குறிபிடுகின்றனர். காலை தொடங்கி அடுத்தநாள் விடியும் வரை நிகழ்வுகளையும் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். திருப்பரங்குன்ற விழா, மதுரைக்கோவில்களில் நடைபெறும் விழாக்கள், அந்திவிழா, ஏழுநாள் விழா, திருவோணநாள் விழா, கர்னன் பிறந்தநாள் விழா போன்றவற்றையும் குறிப்பிடுவார்.

110. எட்டுத்தொகை நூல்கள் எவை? அவற்றைப்பற்றி சுருங்கக்கூறுக?
எட்டுத்தொகை நூல்களில் **அகப்பொருன் நூல்கள் ஐங்குறுநூறு, 500 பாக்கள், குறுந்தொகை 400 பாக்கள், நற்றிணை 400 பாக்கள், அகநானூறு 400 பாக்கள், கலித்தொகை 149 பாக்கள், புறப்பொருள் நூல்கள் புறநானூறு 400 பாக்கள், பதிற்றுப்பத்து 80 பாக்கள், அகமும்புறமும் கலந்த நூல் பரிபாடலாகும்.**

**ஐங்குறுநூறு :**

"மருதம் ஓரம் போகி நெய்தல் அம்மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் - கருதிய
பாலை ஓதலாந்தை பனி முல்லையேனே
நூலை ஓதம் ஐங்குறுநூறு" - என்ற தனிப்பாடல்

ஒவ்வொரு திணையையும் நெஞ்சில் நிறுத்த யாத்த பாடலாகும். இப்பாடல்கள் மூன்றடி சிற்றெல்லையையும் ஆறடி பேரெல்லையையும் கொண்டவை. இதனை தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, தொகுத்தவர் கூடலூர்க்கிழார். பதிற்றுப்பத்து முழுவதும் சேரமன்னர்கள் பற்றியதாய் இருப்பதால் இவை

சேர நாட்டில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். இந்நூலுக்கு ஔவை.க.துரைசாமிப்பிள்ளை உரையெழுதியுள்ளார். இதில் பத்துக்கள் சொல்லாட்சியும், பொருளாட்சியும் கருதி; எருமைப்பத்து, அன்னாய்ப்பத்து, இளவேனிற் பத்து, தெய்யோபத்து என்றவாறாகப் பெயரிடப்பட்டுள்ளன. இதன் அடிக்குறிப்புக்கள் பொருத்தமும், விளக்கமும், தொன்மையும் மிக்கவையாகும்.

**குறுந்தொகை** : இப்பாடல்களில் முதல் கருவைவிட உரிப்பொருட்கே சிறப்பிடமாம். அகத்திணையின் உயிரோட்டத்தைக் காட்டவல்லதாயும், உணர்வு மிகுந்தும் காணப்படும். பூரிக்கோ அவர்களால் தொகுக்கப்பட்டு, உரையெழுதிப் பதிப்பித்தவர் உ.வே.சாமிநாதைய்யராவார். நாலடிச் சிற்றெல்லையையும், எட்டடிப் பேரெல்லையையும் கொண்ட 400 பாடல்களை உள்ளடக்கியது.

இங்கு தனக்கும் தலைவனுக்கும் இடைப்பட்ட காதல், புவியை விட பரந்ததாகவும் வானைவிட உயர்ந்ததாகவும், கடலைவிட ஆழமானதாகவும் தோழியிடம் எடுத்துரைக்கின்றாள் ஒரு பாடலில் (3). பிரிந்த தலைவன் வராமையைக் கண்டு மாலை நேரத்தில் பறவைகள் தங்கள் கூடுநோக்கி தம்குஞ்சுக்கு வாயில் இரைகொண்டு செல்வதைக் கண்டு தலைவி மனம் வெதும்பும் பாடல் நம் நெஞ்சையும் வாட்டுகின்றது (9). அதேபோல் இன்னொரு பாடலில் (167) தாய் தன் மகள் திருமணமாகிய நாட்களில் சமைத்த உணவை (புதுப்பழக்கம்) மாப்பிள்ளை நன்று நன்று எனக் கூறி உண்ணும் பாங்கை நல்லற வாழ்வாகக் கண்டு மகிழ்கின்றாள்.

இந்நூலில் பாடலால் பெயர் பெற்றவர் (எ.கா.கள்பொரு சிறுநுரையார் - 290) பதினெட்டுப்பேருக்கு மேல் உள்ளனர். இவர்களில் சிலர் வேறு தொகை நூல்களிலும் இதே பெயரில் குறிக்கப்படுவதாலும், வேறுதொகை நூல்பாடல்களில் வரும் புலவர்களின் பெயர் இதில் காண்படாததாலும் இத்தொகை நூலே (குறுந்தொகை) முதலில் தொகுக்கப்ட்டிருக்க

வேண்டுமென்பார். இத்தொகைநூல் பாக்களை 205 புலவர்கள் யாத்துள்ளனர். இந்நூலின் முதல் 380 பாக்களுக்கு பேராசிரியரும், 20 பாக்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை எழுதியதாக கூறப்படுகிறது. ஆனால் அது இதுவரை கிடைக்கவில்லையென்பர்.

**நற்றிணை :** இது பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் பதிப்பித்து உரை எழுதியுள்ளார். பாடல்கள் 9 அடியைசிற்றெல்லையாகவும் 12 அடிகளைப் பேரெல்லையாகவும் கொண்டவை. பாடிய புலவர் 275 இதில் பாடல் அடியால் பெயர் பெற்றவர் ஏழு பேர். பாண்டியன் மாறன் வழுதியால் தொகுக்கப்பட்டது. பாடலால் பெயர் பெற்ற புலவர் மலையனார், தனிமகனார், தும்பிசேர் கீரனார், தேய்புரிப் பழங்கயிற்றினார் மடல்பாடிய மாதங்கீரனார் போன்றோராவர்.

தலைவனைக் காணாது தலைவி கொண்ட சீற்றத்தைக் குறைக்கும்படி தோழி பாடுவதாக கபிலரால் பாடப்பட்ட பாடல் (32). இங்கு பெரியவர்கள் ஆராய்ந்து பின் நட்புக்கொள்வர். நட்புக்கொண்ட பின் ஆராயமாட்டார் என்று "குறள் 791" இன் கருத்தை தோழி தலைவிக்கு இடித்துக்கூறுகின்றாள். ("நாடி நட்பின் அல்லது நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே" - என்பது பாடலின் கடைசி அடிகள்) இன்னொரு பாடலில் (172)

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள், புன்னையது சிறப்பே
அம்ம நாணுறும் நும்மொடு நகையே!"

அப்பாடலின் மூலம் ஒரு மரத்தையும்(இயற்கை) ஆறு அறிவுடையதாகக் கருதி அதற்கு வெட்கப்படுகின்ற இந்நுட்பமான உணர்வுநிலையை இச்சங்கப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

**அகநானூறு :** இது முழுமையாக அகப்பாடல்கள் கொண்டு

அகத்திணையையே விளக்குவதால் "அகமெ"ன்னும், நீண்ட பாடல்களை அதாவது 13 அடிகளைச் சிற்றெல்லையாகவும் 31 அடிகளை பேரெல்லையாகவும் கொண்டுள்ளதால் "நெடுந்தொகை" என்னும் இருபெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. இதை தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி, தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார். இதில் முதல், கரு, உரி ஆகிய மூன்றும் காணப்படும்.

இவை வரலாற்றுச் செய்திகளாகிய புறத்தையும் மிகுதியாகக் கொண்டுள்ளது. (அகநாநூறு போல புறநாநூறு என்னும் நூலும் தொகுக்கப்ட்டுள்ளது). இந்நூலுக்கு பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். குறுந்தொகை, நற்றிணை, பெருந்தொகை (அகநாநூறு) நூல்களில் 4 அடிமுதல் 31 அடி வரையுள்ள பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அகநாநூற்றுத் தொகுப்பில் முதல் 120 பாக்கள் களிற்றுயானை நிரையெனவும், அடுத்து 180 பாக்கள் மணிமிடை பவளம் எனவும், மிகுதி 100 பாக்கள் நித்தியகோவை எனவும் அழைக்க்படுகின்றன. இதில் ஒற்றைப்படவருவன பாலையெனவும், இரண்டும் எட்டும் (2, 8) ஆனவை குறிஞ்சி எனவும், நாலு, பதின்நான்கு (4, 14) ஆனவை முல்லையெனவும், 6, 16 என வருவன மருதமெனவும், 10, 20 எனவருவன நெய்தலாகவும் வரும், அதாவது 200 பாக்கள் பாலையாகவும், 80 குறிஞ்சியாகவும் 40 முல்லையாகவுழ், 40 மருதமாகவும், 40 நெய்தலாகவும் பெறப்படும்.

அகநாநூற்றின் முதற் பதிப்பாசிரியர் வே.இராசகோபாலச்சாரியார் ஆவார். ந.மு.வெங்கடசாமி நாட்டார், தஞ்சை இரா. வெங்கடசலம்பிள்ளை ஆகியோர் நூல் முழுமைக்கும் உரை எழுதியுள்ளனர். இந்நூலின் 89, 139 பாடல்கள் பண்டைத்தமிழர் திருமணங்கள் எவ்வாறாக நடத்தப்பட்டன எனக்கூறும். தலைவியிடம் தோழி உன் கணவரும் திரும்பிவிட்டார் எனக் கூறி மகிழ்விக்கும் பாடல் (4) இலக்கியநயத்தோடு அமைந்துள்ளது. அதில் தேன் குடிக்கும் வண்டு அஞ்சி ஓடிவிடக்கூடாதே என்று தேரிலுள்ள மணியின் நாவை தேரில் கட்டிவிட்டது போன்ற மனவுணர்வை போற்ற வேண்டும், பேராசிரியர் தொல்காப்பிய

உரையில் இதை நயந்துரைத்துள்ளார்.

**கலித்தொகை :** இது கலிப்பாவால், பரிபாடலால் ஆன 150 பாடல்களைக் கொண்டதொகைநூல். இவை அகப்பொருளைப் பாடுவதற்கு ஆன சிறந்த யாப்பு வடிவங்களென்பார் தொல்காப்பியர் (தொல்.999) இது உலகவாழ்க்கை, நடப்பியல் தழுவிய தொன்ம மரபுடன் கலந்தது. இசைத்தன்மை, ஆடல், உரையாடலுடன் கூடிய ஆக்கமாகும். இதில் பாலையில் 35, குறிஞ்சி 29, மருதம் 35, முல்லை 17, நெய்தல் 33, கடவுள் வாழ்த்து ஒன்று(1)டன் 150. இந்நூல் முழுமையாகவும், இதன் நச்சினார்க்கினியரின் உரை முழுமையாகக் கிடைப்பது பெரும்பேறே. இப்பாடல்கள் உணர்ச்சி ஊட்டுவதனால் சங்க இலக்கியங்களிலிருந்தே நீதிநூல் தோன்றியிருக்க வேண்டும் என்பர் அறிஞர். இந்நூலைத் தொகுத்தவர் நல்லந்துவனாவார்.

‘கற்றறிந்தார் ஏத்தும் கலி’என்னும் கூற்றுக்கு மிகவும் பொருத்தமுடைய சிறந்த பாடல்களை இதிற் காணலாம். ஒவ்வொரு திணையையும் பாடியோர் - **பாலையை பாலைபாடியபெருங்கடுங்கோ, குறிஞ்சி கபிலன், மருதம் மருதன் இளநாகனார், முல்லை சோழன் நல்லுருத்திரன், நெய்தல் நல்லந்துவனார்** ஆவர். இதில் ஒருபாடல் செவிலித்தாய் காதலனுடன் உடன்போக்கிட்ட மகளைத் தேடிச் செல்லும் வழியில் சிலரைச் சந்திக்கின்றாள். அவர்களிடம் என்மகளும், இன்னொருத்தியும் மகனும் சென்றதைக் கண்டீர்களா என வினவ அவர்கள் “காணோம் அங்லேம், கண்டனம்” என்று கூறி, கலி. 9 ஆம் பாடல் வழி; சந்தனம் மலையிலும், முத்துக்கடலிலும், இசையாழிலும் பிறந்தாலும் அது அதைப் பயன்படுத்துபவற்குத்தானே உரியது. உம் மகளும் உமக்கு உரியவளல்ல என்று அறிவுரை கூறி அனுப்புகின்றனர். இப்படி அறிவுரை சார்ந்த பாடல்களைக் கொண்டுள்ளது கலித்தொகை.

**பரிபாடல் :** இது 70 பாடல்களைக் கொண்டது. திருமால் - 8, செவ்வேள் - 31, காளி (காடுகிழாட்கு) - 1, வையை - 26, மதுரை - 4 எனவரும். ஆனால் 22 பாடல்களே இன்று கிடைப்பன.

*இதில் திருமால் - 6, முருகன் - 8, வையை 6, உரைநூல்களில் இருபாடல்கள் ஒன்று திருமால் பற்றியதும், மற்றொன்று வையை பற்றியதுமாகும். வையை காதற்காட்சிகளும், நீர் விளையாட்டும் அழகுறக் கூறுகின்றன. இதற்கும் பரிமேலழகர் உரையெழுதியுள்ளார். மகிழ்வையே பொருளாகக் கொண்டு, மலைவிளையாட்டு, புனல் விளையாட்டு, கடவுள் வாழ்த்து வருமென்பார் பேராசிரியர். பாடலின் துறைவிளக்கம், பாடல் அடிக்குறிப்புக்கள், பாலை யாழ், நோதிறம், காந்தாரம் போன்ற பண்களையும் அறியமுடியும். இது தேவாரப்பண்முறையில் தொகுக்கப்பட்டு, அதே பண்ணுடன் பாட்ப்பட்டுமுள்ளது. இங்கு வையைப் பற்றிய பாடல்களை அகமென்றும், கடவுள் வாழ்த்தைப் புறமென்றும் கூறுவர். அகமும் புறமும் கலந்த நூலாகக் கொள்ளப்படும்.*

**புறநானூறு :** *இது புறப்பொருளாகிய வீரம், கொடை, புகழ் போன்றவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட 400 பாக்களை உடையது. இது தமிழர்களின் வரலாற்றை வெளிப்படுத்தும் நூல். இங்கு மன்னர், மக்கள் உறவு, மன்னர் புலவர் உறவு, புலவர் புலவர் உறவுகள் பற்றி விரிவாக வெளிப்படுத்துவன. பாரி கபிலர் நட்பு, அதியமான் ஔவை நட்பு, கோப்பெரும்சோழன் பிசிராந்தையார் நட்பு, அரசர்களின் கொடைச் சிறப்புக்களும் (கடையெழுவள்ளல்கள்)* ***பாரி, காரி, ஓரி, அதியன், பேகன், நள்ளி, ஆய்*** *போன்றவர்களையும், அரசியற் புலவர்* ***குணவூர்கிழார்*** *பற்றியும், தமிழ்மக்களின் பழக்கவழக்கங்கள் பற்றிய உண்மைச் செய்திகளும் நிறைத்து வைக்கப்பட்ட ஒரு பெட்டகம், வைப்பகம். பாரதப் போரில் பாண்டவர் படைக்கும் நூற்றுவர் (துரியோதனன்) படைக்கும் உணவளித்த பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடுவதை (புற.2) காணலாம்.*

*"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி; வளி தொழில்ஆண்ட உரவோள் மருக" (புற.66) என்ற பாடல்வழி கரிகாற் பெருவளத்தான் முன்னோர் கப்பற் செலவு(பயணம்) செய்தமை வெளிப்படுத்தப்படுகிறது. ஔவையின் "நாடா*

கொன்றோ; காடா கொன்றோ, அவலா கொன்றோ மிசையா கொன்றோ, எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புற.187) பாடல் ஆண் குமுகாயத்தை அவர்களின் கீழ்த்தரச் செயற்பாடுகளை மறைமுகமாகச் சாடி(பெண்ணடிமைத்தனம் போன்றன) அதிலிருந்து நாடு முன்னேற அறைகூவுகின்றார். ஈகையின் சிறப்பை நக்கீரனார் புற.189 இன்வழி வெளிப்படுத்துவார். இப்படியாக நிலைத்த உண்மைகளையும், அன்றைய குமுகாயத்தைக் கண்ணாடி போல் காட்டுவனவுமாகிய பாடல்களைக் கொண்டதே **புறநானூ ற்றுப்பாடல்கள்.**

**பதிற்றுப்பத்து** : இது சேரமன்னர்களை மட்டும் புகழ்ந்து பாடிய தொகைநூல். பத்துப்பத்தாக பத்துமன்னர்களைப் பாடியது. ஆனால் இதில் முதல் பத்தும், கடைசிப் பத்தும் கிடைக்கப்பெறவில்லை. செல்(கறையான்)அரித்துவிட்டதாம். இதற்குப் பழைய உரை ஒன்றிருப்பதாகவும். ஒவ்வொரு பாடல் முடிவிலும் துறை, வண்ணம், தூக்கு (இசை), பாடலின் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடாத நாலாம் பத்து அந்தாதித் தொடையால், நயத்தால் ஆனது. ஐங்குறுநூ ற்றில் 18 ஆம் பத்து இதே தொடையால் ஆனதாகும். ஒவ்வொரு பத்தின் வரலாற்றையும் கூறுவது பதிகமெனப்படும். இதில் பாடியவர் பெயர், பத்துப்பாடல்களின் தலைப்பு, அரசர் பெயர், அவர் ஆண்ட கால அளவு, புலவர் பெற்ற பரிசில் என்பன கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் மெய்கீர்த்திகள் போல் அமைந்தன. பாடியபுலவர், பாடப்பெற்ற மன்னர் வருமாறு,

| | | |
|---|---|---|
| 2ம் பத்து | : குமட்டூர்க்கண்ணனார் | - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் |
| 3ம் பத்து | : பாலைக்கௌதமனார் | - பல்யானைச் செல்கெழு குட்டுவன் |
| 4ம் பத்து | : காப்பியாற்றுக் காப்பியனார் | -களங்காய்க்கண்ணிநார் முடிச்சேரல் |
| 5ம் பத்து | : பரணர் | -கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் |
| 6ம் பத்து | : காக்கை பாடினியார் | -ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் |

7ம் பத்து : கபிலர் - செல்வக்கடுங்கோவாழியாதன்
8ம் பத்து : அரிசில்கிழார் - தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
9ம் பத்து : பெருங்குன்றூர்கிழார் - இளஞ்சேரலிரும்பொறை

இமயவரம்பனின் வீரத்தை 11 ஆம்பாடல் வழி (2ம்பத்து) சிறப்பித்து கூறி அப்பாடலுக்கு 'புண்ணுமிழ் குருதி' எனத்தலைப்பிடவும்பட்டுள்ளது. இன்று நூலுக்கு, பாடலுக்குத் தலைப்பிடுவது போன்றே சங்க இலக்கியக் காலத்திலே அன்றைய அறிஞர்களின் திறனாய்வுத்தரத்தை வெளிப்படுத்துகின்றது. இப்பாடலுக்கும் அடிக்குறிப்புக்கள் குறிக்கப்பட்டுள்ளது. அத்தோடு புறநாநூறு, பதிற்றுப்பத்து நூல்கள் புறப்பாடல்களை மதிப்பிட பெரிதும் உதவும். இப்பாடல்கள் மரபு ஆட்சிக்காலத்தில் பாடப்பட்டவையாதலால் அவை ஒரே நோக்கும் போக்கும் உள்ளனவாய் வெளிப்படுகின்றன. இவைகள் கற்பனைவளமும் மிக்கவை.

111. சங்கத்தொகைபாடல்கள் எத்தனை? அதிகபாடல்களைப் பாடியவர்கள் (புலவர்கள்) யார் யார்?
சங்கத்தொகைப்பாடல்கள் 2381 எனவும், பாடியோர் 473 ஆகவும், ஆசிரியர் பெயர் காணாதவை 102 எனவும், இதில்அகம் 1861 ஆகவும் எஞ்சியவை புறமாகும். இதில் கபிலர் - 235 பாடல்களையும், அம்மூவனார் 127, ஓரம்போகியார் 110, பேயனார் 105, ஓதலாந்தையார் 103 பாடல்களையும் பாடியுள்ளனர். இவர்கள் ஐவரும் ஐங்குறுநூறுப் பாடல்களையும் பாடியுள்ளனர். இவர்களை விட ஔவையார் 59, நல்லந்துவனார் 40, நக்கீரர் 37, உலோச்சனார் 35, மாமூலனார் 30, அரசப்புலவர்கள் 31, பெண்பாற் புலவர்கள் 30 ஆகக் காணப்படுகின்றனர்.

112. தமிழ் இலக்கியவரலாற்றில் புதிய திருப்புமுனைகளை உருவாக்கிய நூல்கள், புலவர்கள், ஏனையோர் யாவர்? முதன்மையானவற்றை மட்டும் கூறுக?
**தொல்காப்பியம் :**
கடல்கோள்களாலும், திட்டமிட்ட அழிப்புகளாலும் ஒழித்தவை

போக எஞ்சியவற்றின் துணை கொண்டு தமிழ் வளர்ச்சியின் திறவுகோளாயிருந்து மொழிக்கும், இலக்கிய இலக்கணத்துக்கும் தற்காப்புத் தந்து காப்பாற்றியவர் முதல்நூல் தொகுப்பாசிரியர் தொல்காப்பியர். (தொல் + காப்பு + இயல்) இவர் தந்த நூல் தொல்காப்பியம்.

**திருக்குறள் :**

புத்தம், சமணம், வைதிகம், ஆசிவகம் போன்றன தென்னாட்டிற்குள் ஊடுருவி பல இன்னல்களை விளைவித்த போதும் அவற்றில் சில தேர்ந்த நல்லியல்புகளும் உள்ளடக்கப்பட்டதாய் தமிழ்பண்பாட்டுடன் இணைந்ததாய் புதியதோர் உலகம் செய்ய உயரிய தமிழர் பண்பாட்டு ஒழுக்கவியல் நூலாகிய திருக்குறளைத் தொகுத்தவர் திருவள்ளுவர்.

**சங்கஇலக்கியம்**

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களாகிய பதிணெண்மேற்கணக்கு (அகம், புறம் உள்ளடக்கிய அகம், களவு கற்பையும், புறம் வீரம், புகழ், கொடையையும் வெளிப்படுத்துவன) நூல்களை பாண்டிய சேர அவைகளில் புலவர் பெருமக்களைக்கூட்டி இந்நூல்களை சங்க இலக்கியமாகத் தொகுத்து, இதை தமிழரின் இலக்கியம், பண்பாடு, நாகரிகம் போன்றவற்றின் ஊற்றுக்கண்ணாக்கி வெளிப்படுத்தினர்.

**சிலப்பதிகாரம்**

இது குடிமகளொருத்தியின் காப்பியமாயிருப்பினும், பெண்ணை உயர்நிலைப்படுத்தி, தெய்வநிலைக்காக்கும் காப்பியம்; நூல்முழுவதும் பெண்மைக்கு முதலிடம், சேர, சோழ, பாண்டிய நாடுகளை ஒரே நாடாக, மக்களை ஒரே மக்களாகத் தமிழர் வரலாறு கூறும் ஒரு வரலாற்று நூல். ஆடல், பாடல், இசை, அணிகலன், அழகூட்டும் பொருட்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய உலக அரங்கின் உச்சியில் நிற்கும் தமிழனின் பண்பாட்டை, ஒழுக்கவியலைப் பறைசாற்றும் ஓர் உயரிய படைப்பு. சேரமன்னன் நெடுஞ்சேரலாதன் தம்பி இளங்கோ அடிகள் யாத்த சிலப்பதிகாரமாகும்.

**மணிமேகலை**

*தமிழரின் உயரிய காப்பியங்களில் (சிலப்பதிகாரம், மணிமேகலை) ஒன்று. இவற்றை இரட்டைக்காப்பியமெனவும் கூறுவர். அன்றைய வைதிக வேத மரபாரின் கொள்கைப்படி பெண் எச்சாதியினழும் இழிவுப்பிறவி, அவளுக்குத் துறவு கொள்ளும் உரிமையில்லை என்று கூறப்பட்ட காலத்தில் பௌத்தத்துறவியான சித்தாலைச் சாத்தனாரால் யாக்கப்பட்ட காப்பியம். சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய பௌத்தத்துறவியின் காப்பியம். பெண் இழிவுப்பிறவியல்ல. அவளுக்கும் துறவுகொள்ளும் உரிமையுண்டென்பதை வெளிப்படுத்தும் பெண்ணின் உரிமைக்குரல் நூல். சிலப்பதிகாரமும் கூட பெண்ணுரிமையை வெளிப்படுத்த எழுந்த நூலென்றும் கூறலாம்.*

**நாலடியார்.**

***பதிணெண் கீழ்க்கணக்கு நூல்களாகிய நாலடியார், நான்மணிக்கடினை, இன்னாநாற்பது, இனியவைநாற்பது, திரிகடுகம், ஏலாதி, முதுமொழிக்காஞ்சி, முப்பால், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம் ஆகிய 11 நூல்கள் அறவொழுக்கம் பற்றிய நீதிநூல்களாகும். ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார்நாற்பது ஆகிய ஆறு நூல்கள் அகம்பற்றியன. களவழிநாற்பது, புறம்பற்றிய நூல்*** *இந்நூல்களில் தலைமைவாய்ந்ததாக இந்நாலடியார் கொள்ளப்படும் சமணத்துறவியரால் பாடப்பட்டது.*

**முத்தொள்ளாயிரம்**

*அகம்புறம் சார்ந்த 103 சிறந்த வெண்பாக்களாலாயது உள்ளத்தை அள்ளும் கற்பனைக் கருத்து நடையும், கவிதை நடையுமுள்ளது.*

**பெருங்கதை**

*முழுமையாய்க் கிடைக்கப் பெறவில்லை கொங்குவேள் மாக்கதையென்றும் இந்நூல் ஒரு சமணமத பல்வேறு கலைச்*

செல்வங்களை வெளிப்படுத்தும் நூல்.

**இறையனார் அக்பொருளுரை**

தமிழ் உரைநூல்களில் காலத்தால் முந்தியது. அகப்பொருளை சுருக்கமாய் வெளிப்படுத்தும் செம்மாந்த உரைநடையுடன் கூடியது.

**திருமந்திரம்**

இதுவோர் சமத்துவ உயிரிரக்கக் கோட்பாட்டின் வெளிப்பபாடு. உடலில்லையேல் உயிரில்லை என்பதை வலியுறுத்துவது. ஒருங்கிருக்கை (யோக)நெறியின் வைப்பகம், சிவத்தைப் போற்றும் வாழ்வியல், மெய்யியல் நூல். திருமூலர் அருளிய மூவாயிரம் தமிழென்பர் இந்நூலை.

**நாயன்பார்கள்**

காலத்தால் முற்பட்டவர் காரைக்கால் அம்மையார். மூவர்தேவாரம் - இவை அடங்கிய 12 திருமுறை. தமிழிசையை, தமிழை (மணிப்பிரவாள/மணிப்பவள நடை தகர்க்க) தமிழர் சமயமாம் சிவனியத்தைக் காக்க முயன்றவர்கள். இவர்கள் விட்டுவைக்கப்படாமல் கடவுள் ஆட்கொண்டாரென்று கூறி இவர்கள் உயிர் காவுகொள்ளப்பட்டன. மாணிக்கவாசகப்பெருமானின் திருவாசகம் தனித்தன்மையுடையது.

**ஆழ்வார்கள்**

தமிழ்வேதம் என்று கூறப்படுவது 12 ஆழ்வார்களின் திவ்வியப்பிரபந்தமாகும். இது திருமால் போற்றி (வைணவம்) யாகிய தமிழர்கள் போற்றும் தென்கலைக்குரியது. வடகலை திராவிடர், வடமொழியாளருக்கானது. "மாயோன் மேய காடுறையுலகில்" தோன்றி வளர்ந்தது. சேயோன் மேயமை வரை உலகில் தோன்றி வளர்ந்தது. முருகவழிபாடு, சிவவழிபாடு போன்றவை வழிபாடாகி (சக்தி) ஆற்றல் வழிபாடு இவற்றுள் கலந்தது.

**நிகண்டு**

இவை அகராதி, அகரமுதலி (திருக்குறள், முதற்குறள்) எனப்பட்டவையாகும். அகராதித் தொகுப்பிற்கு திவாகர நிகண்டு, பின்கலந்தை நிகண்டு உறுதுணையானவை. முதலில் வீரமாமுனிவர் எனப்பட்ட இத்தாலிநாட்டைச் சேர்ந்த பொச்கி சதுர அகராதி அமைத்து வழிகாட்டியவராவார்.

**உரையாசிரியர்கள்**

இவர்களின் உரைநடையினாலேயே இலக்கிய, இலக்கணங்களை புரிந்துகொள்ள இலகுவாயிருந்தது. ஏனெனில் இவை பாவடிவிலிருந்ததாலும் பல சங்ககாலத் தமிழ்ச் சொற்கள் பயன்பாட்டிலிருந்து அருகியிருந்ததாலும் இலக்கிய உரையாசிரியர்கள், இலக்கணவுரையாசிரியர்களெனப் பலர் செயற்பட்டனர். இவர்களில் இனம்பூரணர், பேராசிரியர், நச்சினாற்கினியர், அடியார்க்கு நல்லார் மயிலைநாதர், சேனவராயர் எனத்தொடரும்.

**சீவகசிந்தாமணி**

இது திருத்தக்கதேவர் என்ற சமணரால் தொகுக்கப்பட்டது. இது காப்பியத்திறனும், கற்பனை மரபுகள், சந்தவிருத்த வகைகளைக் கொண்டு யாக்கப்பெற்ற பலரும் போற்றும் காப்பியங்கள் ஐந்தில் ஒன்றாகும். ஏனையவை உலக இலக்கிய உச்சியில் நிற்கும் இரட்டைக்காப்பியமெனக் கூறப்டும் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்று வளையாதி, குண்டலகேசி போன்றவையாகும்.

**பெரியதொன்மம் (புராணம்)**

சமண, பௌத்த மதங்களை புறந்தள்ளவும், வைதிகவேத சாதியத்திற்கு எதிராகவும், தொண்டினையே உணர்வு(பக்தி) வழியாக்கி ஒரு கொள்கையில்லாக் கூட்டணியாகி செயற்பட்டதின் வெளிப்பாடு என்பார் தமிழண்ணல் தமது "புதிய இலக்கிய வரலாற்றில்," ஆராய்ந்து படிக்கவேண்டிய நூல்.

**கம்பராமாயாணம்**

கவிநயம் மிக்க ஒரு காப்பியம். தமிழ் சுவையை

உயர்நவிர்ச்சியுடன் கற்பனை கலந்த வர்ணணை நூல். சிவஅடியானை, ஆயகலைகள் பத்தில் கைதேர்ந்தவனுமான இலங்கையர்கோன் இராவணனை, தமிழர் தம் ஒழுக்கவியலை இழிவுபடுத்தும் காப்பியம். இராவணணா! இராமனா! தமிழன்? அல்லது இருவருமே தமிழர்களா? எங்கோ ஒரு மூலையில் (நடந்ததோ நடக்கவில்லையோ) நடந்ததான கதையை மெருகூட்டி செப்பமிட்டு கற்னை புனைவுகளோடு கம்பரால் (தமிழரால்) எழுதப்பட்ட காப்பியம். எனம் (பாத்திரம்) பொன்னாலானது உள்ளிருக்கும் பால் உடலுக்கு ஏற்றம் (ஆற்றல்) தருவது, ஆனால் அதனுள் ஒரு துளி நஞ்சு(விசம்) இதைப் பருகலாமோ.

### சித்தர்கள்

பதிணெண் சித்தர்கள் என அழைக்கப்படுபவர் மக்களின் மூடநம்பிக்கைகளை ஒழித்து அவர்கள் வாழ்வியலில் புதுமைகள் புகுத்த முனைந்தவர்கள். இவர்களின் ஆக்கம் யாப்பு வகைகளும், கருத்துவகைகளும், தனித்துவமானவை. தேர்ந்து கற்கவேண்டியவை.

### சிற்றிலக்கியங்கள்

இவ்வகையில் ஆற்றுப்படைகள், கலிங்கத்துப்பரணி, தமிழ்விடுதூ து, மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ் போன்ற பல நூல்கள் உள. நெடும்பாடல்களால் ஆனது. தமிழ் இலக்கியம் அனைத்திலும் விரவிக்கிடக்கின்றது.

### சிற்றிலக்கணம்

நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை போன்றவற்றைக் குறிப்பிடலாம். எழுத்து, சொல், அகம், புறம் பற்றிய பிற்கால இலக்கண நூல்களும் பல உள.

### பிற்கால உணர்வு(பக்தி)இலக்கியங்கள்

தாயுமானவர், அருணகிரிநாதர், குமரகுருபரர், பட்டினத்தார்,

தண்டபாணி சுவாமிகள், அண்ணாமலைச் செட்டியார் போல்வார் இதில் அடக்கம். தண்டபானி அடிகளார் அறுவகை இலக்கணம், புலவர் தொன்மம்(புராணம்), வண்ணவகை இலக்கணம் எனப்பலவற்றில் புலமையாளர்.

**கீர்த்தனை(இசை), நாடகங்கள்**

தமிழிசை வளர்ச்சிக்கு மூலமானவை இக்கீர்த்தனை நாடகங்கள், பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணீயம் புதுவகைக்கவிதை நாடகமாய் ஒரு பெரிய தலைமுறையைத் தோற்றுவித்தது. மேடை நாடகங்களும் குறிப்பிடத்தக்கன.

**வடமொழிமேலாண்மையும், கிரந்த எழுத்து உள்நுழைப்புகளும்**

கடைச்சங்கத்திற்கும், சில்பபதிகார மணிமேகலை யாக்கப்பட்ட கடைக்கூறுக் காலத்திலுமிருந்து அதாவது கி.பி.3 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னதாக களப்பிரர், பல்லவர் ஆட்சிக்காலத்தில் வடமொழியும், கிரந்த எழுத்துக்களும் தமிழுள் ஊடுருவி தமிழைச் சிதைக்கமுற்பட்டது. அதுமாத்திரமல்லாது சிவமதமாயிருந்த சைவமதத்தையும் ஊடறுத்து தமிழ் கடவுளரை வைதீக வேத மதக் கடவுளருள் புதைத்தனர். தமிழ் மணிப்பவள அல்லது மணிப்பிரவாள நடையாகமாறியது.

இக்காலகட்டத்திலேயே தமிழ் சைவப்பெரியார்கள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் தோன்றி தமிழையும், சைவத்தையும் காக்க விளைந்தனர். ஆனால் இவர்கள் திட்டமிட்டு காவு கொள்ளப்பட்டனர். இக்காலகட்டத்தில் தமிழிலிருந்து கொடும் தமிழாகிப் பிறந்தமொழியே மலையாளமொழி. அதுவும் ஒரு தனிநாடாக மாறியது. எஞ்சிய தமிழும் 70 விழுக்காடு வடமொழிச்சொற்களையும், கிரந்த எழுத்துக்களை உள்வாங்கியும் ஆனது. ஊர்கள், கோவில்கள், சைவக்கடவுளர் யாவருக்குமே மொழிமாற்றி வடமொழிப் பெயர்கள் சூட்டப்பட்டன. தமிழ் தீட்டுமொழி யாக்கப்பட்டது. தமிழனும் கடைச்சாதி சூத்தரன் ஆக்கப்பட்டான். **அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழ் பெரியார்களும் வடமொழிக்கலப்பான இம்மொழியையும், வைதிகமதத்தையும் "சுதேசியம்" என்று**

**கூறிக்கொண்டு பெருமையடைந்தனர். ஏனெனில் அன்றிருந்த (20 ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை) மொழிதான் தம் தேசிய மொழியென்றும், வைதிகக் கடவுளரும், சமற்கிருதமும் தேசியமதமென்றும் கொண்டாடினர் தமிழர்கள்.**

**தனித்தமிழ் இயக்கம்**

*இதற்கு வித்திட்டவர்* ***சுவாமி வேதாச்சலமெனக் கூறப்பட்ட மறைமலை அடிகளார்.*** *இவரின் காலமாகிய கி.பி.20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழால் தனித்தியங்க முடியுமென்னும் அடிப்படையில் தமிழறிஞர்கள் இவர் தலைமையில் தனித்தமிழ் இயக்கத்தை உருவாக்கி அதற்கு செயல் வடிவமும் கொடுத்தனர். 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில் வடமொழிச் சொற்கள் களையப்பட்டு தமிழ்மொழி ஒரு பெரிய மறுமலர்ச்சியைக் கண்டது. தமிழில் வடமொழிக் கலப்பு கிட்டத்தட்ட 40 விழுக்காட்டிற்குக் குறைக்கப்பட்டது.*

*அவரின் சம காலத்தவரான ஞானப்பிரகாச அடிகளார் (நல்லூர்) வேர்ச்சொல் ஆய்விலீடுபட்டு தமிழுக்குப் புதுப்பொலிவை ஊட்டினார். இவரைத் தொடர்ந்து தேவநேயப்பாவாணவர் அவர்கள் தனித்தமிழையும் வேர்ச்சொல் ஆய்வையும் மேற்கொண்டு உலக மொழிகளுக்கெல்லாம் வித்து, வேர், முளை, மரம், கிளை எல்லாமே தமிழ்தான் என நிறுவமுயன்று இன்று அது வெற்றி இலக்கையடையும் நிலையிலுள்ளது. ஆனாலும் எம்மவர் வடமொழியும், கிரந்தமும் சேர்ந்ததுதான் சுதேசிய, மொழி, மதமென்று நினைத்து* ***சுதேசியத்திற்கு பழையதே புதிய வரைவிலக்கணமென்கின்றனர்.*** *இதை ஏன் சிந்திக்க மறுக்கின்றனர். அதுதான் மூளைச்சலவையின் ஆழமோ! பாரதியார், அறிஞர் அண்ணா, பாரதிதாசன், ஈ.வே.இராமசாமிப் பெரியார் போன்றோரும் மக்கள், மொழி, மதத்தில் மறுமலர்ச்சி ஏற்படத் துணிந்து போராடினர்.*

*113. சங்க கால நூல்களென முதலில் கொள்ளப்பட்ட நூல்கள் எவை? அவை இன்று எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது?*

*சங்க கால நூல்களாகக் முதலில் கொள்ளப்பட்ட நூல்கள் பத்துப்பாட்டு எட்டுத் தொகை (இவை பதிணெண்மேற்கணக்கு) பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள் ஆகியனவாகும். ஆனால் இன்று கடைச்சங்க கால நூல்களாகப் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் கொள்ளப்படுகிறது. சங்கம் மருவிய கால நூல்களாகவே பதிணென் கீழ்கணக்கு நூல்கள் கொள்ளப்படுகின்றன. இதில் 11 நூல்கள் அற (நீதி) நூல்களாகவும், 6 நூல்கள் அகப்பொருள் நூலாகவும் ஒரு (1) நூல் புறப் பொருள் நூலாகவும் கொள்ளப்படுகின்றது. ஆனால் இதில் ஒன்றாகச் சிலரால் கொள்ளப்படும் திருக்குறள் சங்க காலத்திற்கும் மிகத்தொன்மையானதொன்றான கருத்தும் நிலவுகிறது. (சிந்து வெளி, சுக்கூர் அகழ்வுகளால்) இதனிடத்தில் சில அறிஞர்கள் திருவள்ளுவ மாலையை கீழ்கணக்கு நூல்களில் ஒன்றாகக் கொள்கின்றனர்.*

114. *சங்கப்பாடல்களை யார்த்த குறிப்பிடத்தக்க புலவர்கள் யாவர்?* ***முடமோசியார், உருத்திரங் கண்ணனார், கபிலர், இளவேட்டனார், சீத்தலைச் சாத்தனார், அரிசில்கிழார், ஆவூர்கிழார் போன்றோரையும், கவிபாடிய மன்னர்கள்; பாண்டியன் இளம் பெருவழுதி (15 பாடல்கள், பரிபாடல்) கடவுள், மாய்ந்த பெருவழுதி "உண்டாலம்ம இவ்வுலகம்" எனும் புறப்பாடலைப் பாடியுள்ளான், பாலை ஒழுக்கம் பற்றி "பாலை பாடிய பெருங்கடுங்கோ" கலிப்பாடல்களில் பாடியுள்ளான். சோழன் நல்லுருத்திரன் கலித்தொகையில் முல்லைக் கலியின் இயல்பையும், சோழன் குலமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவன் பண்ணையும், பாண்டியன் அறிவுடைநம்பி குழந்தையால் பெறும் இன்பத்தை (புறம் 188)யும், பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் உயர்ச்சியையும், சேமரமான் கணக்காலிரும் பொறை வீரத்தை (புறப்பாடல் 74) யும், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், சோழன் நலங்கிள்ளி, பாண்டியன் நெடுஞ்செழியன்,*** *பொழிந்தவை அக்கால மன்னர்களின் பண்பட்ட உள்ளம், பாருவம் போன்றவற்றை சுட்டும்.*

**50 மேற்பட்ட பெண்பாற் புலவர்கள்** சங்க காலத்தில் காணப்பட்டதானது உலக வரலாற்றில் எங்கும் காணப்படாதது. கணவன் ஆட்டனத்தியை இழந்து **ஆதிமந்தியார்,** அஞ்சி அத்தை மகள் **நாகையார்,** பூதப்பாண்டியன் தேவி **பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர், வெள்ளி வீதியார், காமக் கண்ணியார், பெருங்கோழி நாயகன் மகள் நக்கண்ணையார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார், ஒவ்வொருவர் கடமையையும்** அழகுற வடித்த **பொன் முடியார்,** இவர்களுக்கெல்லாம் தலைமணியாய் விளங்கும் **அதியமான் நெடுமான் அஞ்சியின்** அரசவைப் புலவரும், தூதரும், நண்பரும் அதியமான் மகன் பொகுட்டெழினி, காஞ்சிற்பொருநன், மூவேந்தரையும் உறையூரில் கண்டு அவர் சேர்வின் முதன்மையைப் பாடிய **ஔவையார்** தலை சிறந்தவராவார் (சங்க கால).

**அணுவியலின் முன்னோடியான பக்குடுக்கை நன்கணியார், கணித வல்லுநர்களான பூங்குன்றனார், கணிமேதாவியார், மருத்துவம் வல்ல தாமோதரனார், நல்லச்சுதனார், இசைவல்ல கண்ணகனார், பித்தாமத்தர் போன்றோரும்** சங்க காலத்தில் இலக்கியம் ஆக்கியவராவர். இவர்களில் சைவர் **நக்கீரர், புத்தமத இளம் போதியார்,** சைன உலோச்சனார் போன்றோரும் நயம்மிக்க பாடல்களையாத்த காலம் சங்க காலமேயாகும். புலவர்களிடையே கூட ஒருவரை ஒருவர் **பாராட்டும்** விதத்தில் **மோசியைப் பெருஞ்சித்திரனாரும், கபிலரை பெருங்குன்னூர் கிழார், மாறோக்கத்து நப்பசலையாரும்** சிறப்புற வாழ்த்துவர். புறம் 163 இல் **குமணவள்ளலிடம் பெற்ற** பரிசில்களை நாம்மட்டும் வைத்துப்பயன்படுத்தாது ; வேண்டாதவர் என்று யாரையும் ஒதுக்காது, என்னையும் கேட்காது தேவைப்படுவோர்க்கு வழங்க கூறுகிறார் தன் துனைவியிடம் ஒரு புலவர்.

115. சங்க இலக்கிய காலத்தில் புலவர் அரசரிடையே இருந்த நட்புப்பற்றிக் கூறுக?

பாரி இறந்த போது அவன் உயிர் தேடுபவராய் வடக்கிருந்து உயிர் விட்டார் கபிலர். பாண்டி நாட்டுப்பாவலர் பிசிராந்தையார்

கோப்பெருஞ்சோழனை காணமலே நட்புக்கொண்டு அவன் இறந்த போது தாங்களது உறையூர் சென்று வடக்கிருந்து உயிர் நித்தார் அதியமான் இறந்த போது ஔவையார் தாங்கொணாத் துயருற்று அவர் பாடிய பாக்கள் மூலம் இவர்க்கிடையே இருந்த நட்பைபுரிந்து கொள்ள முடியும்.

116. திணைகளைப்பிரித்து வருணிப்பதில் ஈடு இணையற்ற புலவர் யாவர்?

குறிஞ்சியை (ஒழுக்கம்) கபிலரும், முல்லையை நல்லுருத்திரனாரும், பாலையை சேரன் கடுங்கோவும், மருதத்தை மருதனிள நாகனாரும், நெய் தலை அம்மூவனாரும் சிறப்புற வருணித்துள்ளனர்.

117. வருணனையில் வரும் உள்ளுரை, இறைச்சி என்பனவற்றின் பொருளென்ன?

சங்க இலக்கியங்களில் வருணனை இல்லாத பாக்கள் இல்லையென்றே கூறலாம். மற்றவர்களை புண்படுத்தும் முறையில் எக்கருத்தையும் கூறாது பண்பட்ட முறையில் நயமாக எடுத்துரைப்பதே சங்க கால நாகரிகமாகும். இயற்கைக் காட்சிகளின் எழிலை உவமைகளாக, உருவகங்களாக, வனப்பு மிக்கவையாக புலவர்கள் ஆக்கித் தந்துள்ளனர். இவை அகப்பொருள் இலக்கியங்களுக்கே உரிய உவமம் "(உள்ளுறை)" அதற்கு அப்பாலும் சென்று அதன் உட்பொருளை உணர்த்தும் "இறைச்சி" ஆகிய வகை பொருள்களையும் உரைப்பர்.

பொதுவாக சங்க இலக்கியங்களில் அணிகளுக்கெல்லாம் தாயெனக் கூறப்படும் உவமையணி மட்டுமே கையாளப்படும். நிலத்தை (இடம்) பொழுதைக் (காலம்) முதற்பொருளாகவும், இதில் காணப்படும் பற்பல காட்சிகளைக் கருப்பொருளாகவும் கொண்டு வருணிக்கும் சங்கப் புலவர்கள் மக்கள் மனதில் ஏற்படும் உள்ளுணர்வாகிய உரிப்பொருளை மெருகூட்டவே செயற்படுவர். இதை இவர்கள் ஆழமாகவும் நுட்பமாகவும் (ஆங்கில நாடக முதல்வன் சேக்ச்பியர் போன்று) அழகுற வருணிப்பதை

அகத்துறை இலக்கியங்கள் வெளிப்படுத்துவதாகவும் இவை உலகில் ஒப்பற்ற ஒன்றாக வெளிப்படுத்துவார் முனைவர். **தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்**.

118. சங்க இலக்கிய நூல்களில் நாடகப்போக்குடைய நூல்கள் எவை? விளக்கு.

சங்க இலக்கிய அகப்பொருள் பாடல்கள் எல்லாமே நாடகப்போக்குடையவை. இங்கு தலைவன், தலைவி, செவிலித்தாய், தோழி போன்றவர்கள் கூட்டாக அல்லது இருவர், மூவராக அமைந்திருக்கும். இதை நாடகத் தனிநிலை செய்யுட்கள் என்றும் கூறுவர். இங்கு உயிர் நாடியாக இருப்பவர் தோழி அல்லது செவிலித்தாயே. இவர்களின் கூரிய அறிவும், சிறந்த பண்பும் யாராலும் மறக்க முடியாதவை.

119. சங்க கால ஔவையார் பற்றிக் கூறுக?

இவர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி காலமாகிய கி.பி 2ம்நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கொள்ளப்படுகின்றார். இவர் பாடிய பாடல்கள் **அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை** ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. இவர் **நற்றிணையில் - 7 குறுந்தொகையில் 15, அகநானூறு -33** இலுமாக **59 பாடல்களைப் பாடியுள்ளார்.** ஔவையார் மூவேந்தரைச் சாராது, கொடைவள்ளலும், குறுநில மன்னனுமான அதியமான் நெடுமான் அஞ்சியின் அவைப்புலவராக இருந்திருக்கிறார். புறநானூறில் 22 பாடல்களை அதியமான் பற்றி மட்டும் பாடியுள்ளார். இவர் தூதராக, அவைப்புலவராக, நெடுமான் அஞ்சியின் உற்ற நண்பராக வாழ்ந்திருக்கின்றார். இவர் அதியமானின் மகன் பொருட்டெழினி, நாஞ்சிற்பொருநன், மூவேந்தர் பற்றியும் பாடல்கள் பாடியுள்ளார்.

120. பாண்டைய தமிழ் அரசர்களின் சிறப்புப் பற்றிக் கூறுக?

இவர்கள் என்றுமே புலவர் பெருமக்களைப் பகைத்ததில்லை. வறியவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அரவணைத்தார்கள். இதன்படி பட்டினப்பாலை நூலை இயற்றிய கடியலூர் உத்திரங்கண்ணனார்க்கு கரிகால்வளவன்

16 இலக்கம் பொன்கொடுத்தானாம். மோசிக்கிரனார் நடந்த களைப்பினால் முரசு கட்டிலில் படுத்து உறங்கிவிட்டார் இதைக்கண்ட சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலாதன் அவர் மேற்சினவாது அவரருகில் சென்று விசிறி வீசியதாகக் கூறும் சங்க இலக்கியம். இத்தகைய பண்பட்ட அரசர் அரவணைப்பு இருந்தாலேயே சங்கஇலக்கியம் தோன்றியது. தனக்குக் கிடைத்த அரிய கருநெல்லிக்கனியை அதியமான் தான் உண்ணாது ஔவைக்கு ஈந்தன். ஏன்? தமிழ் நீடுவாழ வேண்டுமானால் தமிழ் புலவர் வாழவேண்டும் என்ற ஒரே நோக்கன்றோ.

121. ஔவையார் எத்தனை பேர் வாழ்ந்துள்ளனர்? அல்லது நெல்லிக்கனி உண்டதால் நீடித்த அகவையுடன் வாழந்தவர் ஒரு ஔவை தானா?

இல்லை, காலத்திற்குக் காலம் பல ஔவையார்கள் வாழ்ந்துள்ளனர். சிலர் ஒருவரென்றும், சிலர் மூவர் என்றும், சிலர் அறுவர் என்றும் கூறுவர். ஆனால் மூவரே பலராலும் அறியப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் சங்க கால ஔவையென்றும், மற்றவர் நீதிநூல் ஔவையென்றும், மூன்றாமவர் குண்டலினியோகி "ஞானக்குறள், விநாயகர் அகவல்" பாடிய ஔவையென்றும் கூறப்படுகின்றனர். முதலாமவர் கி.பி.1-2 நூற்றாண்டு காலத்தவரென்றும் நீதி நூல் ஔவை கி.பி.12நூற்றாண்டின்ரென்றும் மற்றயவர் கி.பி.14நூற்றாண்டின்ரென்றும் கூறப்படுகின்றனர். கி.பி.12நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய நீதிநூல் ஔவை ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை (வாக்குண்டாம்) நல்வழியென்னும் நூல்களை யாத்தவர். ஞானக்குறள் ஔவை ஒருங்கு (யோக) நெறிக் கலையை ஈற்றடி குறள்களாகத் தந்துள்ளார். திருமூலரின் திருமந்திரம் கூறும் ஒருங்கு நெறியையே இவரும் கூறுவார். ஆனாலும் ஔவையார் பாடிய பாடல்கள் புறப்பாடல் திரட்டு, தனிப்பாடல் திரட்டு ஆகிய நூல்களிலும் காணப்படுகின்றன.

122. பிற்கால நீதி நூல்கள் பற்றிக் கூறுக?

சமண சமய நீதிநூல், அருங்கலைச் செப்பு, கி.பி.12 நூற்றாண்டு,

முனைப்பாடியாரின் அறநெறிச்சாரம் கி.பி13ஆம் நூற்றாண்டு, அதிவீரராம பாண்டியர் நறுந்தொகை (வெற்றிவேற்கை) 16 நூற்றாண்டு, குமரகுருபரர் நீதிநூல் விளக்கம் 17ஆம் நூற்றாண்டு, சிவப்பிரகாசர் நன்னெறி 17 ஆம் நூற்றாண்டு, உலகநாதர், உலகநீதி 18ஆம் நூற்றாண்டு, வேதநாயகம்பிள்ளை நீதிநூல், பெண்மதிமாலை, கி.பி.19 நூற்றாண்டு.
பாரதியார் - புதிய ஆத்திசூடி - 20ஆம் நூற்றாண்டு
பரதிதாசன் - ஆத்திசூடி - 20ஆம் நூற்றாண்டு
கீழ்கணக்கு நூல்களில் வெண்பாவின் செல்வாக்கு மிகுதி, மொழிச் செறிவு குறைவு, வடமொழிச் சொல் ஊடுருவல் அதிகம்.

123. பதிணெண் மேற்கணக்கு நூல்களுக்கும் பதிணெண் கீழ்கணக்கு நூல்களுக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளைக் குறிப்பிடுக?

| **மேற்கணக்கு நூல்கள்** | **கீழ்கணக்கு நூல்கள்** |
|---|---|
| 1. கடைச்சங்க காலநூல்கள் (கி.மு 3 - கி.பி. 3) | சங்கமருவிய காலநூல்கள் கி.பி 6ஆம் நூ.ஆ பிற்பட்டது. |
| 2. அடி வரையறை மிக்கது | அடிவரையறை குறைந்தது. |
| 3. ஆசிரியத்தின் செல்வாக்கு | வெண்பாவின் செல்வாக்கு |
| 4. மொழிச் செறிவுமிக்கது | மொழிச் செறிவு குறைந்தது |
| 5. வட சொற் கலப்பு அரிது | வடசொற் கலப்பு அதிகம் |
| 6. இவை பத்துப்பாட்டு எட்டுத் தொகை நூல்களை கொண்டது அகம், புறம் பற்றிய பாடல்கள் | இவற்றில் 11 நிதிநூல்கள் 6 அகம் பற்றிய நூல்கள் 1 புறம் பற்றிய நூல் |
| 7. மக்களின் அகவாழ்வாகிய களவு கற்புப்பற்றியும் புற வாழ்வான வீரம், கொடை, புகழ் பற்றியது | நிதிநெறி முறைகளை வகுத்துக் காட்டியும் கற்பு, களவு, வீரம், கொடை, புகழ் பற்றி சுருங்கக் கூறுவது. |

124. கோவை நூல்கள் பற்றி விளக்குக?

கோவை நூல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறையென்லும் ஒரே யாப்பினாலானவை. சங்கப்பாடல்களில் மாதங்கீரனார், வெறிபாடிய காமக்கண்ணியார் போன்றோர் ஒரு துறையை மட்டும் பாடிப்பெயர் பெற்றவர்கள். கயமனார், மாமூலனார் போன்றோரும் ஒரே துறைபற்றிப் பாடியுள்ளனர். ஒரே துறையைப் பற்றி நாநூறு பாடல்கள் எழுதியவர்களும் உளர், "நாணிக்கண் புதைத்தல்" என்ற "ஒரே துறை" பற்றிய (400வது பாடல்கள்) நூலுக்கு **"ஒரு துறைக் கோவை"** என்று பெயர். இவை அகத்துறை பற்றியன. பாட்டுடைத் தலைவன், கிளவித்தலைவன் என்பாரில் கிளவித் தலைவனின் பெயர் சுட்டப்படாது அகத்துறை ஒவ்வொன்றிற்கும் 400 பாடல் வழி அகம் முழுவதையும் விளக்குகின்றன.

"கலம்பகம்" சங்க காலத்திற்கும் பிந்தியவை. அகமும் புறமும் கலந்தது. "பரணி" புறத்திணையின் களவழி, கள வாழ்த்து ஆகிய துறைகளின் வளர்ச்சியின் வெளிப்பாடு. தூ து, உலா ஆகியவும் அக, புற பாடல் வழி வளர்ந்தவை தாம். தனிப்பாடல் திரட்டு, இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் வாழ்ந்த புகழ் மிக்க புலவர்களின் உதிரிப்பாடல்களாலும், நிகழ்ச்சிகளை ஒட்டிய பாடல்களாலும் நிறைந்தவை. இப்பாடல்கள் **"சிருங்காரம்"** என்ற உவகைச் சுவை மிக்கவை. இவற்றில் சில அகம் பற்றியும், பல புறம் பற்றியும், சொற் போட்டி, சொற் சிலம்பம் ஆழ்பவை. சங்கப் பாடல்களில் உள்ள இயல்பான சிறப்புக்கள் இதில் காணப்படுவதில்லை என்பர் அறிஞர். அணி நலன்களில் அழுத்தம் தருபவை. சிலேடை என்ற இரட்டுற மொழிதலில் பல பாடல்களுள்ளன. கம்பன் - ஔவையிடையிலான சிலேடை போன்றன குறிப்பிடத்தக்கன.

125. தமிழ் இலக்கண வகைகள் எவை? அவற்றின் வளர்ச்சிப்படிகளையும், அவற்றை யாத்தவர்கள், காலம், போன்றவற்றையும் தருக?

தமிழிலக்கண வகைகள் ஐந்திலக்கண நூல்கள், பொருள்

இலக்கண நூல்கள், யாப்பிலக்கண நூல்கள், அணி இலக்கண நூல்கள், எழுத்துச் சொல் இலக்கணம் மட்டும் கூறும் நூல்களென வகைப்படுத்தலாம். இவ்விலக்கண நூல் வளர்ச்சியைக் கீழ்காணும் பட்டியல் ஓரளவு உணர்த்தும்.

| | ஐந்திலக்கணநூல்கள் யாத்தவர் | காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | தொல்காப்பியம், தொல்காப்பியர் | கி.மு.7ஆம் நூ | எழுத்து, சொல், பொருள், பொருளியல், யாப்பு, அணி. அடக்கம் |
| 2. | வீரசோழியம், புத்தமித்திரர் | கி.பி.11ஆம் நூ | எழுத்து, சொல், பொருள், யாப்பு |
| | உரை பெருந்தேவனார் | - | அலங்காரம் 183 நூற்பாக்கள் |
| 3. | இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் | கி.பி.17ஆம் நூ | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, உரை 941 நூற்பாக்கள் |
| 4. | தொன்னூல் விளக்கம் வீரமாமுனிவர் (பொச்க்கி) | கி.பி.18ஆம் நூ - | ஐந்திலக்கணம் 370 நூற்பாக்கள் |
| 5. | முத்து வீரியம் முத்து வீர உபாத்தியாயர் உரை;திருப்பாற்கடல் நாதன்கவிராயர் | கி.பி.19ஆம் நூ - | ஐந்திலக்கணம் 1286 நூற்பாக்கள் |

பொருள் இலக்கண நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | இறையனார் களவியல் இறையனார் | கி.பி.8ஆம் நூ | அகப்பொருள் |
| 2. | பன்னிரு படலம் ஆசிரியர் - தெரியாது | கி.பி.8ஆம் நூ | புறப்பொருள்,நூல் கிடைக்கவில்லை |
| 3. | புறப்பொருள் வெண்பாமாலை ஐயனாரிதனார் | கி.பி.10ஆம்நூ | புறப்பொருள் பன்னிரு படலம் இதன் முதல் நூலாகும். |
| 4. | நம்பியகப்பொருள் நாற்கவிராசநம்பி | கி.பி.12ஆம் நூ | அகப்பொருள் |
| 5. | தமிழ்நெறி விளக்கம் | கி.பி.12ஆம் நூ | அகப்பொருள் |

6. களவியற்கரிகை அகப்பொருள் முழுமையாகக் கிடைக்கவில்லை.

7. மாறனகப் பொருள் கி.பி.17ஆம் நூ அகப்பொருள்

யாப்பிலக்கண நூல்கள்

1. அவிநயம் கி.பி.6ஆம் நூ யாப்பு,பாட்டியல்,பிற உரைகளில் கிடைக்கும்
அவிநயனார் 90 நூற்பாக்கல்

2. யாப்பருங்கலகம் கி.பி.11ஆம் நூ யாப்பிலக்கணம்
அமிர்தசாகரர் உரை; குணசாகரர், மிகவிரிவானது

3. யாப்பருங்கலக்காரிகை கி.பி.11ஆம் நூ யாப்பிலக்கணம் உரை; குணசாகரர், சுருக்கமானது

4. யாப்பிலக்கணம் கி.பி.16ஆம் நூ
திருத்தணிகை விசாகப்பெருமாளையர்

126. எழுத்துச் சொல் பற்றி மட்டும் கூறும் இலக்கண நூல்கள் எவை? காலம், எழுதியவர் போன்றனவும் தருக?

1) நேமிநாதம் கி.பி 12 நூ.ஆ. எழுத்து, சொல்
குணவீரபண்டிதர்

2) நன்னூல் கி.பி 12 நூ.ஆ. எழுத்து, சொல்
பவணந்திமுனிவர்

3) பிரயோக விவேகம் கி.பி 17 நூ.ஆ. எழுத்து,வடமொழி
சுப்பிரமணிய தீட்சிதர் மரபு 51 நூற்பா

4) இலக்கணக்கொத்து கி.பி 17 நூ.ஆ. சொல் 31 நூற்பா
சுவாமிநாத தேசிகர்

127. உலக இலக்கணங்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

பொருளதிகாரம் இலக்கியத்திற்கு இலக்கணம் கூறுகிறது. யாப்பிலக்கணம் செய்யுளியலும், அணியிலக்கணம் உவமவியலும்

கூறப்படுவதோடு, மெய்ப்பாட்டியல் சுவைபற்றக்கூறுகிறது. உலக இலக்கணங்கள், எழுத்து, சொல் பற்றியவை தமிழில் தொல்காப்பியம் மட்டும் தான் பொருளிலக்கணம் கூறும். இதுதான் தமிழின் சிறப்பு.

128. *தொல்காப்பியத்திற்கு முன்னும் இலக்கண நூல்கள் இருந்ததற்கான சான்றுகள் உண்டாகும்?*
தொல்காப்பியர் தனக்கு முன்னிருந்த புலவர்களை "புலன் நன்குணர்ந்த புலமையோரே", "என்மார் புலவர்" போன்ற பல குறிப்புக்களைத் தமது நூலில் தருவதால் இவருக்குமுன் தெளிவான இலக்கணநூல்கள் பல இருந்திருக்க வேண்டுமென்பது ஆணித்தரமான உண்மையாகும்.

129. *தொல்காப்பியம் கடைச்சங்க நூல்களுக்கும் பிந்தியதென சிலர் கூறுகின்றார்களே, ஏற்புடையதா?*
இந்நூலின் முன்னுரையில் இவர்கள் பற்றி ஓரளவு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் "மாரித்தவளை" போன்றவர்கள், அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. தொல்காப்பியத்தில் காணப்படும் அழன், புழன், அதோளி, இதோளி வழக்காறுகள் சங்கப்பாடல்களில் காணப்படவில்லை., ச, ஞ, ய ஆகிய எழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்கள் வாரா எனத் தொல்காப்பியம் குறிக்க சங்கப்பாடல்கள் இவற்றைப் பயன்படுத்தியுள்ளன. கலியும் பரிபாடலும் அகம் பாடச்சிறந்தன என அவர் கூறும் போது, சங்கப்பாடல் (அகம்) ஆசிரியத்தையே மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளது. இவை தொல்காப்பியம் சங்கப்பாடல்களுக்கு முற்பட்டதென்பதற்குச் சான்றுபகரும். இன்று பலரும் தொல்காப்பியர்காலம் கி.மு.700 என ஏற்றுக்கொண்டுள்ளனர். சிலர் கி.மு1500 (அறிவர், குணா போன்றோர்) முட்பட்டதென்றும் கூறுவர்.

130. *தொல்காப்பியத்தின் பழைய உரைகள் யார் யாரால் வரையப்பட்டது?*
இளம்பூரணர் - எழுத்து, சொல், பொருள் முழுமைக்கும் பொருளுண்டு.

நச்சினார்க்கினியர் - எழுத்து, சொல் முதல் ஐந்துடன், பொருளில் செய்யுளியல் வரை உரை உண்டு.

பேராசிரியர் - பொருளதிகாரம் மெய்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் போன்றவற்றிற்கான உரை.

சேனாவரையர் உரை, தெய்வச்சிலையார் உரை } சொல்லதிகாரத்திற்கு உரை உண்டு.

131. ஐந்திலக்கணநூல்கள் எவை? இவற்றில் வீரசோழியம் போற்றப்படாதது ஏன்?

வீரசோழியம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்றன.

**இலக்கணவிளக்கம்** : வைத்தியநாத தேசிகரால் கி.பி 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இது குட்டித்தொல்காப்பியம் எனக் கூறப்படும் ஐந்திலக்கண நூல்.

**தொன்னூல்** : பொச்க்கி என்ற இத்தாலியரான வீரமாமுனிவரால் 18 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஐந்திலக்கணநூல் இவர் தமது தாய்மொழியாகிய இலத்தீனிலும் தமிழுக்கு இலக்கணம் எழுதியுள்ளார்.

**முத்துவீரியம்** : முத்துவீரப்ப ஆசிரியரால் 19 ஆம் நூற்றாண்டு எழுதப்பட்ட ஐந்திலக்கணநூல்.

**சுவாமிநாதம்** : இதுவும் 19 ஆம் நூற்றாண்டில் சாமிகவிராசரால் எழுதப்பட்ட ஐந்திலக்கண நூல். ஐந்திலக்கணமான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவாகும்.

**வீரசோழியம்** : புத்தமித்திரரால் கி.பி.11 ஆம் நூற்றாண்டில் இராசராசனின் (இராசேந்திரன் மகன்) பேரனான வீரராசேந்திரச்சோழனின் பெயரில் எழுதப்பட்ட நூல் வீரசோழியம் (வீர + சோழன்). இது ஐந்து இலக்கணங்களும் கூறும் முதல்நூ

ல். இதற்குப் பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார். இது தமிழ் மரபைப் போற்றாது வடநூல் மரபைப் பின்பற்றி யாக்கப்பட்டதால் ஒதுக்கப்பட்டது. ஆசிரியர் புத்தமதத்தவராவார். ஆனால் வீரராசசேந்திரனால் புரக்கப்பட்டவர்.

132. நன்னூல், நேமிநாதம் ஆகிய இலக்கண நூல்களைப்பற்றிக் கூறுக?

**நன்னூல் :**

சமண முனவரான பவணந்தி என்பவரால் கி.பி.13 ஆம் நூற்றாண்டு யாக்கப்பட்ட எழுத்துக்கும் சொல்லுக்குமான இலக்கணநூ ல் இதற்கு மயிலைநாதரின் உரை, சங்கர நமச்சிவாயர் சிவஞானமுனிவரின் விருத்தியுரை, ஆறுமுகநாவலரின் காண்டிகையுரைகள் காணப்படுகின்றன. தமிழ் மாணவர்களால் மிகுதியாகப் பயிலப்படும் நூல்.

**இலக்கணக்கொத்து :**

சுவாமிநாத தேசிகரால் 17ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. சொல்லிலக்கணத்தை 131 பாக்களால் மூன்று இயல்களில் கூறுவது. ஆனால் சுப்பிரமணிய தீட்சிதரின் பிரயோக விவேகம் வடமொழி மரபைப் பின்பற்றியதாகும்.

**நேமிநாதம் :**

13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குணவீர பண்டிதரால் தனது ஆசிரியர் நேமிநாத அடிகள் பெயரில் 96 நூற்பாக்களில் சொல், எழுத்துக்கான இலக்கணநூல் (சின்னூல்) எழுதியுள்ளார். சமணராகிய இவர் வச்சணந்திமாலை என்ற நூலையும் எழுதியுள்ளார்.

133. பொருளிலக்கண அல்லது சிற்றிலக்கண நூல்கள் எவை? விளக்குக?

இவை பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணமெனத் தனித்தனி சிறு இலக்கணங்களாக யாக்கப் பெற்றவை.

**இறையனார் அகப்பொருள் :**

பொருளிலக்கணம் கைக்குக் கிடைக்காததால் (கடைச்சங்க காலத்தின் பின்) பாண்டியன் வேண்டுதல் ஏற்று இறைவனால் எழுதப்பட்டதாம். இது 60 நூற்பாக்களைக் கொண்டது. நக்கீரர் உரைத்த இவ்வுரையைப் பத்துத்தலைமுறைகள் செவிவழியாகக் கேட்டுவந்ததை நீலகண்டர் என்பார் விரித்து உரை எழுதியுள்ளார். பழந்தமிழ் உரை ஆராய்பவர்களுக்கு இவ்வுரை பெருவிருந்தென்பர். உரை கி.பி.8ம் நூற்றாண்டினதாகும். இவ்வுரையிலேயே முச்சங்கங்கள் முழுமையாக மிகவும் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

**மாறன் அகப்பொருள் :**

மாறன் என்பவர் நம்மாழ்வாராவார். மாறனலங்காரம் என்ற நூலையும் இவருடன் ஈடுபாடு கொண்ட திருக்குருகைப்பெருமாளே (2 நூல்களையும்) யாத்தவர் ஆவார். இவர் வைணவரானபடியால் ஆழ்வாரின் பெயரையே தம் நூல்களுக்குச் சூட்டினார்.

**புறப்பொருள் வெண்பாமாலை :**

ஐயனாரிதனார், புறத்திணையை 12 ஆகப் பிரித்து எழுதப்பட்ட பன்னிரு படலமென்னும் நூலை பின்பற்றி இந்நூலை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய 12 பகுதிகளை வரிசைப்படுத்தி எழுதியுள்ளார். இதற்கு சாமுண்டி தேவநாயகர் உரை ஒன்றுமுண்டு. இலக்கணமாகிய கொளுவும், இதற்கான வெண்பாக்களும் மிகச் சிறப்பாக ஆளப்பட்டுள்ளதாம்.

134. யாப்பிலக்கண நூல்கள் எவை? விளக்குக?

அபிநயம், பல்காயம், காக்கைபாடினியம், சிறுகாக்கைபாடினியம் போன்ற சிற்றிலக்கண யாப்பிலக்கண நூல்கள் பலவாகும். இதில் கையனார், நத்தத்தினார், மயேச்சுரர் போன்ற பலரும் ஈடுபாடு காட்டியவர்கள்.

**யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை :**

இவை அமிர்தசாகரர் என்ற சமணமுனிவரால் 11 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. யாப்பருங்கலத்தில் மிகச் சிறந்த

விருந்தியுரை ஒன்று காணப்படுகிறதாம். காரிகையே பெரிதும் பயிலப்பட்டு வருகிறது. திருத்தணிகை விசாகப்பெருமாளின் யாப்பிலக்கணம், குமரகுருபரரின் சிதம்பரச்செய்யுட்கோவை, திருக்குருகைப்பெருமாளின் மாறன் பாப்பாவினம், பல்சந்தர் பரிமளம், திருவரங்கற்றிரட்டு, விருத்தப்பாவியல் போன்றன குறிப்பிடத்தக்கவை.

**தாண்டியலங்காரம் :**

தமிழில் எழுந்த அணிநூல்களெல்லாம் வடமொழியை அடியொற்றி எழுந்தவை அல்லது வடமொழியிலிருந்து பெயர்க்கப்பட்டவை எனக் கூறப்படுகிறது. இது தாண்டி என்னும் காஞ்சியில் வாழ்ந்த வடமொழி அறிஞர் எழுதிய 'காவியா தரிசனம்' பின்பற்றி தமிழில் எழுதப்பட்டதாம். தாண்டியின் காலமாகிய கி.பி ஏழாம் நூற்றாண்டென்றும், ஆனால் குலோத்துங்கன் (அநபாயச்சோழன்)னை சுட்டும் பாடல்கள் காணப்படுவதால் இது 12 ஆம் நூற்றாண்டை சேர்ந்ததென்றும் கூறப்படுகிறது. ஆனாலும் இந்நூலில் தமிழ்வழி மரபுப்படியான அணிகளும் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இவற்றை இவர் எங்கிருந்து பெற்றார்? இதுவும் தமிழாய்ந்த உலக அறிஞர்களின் கூற்றுப்போல் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டபின் மூலங்கள் அழிக்கப்பட்டு விட்டனவா (வடமொழியாளர் சூரியநாராயணசாத்திரியின் கூற்றும் அதுதான்)? இது 125 பாக்களைக் கொண்ட பொருளணியியல், சொல்லணியியல், பொதுவியல் ஆகிய மூன்று பிரிவுகளையுடையது. திருத்தணிகை விசாகப்பெருமாளையார் எழுதிய அணியிலக்கணமும் காணப்படுகிறது. இன்று புலவர் குழந்தையின் யாப்பதிகாரம், சரவனத்தமிழனின் தமிழ்நூல் போன்றனவும் குறிப்பிடக்கூடியவை.

135. பாட்டியல் நூல்கள் எவை? இதற்கும் தனி இலக்கணமுண்டா? விளக்குக?

முதலில் மூன்றாய் இருந்த தமிழ் இலக்கணம்; பொருளிலக்கணமானது இன்னும் இரு கூறுகளாக ஆனது. அதாவது யாப்பு என்றும் அணி என்றும்மாகி ஐந்திலக்கணமாகியது. இலக்கிய வகைகளை விளக்கும்பாட்டியல் தனியொரு

பிரிவாகி ஆறாவது பிரிவானது. இன்று உரியிலிருந்து ஏழாவது பிரிவான நிகண்டுகள் வளர்ந்துள்ளது. முருகதாசர் எனப்படும் தாண்டபாணி சுவாமிகள் "அறுவகை இலக்கணம்" என எழுதி புலமை இலக்கணத்தைப் புகுத்தினார். பாட்டியல் நூல்களாவன.

| | | |
|---|---|---|
| பன்னிரு பாட்டியல் | - 12 ஆம் நூ | |
| வச்சணந்திமாலை அல்லது வெண்பாப்பாட்டியல் | - குணவீரபண்டிதர் | - 13 ஆம் நூ |
| நவநீதப்பாட்டியல் | - நவநீதநடன் | - 14 ஆம் நூ |
| வரையறுத்தபாட்டியல் அல்லது சம்பந்தப்பாட்டியல் | - சம்பந்தமுனிவர் | - 14 ஆம் நூ |
| சிதப்பரப்பாட்டியல் | - பரஞ்சோதிமுனிவர் | - 16 ஆம் நூ |
| இலக்கணவிளக்கம் பாட்டியல் | - வைத்தியநாததேசிகர் | - 17 ஆம் நூ |
| தொன்னூல் விளக்கம் பாட்டியல் | - வீரமாமுனிவர் | - 17 ஆம் நூ |
| முத்துவீரியப்பாட்டியல் | - முத்துவீரஉபாத்தியாயர் | - 19 ஆம் நூ |
| பிரபந்த மரபியல் | - | - 19 ஆம் நூ |
| பிரபந்த தீபிகை | - முத்துவேங்கடசுப்பையா | - 19 ஆம் நூ |

பாட்டியலின் முன்பகுதி பாட்டுடைத்தலைவன் பெயர் குறித்து, சோதிடப் பொருத்தம் கண்டு, பிற்பகுதி தமிழில் இலக்கிய வகைகளுக்கும் இலக்கணங்கூறுவதாயுமுள்ளது.

### நிகண்டுகள் :

தொல்காப்பியத்தில் உரியியலில் 120 சொற்களுக்கு பொருள் கூறப்பட்டுள்ளது. இடையியல், மரபியலிலும் சொற்களுக்கு பொருள் கூறும் முறையுண்டு. இதில் முதலில் வந்த நிகண்டுகள் "உரிச்சொல் பனுவல்கள்" எனப்பட்டன. தமிழின் சொல்வளத்தைக் காட்டவும் பெருக்கவும் பயன்பட்டன. தொடக்கத்தில் செய்யுள் வடிவிலான நிகண்டு கற்று (மனப்பாடம்) த்தான் தமிழ்க்கல்வியை தொடங்கினர்.

### திவாகரம் :

சமணராகிய திவாகரரால் ஆக்கப்பட்டதால் திவாகரமெனப்பட்டது. இது சேந்தன் எனும் மன்னனின் வேண்டுகோளிற் அமைய ஆக்கப்பட்டதால் சேந்தன் திவாகரமென்றும் கூறுவர்.

காலத்தால் முற்பட்டது. சங்கவழக்கு மிகுதி. இது 8 ஆம் நூற்றாண்டினது. இதில் 9500 சொற்களுக்கான விளக்கமுண்டு. 384 பல்பொருள்தரும் சொற்களும் உண்டு.

**பிங்கல நிகண்டு :**

கி.பி. 10 நூற்றாண்டில் எழுதப்பட்டது. திவாகரரின் மாணவர் பிங்கல முனிவரால் எழுதப்பட்டது. 14700 சொற்களுக்கு விளக்கமுண்டு 1091 பல்பொருள் தரும் சொற்களும் காணப்படுகிறது.

**சூடாமணி நிகண்டு :**

மண்டல புருடரால் 16 ஆம் நூற்றாண்டில் யாக்கப்பெற்றது. சமணத் தொன்மமாகிய சிறிதொன்மத்தை மணிப்பரவாள நடையில் தமிழில் மொழிபெயர்த்தார். 12 பிரிவுகளையுடையது.

**உரிச்சொல் நிகண்டு :**

வெண்பா ளவினாவிலானது. சலாம் என்ற சொல்லும் இடம்பெறுவதால் அருணகிரிநாதருக்குப் பிற்பட்டது என்பர்.

**கயாதர நிகண்டு :**

கயாதர முனிவரால் கட்டளைக்கலித் துறையில் ஆக்கப்பட்டது.

**அகராதி நிகண்டு :**

சைவத்தொன்மம் பல பாடிய இரேவண சித்தரால் கி.பி 1594ல் எழுதப்பட்டது. இது அகரவரிசையில் சொற்களைக் கூறுவதால் உலகில் தோன்றிய முதல் அகரவரிசை அல்லது முதல் அகராதி என்பார். "அகராதிக்கலை ஆசிரியர்", புலவர் சுந்தரசண்முகனார்.

**ஆசிரிய நிகண்டு :**

ஆண்டிப்புலவரால் எழுதப்பட்டது. இதன்பின் வீரமாமுனிவரின் சதுர அகராதி இதன் பின் மேலைநாட்டு முறையைப் பின்பற்றித் தமிழில் அகராதிக் கலை வளர்ந்தது.

*தத்துவ இலக்கியமும் தத்துவ நூல்களும் :*
பல்வேறு பற்றுப்பனுவல்கள் (இறைவன்), இறைவன் புகழ்பாடும் பாடல்கள், பாசுரங்கள் மட்டுமல்லாமல் மெய்யியல் (தத்துவ) ப்பாடல்களும் யாக்கப்பெற்றுள்ளன. திருமூலர், தாயுமானவர், வள்ளலார் போன்றோர் மெய்யியலை மிக எளிமையாக உலகுக்கு வழங்க முயன்றனர்.

**திருமூலர் :**
திருமூலரின் திருமந்திரம் மெய்ப்பொருள் உணர்த்தும் தொன்மையான இலக்கியங்களில் முதல் நூலாகக் கொள்ளப்படலாம். இது அறம், மந்திரம், சோதிடம், மருத்துவம் சித்தாந்த அடிப்படை விளக்கம் போன்ற ஒன்பது தந்திரங்கள் என்ற பகுப்புடையது. இது யாப்பு வெண்டளை மிக்க விருத்தமாக உள்ளது. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. சிவநெறி அல்லது தமிழ்நெறி பற்றிய முதல்நூல் இதுவென்பர். இது வடமொழி செல்வாக்குப் பெற்ற காலத்தானதால் வடசொற்கள் பல பரவிக்கிடக்கக் காணலாம். சைவசித்தாந்தம் என்ற தொடர்பை முதன்முதலில் பயன்படுத்திய நூல் இதுவாகும். திருமூலரால் பாடப்பட்ட மூவாயிரம் பாடல்கள் இதிலுள்ளது. “ஒன்றே குலம் ஒருவனே தேவன்”, “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”, “அன்பும் சிவனும் இரண்டென்பர் அறிவிலார்”, “ஊன் உடம்பு ஆலயம்”, உன் ஒளியைக் கண்டதால் இவ்வுடலை ஓம்புகின்றேன் போன்ற அரிய தொடர்களால் உயிரிரக்கக் கோட்பாட்டை, சமத்துவத்தை வலியுறுத்துகின்றார்.

**பட்டினத்தடிகள் :**
இவரது இயற்பெயர் திருவெண்காடர் 11 ஆம் நூற்றாண்டினர். வாழ்க்கையில் வெறுப்புற்று துறவு கொண்டவர். இவரது பாடல்கள் நெஞ்சை உருக்குபவை. 11 ஆம் திருமுறையில் இவரது பாடல்கள் காணப்படுகின்றன. திருக்கழுமலமும் மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி போன்றன இவர் பாடிய நூல்கள்.

### சிவப்பிரகாசர் :

*வீரசைவசமயத்தவர். இவர் யாத்த நால்வர் நான்மணிமாலை சைவசமய பெரும்குரவர் மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தியார் போன்றோரை சிறப்புறக் கூறும் நூல். "பிரபுலிங்க லீலை" என்ற வீரசைவ நூலையும் எழுதியுள்ளார்.*

### திருஞானமுனிவர் :

*இவரெழுதிய நூல்கள் இன்று சைவசமய விளக்க நூல்களாகக் கைக்கொள்ளப்படுகின்றன. இவர் 18 ஆம் நூற்றாண்டினர். சிவஞானபோதம் என்ற சிவநெறி நூலுக்கு மாபாடியம் என்ற பேருரையும், சிற்றுரையும் எழுதியுள்ளார். தொல்காப்பிய முதல் சூத்திரத்திற்கு விரிவான ஆராய்ச்சி உரையும், சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்கு எழுதியவுரையும் முதன்மையானவை.*

### தாயுமானவர் :

*அமைச்சர் பதவியைத் துறந்து அருள்பெற்றவர் 18 ஆம் நூற்றாண்டினர். தமிழ், வடமொழியில் உயர் தகைமையுடையவர். இவர் அத்துவைதம், சைவசித்தாந்தங்களுக்கிடையில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்த முயன்றவர். உபநிடதக்கருத்துக்களை எளிமையாகவும், தெளிவாகவும் நாட்டுப்பாடல் வடிவில் கண்ணிகளாகப் பாடியவர். இவருடைய "பராபரக்கண்ணி" அரிய கருத்துக்களை எளிமையாகக் கூறுவதாகும்.*

*"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"*
*"நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே*
*மஞ்சநீர் ஆசைகொள்ள வாராய் பராபரமே"*

### இராமலிங்க வள்ளலார் :

*"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்றதன் அடிப்படையில் உயிரிரக்கமே (யீவகாருண்யம்) சமயவாழ்வின் அடிப்படையென்றும், மாந்தநேய (ஆன்மநேயம்) ஒருமைப்பாடே சமயநெறியின் தெளிவு என்னும் தனது கோட்பாட்டின் அடிப்படையில் வடலூரில் "சத்திய ஞானசபை"யையும், சத்திய*

தருமச்சாலையையும் நிறுவினார். இவர் மக்கள் காட்டிய கும்மி, கண்ணி, சிந்து, கீர்த்தனை போன்றவற்றைப் பயன்படுத்தி “பாரதிக்கு” வழிகாட்டியவர். இவரது “அருட்பா” மருட்பாவாக ஆறுமுகநாவலரால் கொள்ளப்பட்டு தர்கநிலையாகியது. இது நீதிமன்றம் வரை சென்றது. இவர் பாடிய இத்“திருவருட்பா” ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

**பதிணெண் சித்தர்கள் :**

சித்தர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். இவர் பற்றி மாணிக்கவாசகசுவாமிகள் கூறும்போது “திண்டிறற் சித்தர்களே கடைக்கூழைச் சென்மின்கள்” என்பார். இவர்கள் மருத்துவம், மந்திரம், இரசவாதம், யோகம், அருள் (ஞானம்) பற்றியெல்லாம் உலகவழக்குச் சொற்களைக் கொண்டு நாட்டுப்புற பாடல் மரபில் பாடியதால் இவர் பாடல்கள் மக்கள் நடுவில் செல்வாக்குப் பெற்றன. இவை வெளித்தோற்றத்தில் ஒரு கருத்தையும், உள் (அக)த் தோற்றத்தில் இன்னொரு கருத்தையும் விளம்புவன. தமிழில் எல்லாவகை இலக்கியத்திலும் பாடப்பட்டவை, மிகுதியானவை. ஆனால் கைக்குக்கிடைப்பவை ஒருசிலதான். சித்தர்களில் முதற்சித்தர் திருமூலரென்றே கூறப்படுகிறார். சித்த மருத்துவத்தின் முன்னோடிகளாகவும், அக்கால அறிவியல், இயற்கையின் வல்லுநர் எனக் (நிபுணர்கள்) குறிப்பிடலாம். பதிணெண்சித்தர்கள்; அகத்தியர், புலத்தியர், புகண்டர், நந்தி, திருமூலர், காலாங்கிநாதர், போகர், கொங்கணர், உரோமமுனி, சட்டமுனி, மச்சமுனி, கரூரர், தான்வந்திரி, தேரையர், பிண்ணாக்கீசர், கோரக்கர், யூகிமுனி, இடைக்காடர் போன்றோர் ஆவர். இன்றுள்ள சித்தர்பாடல் நூல்களில் புலிப்பாணி, பாம்பாட்டிச்சித்தர், அகப்பேய்ச்சித்தர், குதம்பைச்சித்தர், அழுகிணிச்சித்தர், கருவெளிச்சித்தர், சிவவாக்கயர் போன்றோர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் நிலையாமை, மூடநம்பிக்கை ஒழிப்பு, சடங்கு போன்றன வெறுத்தல் போன்ற புரட்சி சீர்திருத்த வழி செல்பவையாகும். புலிப்பாணியாரின் வைத்தியம் ஐந்நூறு, சாவாத்திரட்டு, இடைக்காடர் ரேகைச்சாத்திரம், தேரையாரின் நோய் அணுகாவிதி, பத்திரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பல் அழுகிணியாரின் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

136. பதிணெண்கீழ்கணக்கு நூல்கள் பற்றி விளக்குக?
இன்னூல்கள் அனைத்தும் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன. அத்தோடு சொல்லாட்சி, வடமொழிக்கலப்பு, இலக்கண மரபுகள் ஆகியவற்றில் சங்ககாலத்தினை விடவும் வளர்ச்சி பெற்ற ஒரு போக்குக் காணப்படுவதாக அறிஞர் கூறுவர். இன்னூல்களில் 11 நூல்களை அற, நீதிநூல்களாகவும், 6 நூல்கள் அகநூல்களாகவும், களவழி மட்டும் புறம் பற்றிக் கூறுவதாகவும் உள்ளது.

**நாலடியார் :**
இன்னூல் திருக்குறளைப்போல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் போன்றே பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலை பி.யு.போப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பதும் "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" என்ற பழமொழிகள் இதன் சிறப்பை வெளிப்படுத்தும். இந்நூலானது இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம்நிலையமை போன்றவற்றை முன்மொழிந்தே அறத்துப்பாலைத் தொடங்கும். இந்நூலைத் தொகுத்தவர். பதுமனாராவார். கி.பி. 7 - 8 நூற்றாண்டளவில் தொகுக்கப்பட்ட 8 ஆயிரம் சமண முனிவர்களால் எழுதப்பட்ட பாடல்கள்; வைகையாற்றில் இடப்பட்டு, அதில் கரை ஒதுங்கியவையே இந்நாநூறு (400) பாடல்களை 40 அதிகாரங்களில் அறம், பொருள், இன்பத்துப்பாலாக பிரிக்கப்பட்டுள்ளது. கல்விக்கரையில்; "கற்பவர் நாள் சில மெல்ல நினைத்தால், வாழ்க்கையில் பிணி பல, ஆதலால், ஆராய்ந்து அமைவுடையனவற்றையே அன்னம் போல் கற்ற வேண்டும்" என்றும், நீர்நுழையாத இடத்தில் நெய் நுழையும், நெய்நுழையாத இடத்தில் புகை நுழையும், புகைநுழையாத இடத்தில் இரவலன் (இரப்பவன் - பிச்சையெடுப்பவர்) நுழைவான் என நகைச்சுவையோடு கூடிய பாடலுமாக பல சிறந்த அற, அறிவூட்டும் பாடல்களைக் கொண்டுள்ளது.

**நான்மணிக்கடிகை** : நந்நான்கு மணிகள் பதித்து

*சரம் போல் ஆக்கப்பெற்ற அணிகலன் தான் கடிகை என்பதாகும். 104 வெண்பாக்களான நந்நான்கு மணி போன்ற கருத்துக்களை தன்னகத்தே கொண்டு தொகுப்பட்ட நூலே நான்மணிக்கடிகையாகும். வைணவ மதத்தவரான விளம்பி நாகனாரால் தொகுக்கப்பட்டது. நச்சினார்க்கினியர், பேராசிரியர், குணசாகரர் போன்றவர்கள் மட்டுமே தம்உரைகளில் பதிணெண்கீழ்க்கணக்கு நூல்களைக் குறித்துள்ளனர். வைணவரான விளம்பி நாகனார் கி.பி.4 ஆம் நூற்றாண்டினராய் இருக்க வேண்டும் என்பர். இவர் சில அறத்தின்பாற் பட்ட நெறிகளை மீண்டும் மீண்டும் கூறி அவற்றைத் தம் பாடல்களில் வலியுறுத்துவார். "தன்னொடு செல்வது வேண்டின் அறஞ் செய்க" (15), "வெல்வது வேண்டின் வெகுளிவிடல்" (15), "அல்லவை செய்வார்க்கு அறங்கூற்றம்" (83), போன்றன கருத்தாழமுள்ள சிறப்புடை கூற்றுக்களாகும்.*

**இனியவை நாற்பது** : *கி.பி.5 ஆம் நூற்றாண்டினராகக் கொள்ளப்படும் பூதஞ்சேந்தனார் மும்மூர்த்திகளின் கடவுள் வாழ்த்துடன் தொடங்கும் இன்னூலை யாத்துள்ளார். இதில் அடங்கும் 41 வெண்பாக்களிலும் இவை இவை இனியவையெனச் செப்புகின்றார். "வருவாய் அறிந்து வழங்கலினிது", " மானம் அழிந்த பின் வாழாமை முன்னினிதே", "ஒப்பமுடிந்தால் மணவாழ்க்கை முன்னின்று", "குழவி தளர் நடை காண்டலினிது" போன்றன இன்னூலில் காணப்படும் இனியவையாகும்.*

**இன்னா நாற்பது** : *41 வெண்பாக்களாலான கி.பி.4 ஆம் நூற்றாண்டினரான கபிலரால் யாக்கப்பட்ட நூல். இவர்கள் புலால் உண்ணாமையை வலியுறுத்துவதால் கட்டாயமாக சங்ககால கபிலர் அல்ல என்பது உறுதியானதாகும். இவர் சிவன் முருகன், மயோன் (திருமால்), பலராமனை கடவுள் வாழ்த்தில் சுட்டுவார். "இன்னா ஈன்றானை ஓம்பாவிடல்", "ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் முன்னின்னா", "தீமையுடையார் அய்யிருத்தல் இன்னா" போன்ற இன்னாமையை வலியுறுத்தும் சிறந்த அறிவுரைகளை காட்டுவார்.*

**திரிகடுகம்** : சுக்கு, மிளவு, திப்பிலி ஆகிய சேர்ந்த மருந்து திரிகடுகம் எனப்படும். **நல்லாதனாரால்** 101 வெண்பாக்களில் மக்கள் உடல்நலம் பேணும் மூன்று உறுதிப்பொருட்களைக் கூறுவார். திருமாலை கடவுள் வாழ்த்தில் கூறுவதால் இவர் வைணவராயிருக்க வேண்டும். கி.பி.5 ஆம் நூற்றாண்டினர் என்பர். இவர் திருநெல்வேலியின் திருத்தூரைச் சேர்ந்தவர். "நெஞ்சம் அடங்குதல் வீடாகும்" (வீடுபேறு) என்றும், கடன்படா வாழ்வான், வருவாயும் கால் வழங்கி வாழ்தல். போன்ற அரிய கருத்துக்களையும் கூறுகின்றார். பழகினும் பார்ப்பான் (வைதீகவேத மொழியாளர்)த்தீப்போல் ஒழுக வேண்டும் (42) என்றும் இன்னூல் கூறும். மெய்ப்பொருள் உணர்ந்தவர் எவரென்பதை "வைத்தலை இன்சொல்லாய்க் கொள்வானும்
நெய்பெய்த சோறொன்று கூழை மதிப்பானும், - ஊறிய
கைப்பதனைக் கட்டி என்று உண்பானும், இம்மூவர்
மெய்பொருள் கண்டு வாழ்வார் என்பார்.
எல்லாப்பாடல்களின் முடிவிலும் இம்மூன்றும், இம்மூவர் எனக் குறிப்பிடுவார்.

**ஆசாரக்கோவை** : 101 பாடல்களை பல்வேறு வெண்பாவகைகளில் கி.பி.5 ஆம் நூற்றாண்டு வாக்கில் வடமொழி இருடிகளின் நடைமுறைகளை (ஆசாரங்களை)த் தொகுத்து முள்ளியார் ஆக்கியுள்ள நூலேயிதுவாகும். இருந்தாலும் தமிழரின் தொல்நெறிகளான நன்றியறிதல், பொறுமை, இன்சொல், இன்னாசெய்யாமை, நட்பு, அறிவு, கல்வி, ஒப்புரவு ஆகியனவே ஒழுக்கத்திற்கு வித்து என்றும் கூறுகின்றார். இவர் ஓர் சிவனியாராயிருக்கவேண்டுமென்பர் அறிஞர்.

**பழமொழி** : ஒவ்வொரு செய்திக்குப் பின்னும் 400 வெண்பாக்களின் முடிவிலும் ஒரு பழமொழியை வைத்து முன்னுரையரையனார் என்பாரால் யாக்கப்பெற்றதாகும். இவர் கி.பி.5 ஆம் நூற்றாண்டினராய், சமண சமயந் தழுவியவராவார். வச்சிர நந்தினியின் மதுரைச் சங்கத்திலும் இவர் இருந்திருக்கக்கூடும். அறநூலாய் வெளிப்படும் இந்நூல் திருக்குறள், நாலடியார்க்கும் அடுத்ததாகவும் பதிணெண்கீழ்க்கணக்கிலுள்ள மூன்று

பெருநூல்களில் இதுவும் ஒன்றாகக் கொள்ளப்படும். இந்நூல் மனுநீதிகண்டசோழன் கன்றூர்ந்து மகனைக் கொன்றது, தூ ங்கெயில் எறிந்த சோழன் கதை, பொற்கைப் பாண்டியன் தன் கையைக் குறைத்தது, பேகன் மயிலுக்கு போர்வை கொடுத்தது, பாரி முல்லைக்குத் தேர் கொடுத்தது, பல் யானைச் செல்கெழு குட்டுவன் பாலைக் கௌதமனார்க்கு வீடளித்தது போன்ற பல அரிய கதைகளை எடுத்துக்காட்டாகக் காட்டும். "நூ ணலும் தன் வாயால் கெடும்", "நிறைகுடம் நீர் தளும்பலில்", "தமக்கு மருத்துவர் தாம்", போன்ற பழமொழிகள் இந்நூலில் காணப்படும்.

***சிறுபஞ்சமூலம் :*** சமணராகிய காரியாசானால் 102 வெண்பாக்களால் ஆக்கப்பட்டது இந்நூல். இவரும் காணிமேதாவியாரும் மதுரை மாக்காயனாரின் மாணவர்களென்றும். கி.பி.5 ஆம் நூ ற்றாண்டினரென்றும், வச்சிர நந்தினியின் மதுரைச் சங்கத்தில் இவர்கள் இருந்திருக்கக்கூடும் என்றும் அறிஞர் கூறுவர். இவர்களின் நூல்கள் பொது நீதிநெறிகளைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளது. காரியாசான் வளம் கொண்டவரென்றும், கொடையுள்ளம் கொண்டவரென்றும் கூறப்படுகிறது. பொதுவாக சமணசமயீகள் வடமொழியில் மிகத் தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்பட்டனர். கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் சிறந்த மருந்தாக உடல் நலங் காப்பது போல், இதிலுன்ன பாடல்களில் ஐந்து நீதிகளை தொகுத்துக்கூறி மக்களை நல்வழிப்படுத்துவதால் "சிறுபஞ்சமூலம்" என பெயரிடப்பட்டுள்ளதென்பர். சிறந்த கவிஞனுக்குரிய இலக்கணம் பற்றிக் கூறுகிறது. தமிழை நன்கறியாதவன் கவிபாடுதல் நகைப்பிற்கிடமானதெனவும் கூறும். தோற்கன்றைக் காட்டிக்கறந்த ஆவின் பாலை நன்னெறியாளர் உண்ண மாட்டார் என்றும், "தான் பிறரால் சாவவென வாழான் சான்றோரால் பல்லாண்டு வாழ்கவென வாழ்தல் நன்று" என்றும் இயம்புவார்.

***முதுமொழிக்காஞ்சி :*** இந்நூல் மதுரை கூடலூர் கிழரால் 100 குறட்டாழிசையிலான செய்யுட்களால் ஆக்கப்பட்டது. இவரும்

எட்டுத்தொகையில் ஒன்றான ஐங்குறுநூறு தந்த கூடலூர் கிழாரும் ஒருவரேயெனப் பலர் கருதுகின்றனர். உலக நிலையாமையையாகியகாஞ்சித் திணையின் ஒரு துறையை சுட்டிக் காட்டுவார். அறிவுடைச் சான்றோரின் பட்டறின் வெளிப்பாடே இம் முதுமொழிக் காஞ்சி.

ஆர்கலி உலகத்து மட்கட்கெல்லாம்
ஓதலிற் சிறந்ததன்று ஒழுக்கமுடைமை... என ஒழுக்கத்தை வற்புறுத்திக் காட்டும் பாடல்.

**ஏலாதி :** இந்நூல் சிறப்புப்பாயிரம் இரண்டுடன் 82 செய்யுட்களைக் கொண்டுள்ள ஒரு நூல். இந்நூலின் ஆசிரியரும் திணைமாலை 150 இன் ஆசிரியரும் கணிமேதாவியரே. கணிமேதையர் என்றும் கூறப்படுகிறார். இவர் முற்பிறப்பு இப்பிறப்புப் பற்றியும், வீடுபேறு பற்றியும் நன்கு விளக்குவார். இது சமண நீதிகளையும் மிகுதியாகக் கொண்டுள்ளதென்பர். இதில் வடமொழிப் பெயர்கள், தமிழ் நாகரிகத்திற்று மாறுபட்ட செய்திகளும் உண்டெனக் கூறுவர். தமிழில் “ஒன்பது” என்னும் உச்சரிப்பிற்கான சரியான சொல்லான “தொண்டு” எனத் தமது நூலில் பயன்படுத்துவார். மேற்குறித்த நூல்கள் அறநூல்களாகும்.

**இன்னிலை :** இது கடவுள் வாழ்த்துடன் 46 வெண்பாக்களை உள்ளடக்கி அறம், பொருள், இன்பம், வீடென நான்கு பற்றிப் பேசும் ஒரு நூல். இவர் “ஆக்கியளித்து அழிக்குங் கந்தழியின் பேருருவே” (40) என்று சிவனைக் குறிப்பதால் இவர் சிவநெறியினரெனக் கொள்ளலாம். இவரின் பெயரும் பொய்கையாயிருப்பதால் இவர் ‘களவழி’ பாடிய பொய்கையாருக்குப் பிற்பட்டவரென்பார். கா.க.பிள்ளையவர்கள். இன்னூலை வ.உ.சிதம்பரனார் உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். திரிகடுகம் பெண்ணுக்கு இலக்கணம் கூறுவது போல் ‘இன்னிலை’யும் கூறுகிறது. பெண் ஒத்த உரிமை உடையளாதல் வேண்டும் என்னும் கருத்தை நூலில் வைக்கப்பட்டுள்ளது நூ

லிற்குச் சிறப்பாகும். பதிணெண்கீழ்க்கணக்கு நூல்களில் கைந்நிலை ஒன்றென ஏலாதவர் 'இன்னிலை' என்ற அறநூலை ஏற்பராம் என்கின்றனர் அறிஞர்.

**திருவள்ளுவமாலை** : திருக்குறள் காலத்தால் அதாவது கி.மு.இக்கு முட்பட்டதெனப் பலர் கொள்வதால் இதில் சேர்க்கப்படவில்லை. திருக்குறள் ஒரு அறநூலாக, அறிவு நூலாக, உணர்வு நூலாக, மாந்த அக புறவாழ்வை நெறிப்படுத்தும் நூலாக, பொதுவுடமை நூலாக, ஒரு புரட்சி நூலாகக் காட்சி தருவது. இதை உலக, நம்நாட்டு அறிஞர்களின் புகழ்ச்சிக்கும், பாராட்டுக்கும், வாழ்த்துதலுக்கும் உட்பட்ட உயர்ந்து நிற்கிறது. எனவே இவ்வறிஞர்களின் செறிந்த கருத்தாழமுள்ள கருத்துக்களை, குறளாக, பாவாக, உரையாக வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வெளிப்பாடுகளின் தொகுப்பே இத்திருவள்ளுவமாலையாகும்.

"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்" - ஔவையார்

"சமயக் கணக்கர் மதவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவன்" - கல்லாடனார்

"தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனைகாட்டும் படித்தால்" - கபிலர்

"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிக விளங்கித் - தீதற்றோர்

"உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு" -
மாங்குடிமருதனார்

"வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - பாரதியார்

"பனித்துளியில் பனிமலை (இமயமலை) காட்டும்" திருக்குறளை போற்றும் பாக்களால் ஆனது இத்திருவள்ளுவமாலை. திருக்குறள் ஆனது 50 மேற்பட்ட உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல். கிறீத்தவ வேதநூல் மொழிபெயர்ப்பு நூலுக்கு அடுத்தபடியிலுள்ளது. இதற்கு

உரை கண்டவர்களும் 50 பதின்மார்களுக்கு மேல் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். தருமர், மணக்குடவர், தாமத்தர், பரிதி, பரிமேலழகர், முனைவர் மு.வரதராசன், கலைஞர் மு.கருணாநிதி, முதுமுனைவர்.இரா.இளஞ்குமரனார் (இன்றையவர்) ஆவார். இவற்றுள் பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், காளிங்கர், ம.வரதராசன் உரைகளும் கலைஞர். கருணாநிதி, முதுமுனைவர்.இரா..ளங்குமரனாரின் உரைகளும் கிடைத்துள்ளன.

**ஐந்திணை ஐம்பது** : இந்நூல் அகப்பொருளுக்குரிய அரிய நூலாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளுக்கும் பத்துப்பத்துப் பாடலாக 50 பாடல்களைக் கொண்டுள்ளது. சிறந்தநடையும், செறிந்த பொருள்வளத்தையும் கொண்டு மாறன் பொறையனாரால் ஆக்கப்பட்டதாகும். இங்கு சுனையில் காணும் சிறிதளவு நீரை பிணைமான் குடிக்க இசையாது என நினைத்த கலைமான் அந்நீரைத் தான் குடிக்க உறிஞ்சுவது போல் பொய்யாக நடிக்க பிணைமான் நீர்குடிக்க விழையுமென நினைத்துச் செயற்படுவது போல் காட்டுகின்றார் (பாலை வழி). 'கொல்லர் தெருவில் ஊசி விற்றல்' என்ற பழமொழியும் இங்கு காட்டப்படுகிறது.

**திணைமொழி ஐம்பது** : இது கண்ணன் சேந்தனாரால் ஆக்கப்பட்டது. திணைக்குப் பத்துப்பாடலாக 50 பாக்களைக் கொண்டது. சொல், பொருள், நயங்கள் நிறைந்த சிறந்த நூலாகும்.

**ஐந்திணை எழுபது** : இது அகப்பொருள் துறைகளை விளக்க மூவாதியார் என்பவரால் யாக்கப்பட்ட நூல். இது திணைக்கு 70 பாக்களைக் கொண்டது.

**திணைமாலை நூற்றைம்பது** : இது கணிமேதாவியரால் 153 வெண்பாக்களில் யாக்கப்பட்ட ஐந்திணை நிலங்களின் இயற்கை வளங்களையும், அழகையும் வெளிப்படுத்தும் நூலாகும்.

**கைந்நிலை** : இது ஐந்திணை அக இன்பங்களை விரித்துக் கூறும் புல்லங்காடனார் யாத்த நூலாகும். திணைக்குப் பன்னிரண்டு பாக்கள் மூலம் 60 வெண்பாக்களை கொண்டுள்ளது. சிலவெண்பாக்கள் சிதைந்துள்ளனவாம்.

**கார் நாற்பது** : கார்கால மென்பது முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுதாகும். தலைவனைப் பிரிந்த தலைவி கார்காலம் வந்ததும் பிரிவை நினைந்து ஏங்குவதும் அவன் வரவை எதிர்பார்த்து நிற்பதுவும் இங்கு கார்காலம் புனைந்துரை ஒவ்வொரு பாடலிலும் வருவதால் இது இப்பெயர் பெற்றது. இந்நூலின் ஆசிரியர் கண்ணன்கூத்தனாவார். கார்காலச் சிறப்பையும் அகவொழுக்கத்தையும் விரித்துக் கூறுகிறது. இதன் வருணனை பாராட்டத்தக்கதாயுள்ளது.

**களவழி நாற்பது** : இது ஒரு புறப்பொருள் நூல். நூலை யாத்தவர் பொய்கையார். இவர் சங்ககால பொய்கையாராவார். சேரமான் கணைக்கால் இரும்பொறையின் நண்பர். (சேரன்) சோழன்செங்கணானுடன் போரிட்டுத் தோற்று சிறைவைக்கப்பட்டதால் இவர் மனம் நொந்து சோழனிடம் சென்று அவனைப் புகழ்ந்து பாடி நண்பன் சேரமானை மீட்டார். இவர் அன்று நடந்த போர்க்கொடுமைகளையும், நால்வகைப் போர்த் திறத்தையும் நயம்பட எடுத்துரைக்கின்றார். கார்த்திகை விழாவை சிறப்புறப் பாடுகின்றார்.

137. தமிழிலுள்ள உயர் காப்பியங்கள் எவை? இன்று வரையான உயர் காப்பியங்களைப் பட்டியலிடுக?

தமிழ்க் காப்பியங்களில் தொன்மையுடையவை என ஐம்பெருங்காப்பிய்ஙகளையும் ஐந் சிறுகாப்பியங்களையும் குறிப்பிடலாம். காப்பியங்களின் உச்சியில் நிற்பவை இரட்டைக் காப்பியங்களென கூறப்படும் சிலப்பதிகாரமும், மணிமேகலையுமாகும். இதில் மணிமேகலை மதம் (புத்தம்) சார்ந்து நிற்பது. எனவே முதற் காப்பியமாகவும், முத்தமிழ்க் காப்பியமாகவும், நாடகக் காப்பியமாகவும் மிளிர்ந்து நிற்பது

*சிலப்பதிகாரமாகும். இன்றுவரை காப்பியங்கள் வளர்ந்து பல்வேறு வடிவமும், சாயலும், உணர்வும் பெற்று வளர்வதாகவும் இவற்றை பின்வரும் 12 பிரிவுக்குள் அடக்கலாமென்கிறார் தமிழண்ணல் அவர்கள் தமது "புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு" என்னும் நூலில்*

*1) முதற்காப்பியம் - சிலப்பதிகாரம்*

*2) இரட்டைக்காப்பியம் - சிலப்பதிகாரம், மணிமேகலை*

*3) அகவற்காப்பியம் - அகவல் யாப்புடையன*
*- பெருங்கதை இவை மூன்றும் அகவல் யாப்பினவாகும்.*

*4) முதல் ஐந்து காப்பியங்கள் - மேற்குறித்த மூன்றுடன் சிந்தாமணி, சூளாமணி*
*- இவை காலத்தால் முற்பட்டவை*

*5. ஐம்பெருங்காப்பியங்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி*

*6) ஐஞ்சிறுகாப்பியங்கள் - யசோதரகாவியம், உதயணகுமாரகாவியம், நீலகேசி, நாககுமாரகாவியம், சூளாமணி*

*7) இராமாயணம் - இராமகதை, கம்ப இராமாயணம்*

*8) தொன்ம (புராண)க் காப்பியங்கள் - பெரியதொன்மம், கந்த தொன்மம்*

*9) பாரதநூல்கள் - பெருந்தேவனார் பாரதம், பாரதவெண்பா, வில்லிபாரதம், நல்லாப்பிள்ளை பாரதம்,*

நளவெண்பா, நைடதம்

10) தொன்மங்கள் - திருவிளையாடற் தொன்மம், தலத்தொன்மங்கள், பிற

11) சமயக்காப்பியங்கள் - இசுலாமியம் : சீறாத்தொன்மம்
கிறீத்தவம் : தேம்பாவணி, இரட்சணிய யாத்திரீகம்

12) இக்காலக் காப்பியங்கள் - பாஞ்சாலிசபதம், பாண்டியன்பரிசு, இராவணகாவியம், முடியரசனின் பூங்கொடி, திருத்தொண்டர் (கிறீத்தவ)காப்பியம்

138. *சிலப்பதிகாரத்தை யாத்தவர் யார்? இதன் தோற்றுவாயை, உள்ளீட்டை நுண்ணிய முறையில் ஆய்க?*

*சிலப்பதிகாரக் காப்பியத்தை யாத்தவர் சேரமன்னன் சேரன் செங்குட்டுவனின் உடன்பிறப்பான இளங்கோ அடிகளாவார். இக்காப்பியத்தை யாக்க அவரைத் தூண்டிய காரணிகள் என்ன என்பதை நுணுகி ஆராயும் போது, அன்றைய தென்தமிழ் நாட்டின் சூழல், அங்கு கடைப்பிடிக்கப்பட்ட மரபுகள், மக்களிடையே காணப்பட்ட மத, பொருளாதார மேலாண்மைகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாய் இருந்திருக்கிறது. அன்றைய ஆட்சி மநு நெறிப்பட்டதாய் வைதீக வேதம் பிராமணரின் செயற்பாடுகள், மன்னன், மக்களைத் துன்புறுத்துவதாகவும் (களவாடிய பிராமணரை சிறையிலிட்டதற்காக மன்னனை அவன் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்கவும், அவனுக்குக் கொடை வழங்கவும் கோரிக்கை விட்டு, குழப்பம் விளைவித்து நிறைவேற்றியது),*

*பெண்ணை இழிவுப் பிறவியாகவும், அவளுக்கு துறவு, கோவில் பூசகராகும் தகுதியில்லை என்பதாகவும், தமிழன் சாதியப்*

பகுப்பில் கடைச்சாதியினனாகவும், அவன் மொழி தீட்டு மொழி என்றும் படைக்கும் கடவுளின் காலால் பிறந்தவனென்றும், அவன் எந்த மறுப்புமின்றி உயர் சாதியினர்க்குத் தொண்டாற்ற வேண்டுமென்பதாகவும் இருந்ததால், இது இளங்கோவடிகளை உறுத்தி, உணர்வு பெறச் செய்திருக்க வேண்டும். எனவே தான் தொல் தமிழன் பெண்ணை எவ்வளவு உயர்வாய் வைத்து தெய்வமாய் போற்றியதையும், தமிழ்க் குமுகாயம் தாய்வழிக் குமுகாயமாக இருக்கவேண்டுமென்பதை வலியுறுத்தவும், பெண்தெய்வ வழிபாட்டை மறுமலர்ச்சி பெறவேண்டும் எனவும்

சிலப்பதிகாரம் செய்தார். சிலப்பதிகாரத்தில் எந்தவொரு ஆணையும் அவர் உயர்த்திப் பார்க்கவில்லை ஆனால் பெண்களனைவரையும், அதாவது வணிகப்பெண்ணாகிய கண்ணகியை மற(வீர)க்கற்பினராகவும், அரசி கோப்பெருந்தேவியை அறக்கற்பினளாகவும், கணிகையர் பெண் மாதவியை அவர்க்கும் வாழ்வு உண்டு, துறவு உண்டு என உறுதி செய்து அவளை துறவுக்கற்பினளாக்கியும், இன்று உலகம் போற்றும் அன்னை திரேசா போன்றவர்கள் தோற்ற மாதவி தன் மகள் மணிமேகலையை வித்தாக்கி பெண்ணும் துறவுக்கு உரித்துடையவள் என்பதை உறுதி செய்கின்றார்.

அதுமாத்திரமா? சேரன் செங்குட்டுவன்கட்டுவித்த முதல் கண்ணகி கோவிலின் பூசகராக இழிவுப்பிறவியாகிய பெண் தேவந்தி (பிராமணப்பெண்) யை அமர்த்தி வைதீக, ஆரிய, ஆண் மேலாண்மைக்கு ஆப்பு வைத்தார். மாதவியின் தாய் சித்திராபதியையும் தேவலோகப் பெண் தலைமுறையில் வந்தவரென்றார். கவுந்தி அடிகள், மாதரி, ஐயை போன்றோரையும் சிறப்பித்தார். இழிவுச்சாதியர் பிறக்கும் (மநுநெறி) காலுக்கும் சிலம்பிட்டு உயர்த்துகின்றார். என்னே இளங்கோ அடிகளின் பெண்ணியப் புரட்சி (எனது பெய்யெனப் பெய்யும் மழை பார்க்க) எனவே இது ஓர் பெண்ணியப் புரட்சி நூல்.

139. சிலப்பதிகாரக் காப்பியத்தின் ஊடாக தமிழன் அடையும் பயன்கள் எவை? விளக்கு

*இந்நூலானது தமிழ்நாட்டின் முப்பெரும் வேந்தர்களான சேர, சோழ பாண்டியர்களை உள்ளடக்கியதாகவும், அவர்களின் தலைநகரின் பெயர் கொண்டு வஞ்சி, புகார், மதுரை என மூன்று காண்டங்களாகப் பிரித்து முறையே 7, 10, 13 காதைகளாகவும் அவர்கள் மூவரும் ஒன்று சேர்ந்து இருத்தலையும் நடுவகப்படுத்தி (வேண்டியும்) நூல் செய்தார். இத்தோடு நின்றுவிடாமல் இதையொரு இசைநாடகப் பண்புகள் மிளிர ஆக்கியமையாலும் இடையிடையே உரைநடைகளும் காணப்படுவதாலும் இந்நூலை முத்தமிழ்க் காப்பியமாகவும் (இயல், இசை, நாடகம்) குடிமக்கள் காப்பியமாகவும், நாடகக் காப்பியமாகவும், வரலாற்றுக் காப்பியமாகவும், தமிழர் தேசிய காப்பியமாகவும் போற்றப்படுகிறது. இந்நூலுக்கு அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாரின் 23 காதைகளுக்கான (கானல் வரி நீங்கலாக) உரையும் உள்ளதென்பர்.*

*சிலம்பில் அகப்புறக்கூறுகள் மிகப்பல. முல்லை (ஆய்ச்சியர் குரவை), குறிஞ்சி (குன்றக் குரவை), மருதம் (நாடுகாண் காதை), நெய்தல் (கானல் வரி), பாலை (வேட்டுவ வரி) என ஐந்நிலங்களையும், மக்கள் வாழ்வு முறைகளும் காணப்படுகின்றன. காட்சிக் காதை, கால்கோட் காதை, வரந்தருகாதை யென தொல்காப்பியர் சுட்டும், துறைகளான காட்சி, வாழ்த்தலென (1006) வகுத்துரைக்கிறது. திருக்குறளின் வழியையும் சில இடங்களில் பின்பற்றுகிறது. அத்தோடு அன்றைய கலைகளையும், மக்கட் பழக்கவழக்கங்களையும் உணர்த்தும் இடங்களும் உண்டு. சிலப்பதிகாரம் தமிழர்களின் "இசை இலக்கணமென்றும் போற்றப்படுகிறது. ஏனெனில் மங்கள வாழ்த்துப் பாடல், அரங்கேற்றுக்காதை, கானல்வரி, வேட்டுவவரி, வேனிற்காதை, ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வஞ்சினமாலை, குன்றக்குரவை. வாழ்த்துக்காதை போன்றன அக்காலத்து இசைக்கலை, இசைப்பாடல், அமைதி, ஆடல்வகை பற்றியும் செய்திகள் பலவாகும்.*

*மாதவி நாட்டியக் கலையை நாட்டிய ஆசிரியன், இசை, தமிழ், தண்ணுமை, குழல், யாழ் வல்ல ஆசிரியரும் சேர்ந்து தான்*

பயிற்ச்சி கொடுத்துள்ளனர். இவை மாத்திரமல்லாது நாட்டிய அரங்கமைப்பு, எழினி (திரை) அமைப்பு, விளக்கொளி அமைப்பு என்பனவும், கடலாடு காதையில் 11 வகை ஆடல்களும் சுட்டப்படுகின்றன. கொடு, கொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல்லாடல், பாவைக்கூத்து, கடையம் என்பன அவை. காட்டுப்புற இலக்கிய வடிவங்களான வேட்டுவவரி, கானல்வரி, ஆற்றுவரி, ஊசல்வரி, கந்துகவரி, அம்மானை வரி ஆகியவற்றையும் வெளிப்படுத்துகின்றன. இவை மாத்திரமா ஆடை அணிகலங்கள், அழகூட்டும் பொருட்கள் பற்றிய விரிப்புக்களும் உள்ளீடாய், தமிழனின் முத்தமிழாய் பரவிக்கிடக்கக் காணலாம். பிற்காலத் தமிழ்க் காப்பியங்களின் சொல்வளமும், இலக்கியப் பல்வளமும் கொண்டு மிளிர்வதற்கு இச்சிலப்பதிகாரமே அடித்தளமென்றால் மிகையாகாது.

140. *சிலப்பதிகாரக் கதையைச் சுருங்கக் கூறுக?*

சோழவளநாட்டின் புகார் நகரில் வாழ்ந்த வணிகரான கோவலன் கண்ணகியின் திருமணம் நடைபெற்று இல்லறம் சிறப்புற நடைபெறுகிறது. சிறிது காலத்தின் பின் ஆடலழகி மாதவியின் நடன அரங்கேற்றம் கண்டு கோவலன் அவள் பின் செல்கின்றான். இவர்களின் இணைப்பின் காரணமாய் மணிமேகலை என்னும் குழந்தை கிடைக்கிறது. இவர்களுக்கிடையில் ஏற்பட்ட ஊடல், நிலையான பிரிவை ஏற்படுத்தி கோவலனை கண்ணகியின் பால் மீண்டும் ஈர்க்கிறது. இவனும் தன் செல்வங்களையெல்லாம் விட்டு வெறுங்கையனாய் வந்ததால் கண்ணகியின் சிலம்பை நம்பி புகார் விட்டு மதுரை செல்கின்றனர். அங்கு கண்ணகியின் சிலம்பை விற்கச் சென்றபோது பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவியின் காற்சிலம்பைத் திருடிய பொற்கொல்லர் கோவலனைக் கண்டு, இவனே அரசியின் சிலம்பைத் திருடியதாக அரசனிடம் பொய்க்குற்றம் சுமத்துகின்றான். இதை ஆராய்ந்து பாராது மன்னன் கோவலனை படுகொலை செய்விக்கின்றான். இதைக் கேள்வியுற்ற கண்ணகி சீற்றமுற்று அரசவை சென்று மாணிக்கக்கல் பதித்த ஒற்றைச் சிலம்பை உடைத்துத் தன் கணவன் கள்வன் அல்ல என்பதை உறுதி செய்து நிலைநாட்டுகின்றாள். (அரசியின் சிலம்பு முத்துக்கல்

*பதித்தது). இவள் சினம் தீராது மதுரையை எரிக்கின்றாள். அரசன், அரசி இறக்கின்றனர். பல நூறு பொற்கொல்லர்களின் உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. பாண்டிய நாடு ஒரு தளம்பல் நிலையில் காணப்படுகிறது. கொற்கையில் இருந்த பாண்டிய இளவரசன் மதுரை வந்து குழப்பத்தை அடக்குகின்றான். கண்ணகி நடையாய் நடந்து வஞ்சிமாநகர் சென்று குறிஞ்சி வாழ் மக்கள் பலர் கூடி நிற்க துயருற்றிருந்த கண்ணகியும், கோவலனும் விண்ணகம் (வேங்கை மரத்தடியிலிருந்து) சென்றதைக் காண்கின்றனர். இக்காட்சியை பேரியாற்றங்கரைக்கு வந்த சேரவேந்தன் சேரன் செங்குட்டுவன் அவன் துணைவி வேண்மாளுக்கும் உரைக்கின்றனர். இவனுடன் இளங்கோ அடிகளும், சாத்தனாரும் உடனிருந்ததால் சாத்தனார் அப்பெண்ணாகிய கண்ணகிக்கு உற்றதை தான் அறிவேன் எனக் கூறி மேற்குறித்த கதையைக் கூற இளங்கோ அடிகள் அதைக் காப்பியமாக வரைந்தார்.*

*141. இரட்டைக் காப்பியத்தில் ஒன்றான மணிமேகலை பற்றியும் அதன் சிறப்புக்கள் பற்றியும் விளக்கு?*

*மணிமேகலை ஆடலழகி மாதவிக்கும் கோவலனுக்கும் கிடைத்த குழந்தைச் செல்வம். இவளது பெயரிலேயே இக்காப்பியம் மதுரைக்கூல வாணிகன் சித்தலைச் சாத்தனாரால் யாக்கப்பெற்றதாகும். இவரே இளங்கோ அடிகளுக்கு கோவலன் கண்ணகி கதையைக் கூறியவருமாவார். இந்நூலும் சிலம்பு போல் 30 காதைகளைக் கொண்டுள்ளது. குரவைப் பாடல்கள், வரிப்பாடல்கள், காணப்படாமல் சிலம்பிலும் வேறுபட்டு நிற்கிறது. சிலம்பு சமயசார்பற்றதாய், இயற்கையைப் போற்றுவதாயுள்ளது. ஆனால் மணிமேகலையோ பௌத்த மத உண்மைகளையே பறைசாற்றி நிற்கிறது. இதுவே தமிழில் தோன்றிய முதல் சமணக் காப்பியமாகக் கொள்ளப்படுகிறது. இந்நூல் அன்று 14 சமயக்கணக்கர்கள் இருந்ததாகவும், மணிமேகலை வைதீகம், சமயம், சைவம் போன்ற சமயங்களுடன் வாதிட்டதாகவும் கூறும். இந்நூல் காவிரிப்பூம்பட்டினத்தில் 28 நாள் தொடர்ந்து நடைபெறும் இந்திர விழாவில் மாதவியோ, மணிமேகலையோ நடனமாட வராததால் ஊரார் பழிப்பதாக சித்திராபதி (பாட்டி)*

மணிமேகலையிடம் ஆள் அனுப்புகின்றாள். ஆனால் அவள் தான் கற்புக்கரசி கண்ணகியின் மகளெனக் கூறி அதில் நடனமாட மறுத்துவிடுகிறாள்.

மணிமேகலையின் அழகு கண்டு சோழ அரசன் மகன் உதயகுமாரன் அவளை அடைய பலமறை முயற்ச்சிக்கின்றான். இதற்கு ஒருவகையில் மணிமேகலையின் பாட்டி அவனுக்கு உதவுகின்றாள். சுதமதியாகிய மணிமேகலையின் தோழி அவனுக்கு அறிவுரை கூறி அனுப்புகின்றாள். மணிமேகாலத் தெய்வம் மணிமேகலையைத் தனிமைப்படுத்த மணிபல்லவத்திற்கு அவளை தூக்கிச் சென்று அவளது பழம் பிறப்பைக் கூறி (உதயகுமாரன் கணவனாய் இருந்ததை) அவனைத் தவிர்க்கவே இங்கு கொண்டு வந்ததாகவும், மணிமேகலை வேற்றுருக் கொள்ளவும், வான்வழிச் செல்லவும், பசியைப் போக்கவுமான மூன்று சித்து (மந்திர) வித்தைகளை கூறிச் சென்றுவிடுகிறது. அதன்பின் தீவதிலகை தோன்றி ஆபுத்திரனிடமிருந்த அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி என்ற ஏனத்தை (பாத்திரம்) அவளிடம் கொடுக்க, அவள் அறவண அடிகளிடம் அறிவுரை கேட்டு ஆதிரை என்ற கற்பினளிடம் முதல் பிச்சை வாங்கி அதிலிருந்து ஏழைகளுக்குப் பசிப் பிணி போக்கினாள். இதையறிந்த உதயகுமாரன் இவளை நாடிவர, மணிமேகலை காயசண்டிகை வடிவமெடுத்துப் பணியைத் தொடர்ந்தாள். சிறைச்சாலையிலிருந்த குற்றவாளிகளுக்கும் உணவளித்து அதை அறச்சாலையாக மாற்றினாள். இதை அறிந்த மன்னனும் அவளின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றினான்.

ஆண்டுக்கொருமுறை அங்குவரும் காய சண்டிகையின் கணவன் "விஞ்சையன்", காயசண்டிகையை ஒத்திருந்த மணிமேகலையைத் தன் மனைவி என நினைத்து உலகவறவியலுக்குச் சென்ற போது அங்கு வந்த உதயகுமாரனைக் கண்டு ஐயுற்று அவனைத் தனது வாளால் வெட்டிக் கொன்றுவிட்டான், பின் கந்திற் பாவையின் அறிவுரையால் அவன் சென்றுவிட மணிமேகலை தன் மகனைக் கொலை செய்து விட்டாளென

எண்ணிய அரசி அவளைச் சொல்லொணஇன்னல்களைக் கொடுத்து வதைத்தாள. ஆனால் மணிமேகலையில் எந்த மாற்றத்தையும் காணாததால் அம்மன்னன் தேவி அறிவு பெற்று விடுதலை செய்வித்தான். அங்கிருந்து ஆபுத்திரநாடு சென்று பின் மணிபல்லவமடைந்து

அங்கிருந்து வஞ்சிமாநகர் சென்று கண்ணகி கோவலன் கோவில் சென்று அவர்களை வணங்கிப் பின் காஞ்சி நாடு சென்று தாய் மாதவியையும் அறவண அடிகளையும் கண்டபின் தன் ஆண்வேடம் கலைத்து அறவண அடிகளிடம் அறவழி கேட்டு காஞ்சியிலேயே இருந்தாள். இங்கு அவள் சைவம், அளவை, பிரமம், வைதிகம், ஆசீவகம், சமணம், சாங்கியம், வைசேடிகம், பூதம் ஆகிய மெய்யியல் கோட்பாடுகளையும் அவரவர்களிடம் கேட்டறிந்து கொண்டாள்.

இக்காப்பியத்தை வ.சுப.மாணிக்கனார் பரத்தையொழிப்பு, சாதியொழிப்பு, சிறையொழிப்பு, மதுவொழிப்பு, சுய சீர்திருத்தங்களின் வைப்புப் பெட்டகமென்பார். பரசுராமன் கதை போன்ற பல கதைகளையும், கற்பனை கலந்த வருணனைகளையும், எளிமையான நடையையும் இதில் காணமுடியும். இந்நூலில் வடமொழி. பாலி மொழிச் சொற்கள் மிகுதியாய் உள்ளன. உலகியல் மாந்தரை வழுப்படுத்த முயலும் என்பதையும், பசிப் பிணிக் கொடுமையையும் இந்நூல் குறிப்பிடுவது போல் வேறு எக் நூல்களிலும் காணமுடியாதென்பர். இது ஓர் சிறந்த குமுகாய அறநூல், சமயம் கருதி இந்நூல் புறக்கணிக்கப்பட்டிருக்க வேண்டும் போல் உள்ளது. மணிமேகலையை, இதில் வரும் குச்சரக்குடிகை (சிறிய கோட்டம் / குச்சு என உலகவழக்கிலுள்ளது.) என்ற சொல்லாட்சியை வைத்து இது வடநாட்டுக் கூச்சரத்தைக் குறிப்பதாகவும், இதன் பதிகங்கள் பொய்யானவையென்றும், இது யாக்கப்பட்டதென்று காலம் கி.பி6ஆம் நூற்றாண்டிற்க்கு பிற்பட்டதென சிலர் முரண்டு பிடிப்பர். மேகலையின் மகாயான பௌத்தம் காலத்தால் மிக முற்பட்டது. ஓரிரு சொற்களை வைத்தும், சமயம் சார்ந்தும் மேகலையை காலத்தால் பின்

தள்ளுவதும், புறக்கணிப்பதும் ஏற்புடையதல்ல.

**பெருங்கதை** : இதற்கு கொங்குவேள் மாக்கதை என்னும் பெயரும் உண்டு. இது குணாட்டியர் என்பவரால் பைசாச மொழி (பிசாசுமொழி - தமிழ்மொழி - தீட்டுமொழி)யில் கோசாம்பி நகரமன்னன் உதயணன் கதை. இதைப் பெருங்கதை என்றும் கூறுவர். இதன் காலம் கி.பி.7 ஆம் நூற்றாண்டெனக் கூறுவார் கா.சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள். இதுவும் மக்களின் நடைமுறைகள், புனைவுமுறை, நடைநயம் போன்றன கருதி சிலம்பு, மேகலை போல் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். இதுவே முதல் சமணக் காப்பியமாயிருக்க வேண்டுமென்பர் அறிஞர். உதயணன் யாழிசைவல்லான், யானையை அடக்கும் ஆற்றல் படைத்தவன். நண்பன் யூகியுடன் இணைந்து வளர்கின்றான். தந்தையின் மாமனின் அரசுகளையும் தன் முயற்ச்சியால் பெற்றவன். உச்சயினி மன்னனால் சிறைப்படுத்தப்படுகிறான். நண்பன் யூகியால் மீட்கப்படுகிறான். இம்மன்னனின் பட்டத்து யானையை அடக்கி வாசவவத்தையை மணம் முடிக்கின்றான். தன்னை மறந்த நிலையில் இன்பக்களிப்பில் திழைத்திருக்கிறான். யூகி இவனுக்கு அறிவுரை கூறி மீட்டெடுக்கின்றான். பின் வேறு மூன்று பெண்களை மணக்கின்றான். வாசவவத்தையின் மகன் மணம் முடித்த பெண்ணை வித்தியாதரன் ஒருவன் கடத்திச் சென்றதால் உதயணன் வித்தியாதர உலகம் சென்று அவர்களை வென்று பெருமன்னனாய் வாழ்கின்றான். பின் மூவரில் ஒருவரான பதுமாவதியின் மகனிடம் அரசுரிமையை ஒப்படைத்துவிட்டுத் துறவு கொள்கின்றான். இந்நூல் ஊழின் வலி, நட்பின் கடமை, ஆட்சிமுறை, சமணக்கொள்கைகள், நீத்தார் பெருமை என்பன விளக்கப்படுகிறது. அன்றைய நாகரிக வாழ்வின் சிறப்பை இந்நூல் கூறுவது போல் வேறெந்தத் தமிழ் நூல்களிலும் காண இயலாது. இந்நூலின் தொடக்கம், முடிவு, இடைப்பட்ட சில பகுதிகளும் கிடைக்கப்பெறவில்லை. இருந்தும் இதிலுள்ள இலக்கிய திட்பநுட்பங்கள் பல செறிவாயிருந்தும் கற்றறிந்தோரால் போற்றப்படவில்லையென்பது பெரும் மனக்குறையே.

***சீவகசிந்தாமணி*** **:** பற்று இலக்கியம் விருத்தங்களை இசைத்தது. சிலம்பில் வரிப்பாடல்களில் விருத்தப்பாக்களுக்கான தோற்றுவாய் உண்டென்பர். ஒரு பொருளில் பத்தடுக்கிப் பதிகங்கள் பாடினர். பற்று இலக்கியக்காரர். இதைத்தழுவி கதைக்காப்பியத்தை ஆக்கியவர் திருத்தக்கதேவர். சேக்கிழாரும், கம்பரும், கச்சியப்பரும் இவை எடுத்தாழுவதற்கு முன்னோடி திருத்தக்கதேவரே. இது 13 இலம்பகங்களையும், மூவாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுள்களையும் கொண்டது. நாமகளிலம்பகம் தொடங்கி முத்தியிலம்பகம் வரை 13 இலம்பகங்கள் மணவினைபற்றிக் கூறும்.சீவகன் எண்மரை மணந்ததும் நணபன் பதுமுகனுக்கு கோவிந்தையை மணம் முடித்து வைத்தது ஆகிய மணவினை பற்றிக் கூறுவதால் இந்நூல் 'மணநூல்' என்றும் கூறப்படும். சமணத்துறவி இன்பச்சுவை சொட்ட நூல் யாத்ததால் வந்த பழியைப் போக்க நிலையாமையை வலியுறுத்தும் "நரிவிருத்தம் நூ ல் பாடினார் என்பர். இதற்கு நச்சினார்க் கினியர் உரை எழுதியுள்ளார். ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன் தன் மனைவிமேல் தீராக் காதல் கொண்டு ஆட்சியைக் கட்டியங்காரனிடம் (அமைச்சன்) ஒப்படைக்க அவன் சூழ்ச்சி செய்து அவனைக் கொன்று விடுகிறான். கருவுற்றிருந்த அரசி விசையை இடுகாட்டில் சீவகனைப் பெற்றுப் போட்டுவிட்டு துறவு கொண்டு போய்விட்டாள். கந்துக்கடன் என்ற வணிகன் அவனை வளர்த்து அச்சணந்தி என்பவரிடம் கல்விபயிலவும் செயல் செய்கின்றான். இவன் வளர்ந்து பல்வேறு திறமைகள் காரணமாய் எண்மரை மணக்கின்றான். தன் நண்பனுக்கும் மணம்முடித்து வைக்கின்றான். பின் தன் நாட்டையும் கைப்பற்றி ஆண்டு வந்த பின் இல்வாழ்வின் நிலையாமையை நினைந்து ஞானம் பெற்று துறவுநிலை பெறுகின்றான். இது கி.பி.8 - 9 ஆம் நூற்றாண்டினதென்பர். கற்பனைத்திறத்திலும். சந்த இனிமையிலும் சிந்தாமணிக் காப்பியம் சிறப்புடையது. முதல் விருத்தப்பாக் காப்பியமுமாகும்.

**சூளாமணி :** இது தோலாமொழித் தேவரால் சிந்தாமணிக்குப் பின் யாக்கப்பட்ட சமண மதக் காப்பியமாகும். 12 காண்டங்களையும் 2000 மேற்பட்ட செய்யுட்களையும் கொண்டது. விருத்தப்பாக்களில் பாடியபோதும் சில இடங்களில் திருத்தக்கதேவரையும் விஞ்சிவிட்டாரென்பர். பாகவதமும், சூளாமணியும் கதை கூறும் போக்கில் ஒத்துள்ளதாகவும், பலராமனும் கண்ணனும் போல் இதில் திவிட்டனும், விசயனும் இடம்பெறுகின்றனர். இவர்களின் பகைவனும் கஞ்சனைப் போன்றவனே. எல்லாவகையிலும் சூளாமணிப் பெருங்காப்பியமாகக் கொள்ளத்தக்கதென்பர். மைசூரில் சிரவண பெலகோலாக் கல்வெட்டில் திருத்தக்கதேவர், தோலாமொழிதேவர் ஆகியோரைப் பற்றிய குறிப்புக் காணக்கிடக்கின்றதென்றும் கூறுவர்.

**வளையாபதி** : புறத்திரட்டிலிருந்தும், இலக்கண நூல்களிலிருந்தும் செய்யுட்களையே தொகுத்து ஆக்கப்பட்ட சமணமத நூலாகக் கொள்ளப்படுகிறது. ஒட்டக்கூத்தர் கவியழகு வேண்டி வளையாபதியை நினைந்தார் என்று தக்கயாகப் பரணியுரையாசிரியர் கூறுவார். இந்நூல் முழுமையும் கிடைக்கப் பெறவில்லை. தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் இந்நூல் சிந்தாமணிக்கு முந்தியதென்பார். நெல் கரும்புடன் போட்டியிட்டு வளர்வதாகவும் கரும்பு கமுகுடன் போட்டியிட்டு வளர்வதாகவும், கமுகு வானத்தை எட்டிப்பிடிக்க வளர்வதாகவும் கற்பனை நயத்துடன் கூடிய இதுபோற்பல பாடல்கள் காணப்படும் என்பர் அறிஞர். மக்கட் பேற்றையும் சிறப்பிக்கும் ஒரு பாடல் அதனோடொத்த பல உண்மைகளை வெளிப்படுத்துகிறது. இக்கதை வைசிகதொன்மத்தில் (புராணம்) ஓரளவு கூறப்பட்டுள்ளதாம்.

**குண்டலகேசி** : மறைந்து போன தமிழ்நூல்களில் ஒன்று. புறத்திரட்டில் 19 செய்யுட்கள் காணப்படுகிறது. இது நாகுதத்தனாரால் கி.பி.9 ஆம் நூற்றாண்டிற்கு முன் ஆக்கப்பட்ட பௌத்த காப்பியம். இது யாப்பருங்கலகவுரையிலும் எடுத்தாளப்படுகிறதென்பர். இதற்கு எதிர்ப்பாக எழுந்த சமணநூ

ல், நீலகேசி, குண்டலகேசி, பிங்கலகேசி போன்ற நூல்கள் மதவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. குண்டலகேசி சுருண்ட கூந்தலையுடையவளாகிய ஒரு பெண்ணின் கதையை கூறுவதை நீலகேசியின் உரையிலிருந்து அறியலாம். பத்திரை என்ற வணிகன் மகள் காளன் என்ற சிறையிலிருக்கும் கள்வனைக் காதலிக்கின்றாள். இதனால் தந்தையின் உதவியுடன் அவனை சிறையிலிருந்து மீட்டு மணம் முடிக்கின்றாள். இல்லறம் இனிது நடைபெறுகிறது.

ஒருநாள் இருவருக்கிடையிலும் ஏற்பட்ட ஊடலில் பத்திரை தன் கணவனை கள்வனென ஏசுகின்றாள். இதைப்பொறுக்கமாட்டாதவனாய் அவன் கடும் சினம் கொண்டு மனதில் அடக்கிக் கொள்கின்றான். ஒருநாள் அவன் அவளை கரவாகக் கொல்ல நினைத்து மலையுச்சி பார்க்க அழைத்துச் செல்கின்றான். அவளும் இதைத்தன் அகக்கண்ணால் உணர்ந்தாள் போலும் அவள் "தற்கொல்லியை முற்கொல்வன்" என நினைத்து சாகுமுன் தன் கணவனை மும்முறை சுற்றிவர விரும்புவதாகக் கூறுகின்றாள். அவனும் இசையவே சுற்றிவரும் போது திடிரென அவனை மலை உச்சியிலிருந்து தள்ளிவிட்டுக் கொலை செய்தபின் துறவு கொள்கின்றாள். இதை ஒரு தர்க்க நூலாக யாப்பருங்கலவிருத்தி கூறும். அத்தோடு பிறர் இறப்பதற்காக அழுது கண்ணீர் வடிக்கும் நாம் பருவமாற்றத்தின் போது ஒவ்வொரு பருவத்திலும் இறந்துதான் பிறக்கின்ற. (7 பருவங்கள்) நாம் அதற்காக ஏன் அழுவதல்லை. எனவே நீ அழுவது பொய்யெனக் குறிப்பிட்டு பாடல் தருகிறது. ("பாளையாம் தன்மை செத்தும்............. நாளும் நாம் சாகின்றாமால், நமக்கு நாம் அழாத தென்னே?")

மேலும்
"அறிவ தறிவார் அழுங்கார் உவவார்
உறுவது உறும் என்று உரைப்பது நன்று"
என இடர்வந்தபோது அதை தாங்கும் மனப்பக்குவம் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

142. மணிப்பிரவாளம் என்றால் என்ன? இதன்மூலம் தமிழ்மொழி உற்ற இடரை விளக்குக. இதன் தாக்கத்திலிருந்து இடைக்காலத்தில் தமிழ்மொழி எவரால் எப்படிக் காப்பாற்றப்பட்டது?
மணி என்பது தமிழ்ச்சொல், பிரவாளம் (பவளம்) வடசொல், இவ்விரு மொழிச்சொற்களையும் கலந்து எழுதுவது அழகாகவும் சிறப்பாகவும் (இன்று தமிழையும், வடமொழியையும் ஆங்கில்தையும் கலந்து பேசுவது, எழுதுவது போல்) இருக்குமென்றும் தமிழ்மொழிச் சிதைப்பு நச்சுக்கொள்கை தமிழ்நாட்டின், தமிழர் நடுவில் களப்பிரனர் காலமாகிய கி.பி 3 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சைன (சமணம்) பௌத்த மதங்களின் மேலாண்மையுடன் செயற்படுத்தகப்பட்டது. இவர்கள் வடமொழியை ஆதரித்ததால் தமிழ்மொழியுள் வடசொற்கள் வகைதொகையின்றி உள்ளீடு (கலப்பு) செய்யப்பட்டன.

இக்காலகட்டத்தில் வடமொழி வைதீக மதமும் (இந்து) தமிழ்நாட்டில் பரவி இருந்தது. இதனால் தமிழும், சைவமும் இன்னோரன்ன இடர்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. களப்பிரளரைத் தொடர்ந்து பல்லவராட்சி கி.பி. 6 ஆம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டில் நிலைகொண்டது. இவர்களும் வடமொழிக்கலப்பிற்கு சார்பானவர்களாகவே இருந்தனர். ஆனால் இவர்கர்கள் சமண பௌத்த மதத்தை விடுத்து வடமொழியையும், சைவத்தையும் ஏற்பவர்களாயிருந்தனர். இக்காலகட்டத்தில் தமிழ்ச்சைவம், வடமொழி வைதீகத்தால் உள்வாங்கப்பட்டு இந்து மதமென்னும் போர்வையால் போர்க்கப்பட்டு, தமிழ் கடவுளர் வைதிக கடவுளருள் புகுத்தப்புட்டும் கடவுளர், கோவில்கள் இடங்களின் பெயர்கள் முழுக்க முழுக்க வடமொழியில் மாற்றப்பட்டன. சமண, பௌத்தக் கோவில்கள் பெருவாரியாக இருந்த இடம் தெரியாமல் ஆக்கப்பட்டு அந்த இடங்களிளெல்லாம் இந்துக்கோவில்கள் கட்டப்பட்டு, வழிபாடுகளும் தொடங்கின.

இக்காலகட்டத்தில் இந்துமத நெறிச்சட்டக்கோவையான மநுநெறி பின்பற்றப்பட்டது. இதன்படி மக்கள் நான்கு

சாதிகளாகப் பகுக்கப்பட்டு, தமிழர்களும், பெண்களும் இழிவுப்பிறவிகளாக்கப்பட்டும், தமிழ்மொழி தீட்டு மொழியாகவும் ஆக்கப்பட்டிருந்ததால் தமிழ்ச் சைவ சான்றோர் தங்கள் உள்ளுணர்வின் மேலீட்டால் சைவத்தையும், தமிழையும் காப்பாற்ற வெளிப்பட்டனர். குறிப்பாக அப்பரெனப்பட்ட திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரெனப்பட்ட தமிழ் ஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தியார் போன்றோரின் எழுச்சியினாலும் (கி. பி.7,8,9 ஆம் நூற்றாண்டுகளில்), வைணவ ஆழ்வார்களினாலும், ஒரு பற்று (பக்தி) இயக்க உருவாகி மக்களும், மன்னர்களும் மனமாற்றம் பெற்று சைவத்(சிவனியம்) தையும், வைணவ (திருமால்)த்தையும் ஏற்று பற்று வெள்ளத்தில் கலந்தனர். இதனால் தமிழ்மொழி புதுப்பொலிவுற்றது. தமிழ்பாடல்கள் பண்ணோடும் இனிமை இசையோடும் கோவில்கள் தோறும் பாடப்பட்டன. இவை மக்கள் மனதை ஈர்த்தெடுத்தது. தமிழ்மொழி மக்கள் மொழியாக மாறியது. வடமொழிச் சொற்களால் தமிழ் நெகிழ்வுற்றிருந்தவேளை இப்பற்று இசை தமிழை எளிமையாகவும், நளினமும், இனிமையும் ஆக்கியது.

இது தமிழ்மொழியை ஓர் உயர்ந்த பற்று (பக்தி) இயக்கமாக மாற்றியது. சொல்வளத்தால், உணர்ச்சிப் பெருக்கல், இசை இன்பத்தால், எளிமை நளினத்தால், கருத்துக் குவியலால் தமிழ்மொழி புதுப்பொலிவுற்று பரவிப்படர்ந்தது. சைவமும் தமிழும் பரவிப்படர்ந்ததென்றால் அதற்குக் காரணர் அப்பர், சம்பந்தர், சுந்தரமூர்த்தியார் உள்ளிட்ட 63 நாயன்மார்களேயாவர். (பல சாதிப் பிரிவினரும் இருந்தனர்). மேற்குறித்த இம்மூவரும் பாடிய தேவாரங்கள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டு தில்லையம்பலத்தில் (சிதம்பரம்) ஒரு அறையிலிட்டு பூட்டி வைத்தனர். தில்லையம்பலம் வாழ் பிராமணர்.

கி.பி 10 நூற்றாண்டின் இறுதியில் முடிசூடிக்கொண்ட இராசராசசோழன் இதையறிந்து அவனது சிந்தனைத்திறத்தால் அவற்றைப் பெற்று "நம்பியாண்டார் நம்பி" என்பாரின் துணைகொண்டு ஆயிரக்கணக்கா எழுதப்பட்ட தேவாரப்பதிகங்களில் பழுதடைந்தவை செல் (கறையான்)

அரித்தவை போக மிகுதியை ஏழுதிருமுறைகளாக தொகுத்து வெளியிட்டான். (சம்பந்தர் - 1, 2, 3 ஆம் திருமுறையாகவும் பகுக்கப்பட்டது). இந்த இராசராசனின் இயற்பெயர் அருண்மொழித்தேவர், இது தூய தமிழ்ப்பெயர், இது வைதீகப் பிராமணர் பார்வையில் தீட்டுமொழிப்பெயர். அதனால் இவனுக்கு முடிசூட்ட முடியாதென்று கூறியதாலேயே இவன் தனது பெயரை இராசராசனென (வடமொழி) மாற்றி முடி சூடியவன் (இப்படிப் பல வைதீக மேலாண்மைக்கு எடுத்துக்காட்டு - எனது பெய்யெனப்பெய்யும் மழை என்ற நூலை பார்க்கவும்) இந்தத் தமிழுள்ள வடமொழிக் கலப்பால் (மணப்பிரவாளம்) உருவானமொழிதான் கொடுந்தமிழ் மலயாளம்.

மேற்குறித்த மூவரின் தேவாரங்களுடன் எட்டாம் திருமுறையாக மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தையும், திருக்கோவையாரையும், திருமாளிகைத்தேவர், சேந்தனார் போன்றோர் பாடியவற்றை 9 ஆம் திருமுறையானதாகவும், திருமூலர் பாடிய மூவாயிந் தமிழை திருமந்திரமாக 10 ஆம் திருமுறையாகவும் நம்பியாண்டார் நம்பி காரைக்கால் அம்மையார் முதலானோரின் பாடல்களை 11 ஆம் திருமுறையாகவும், சேக்கிழாரின் பெரியதொன்மத்தை (புராணம்) 12 ஆம் திருமுறையாகவும் தொகுத்து 12 திருமுறைகள் என்ற பெயரில் வெளியிடப்பட்டு நிற்கிறது.

சமகாலத்தில் (கி.பி.7 ஆம் நூற்றாண்டு) வைணவ ஆழ்வார்களும் தமிழ்நாட்டில் பற்று (பக்தி) இயக்கத்தில் ஈடுபாடாயிருந்து தம் மதத்தை பரப்ப பெரும் முயற்ச்சி எடுத்தனர். திருமால் வழிபாடானது தொல்காப்பியம், பரிபாடல், கலித்தொகை போன்ற சங்க நூல்களில் போற்றப்பட்டுள்ளது. வைணவ மறுமலர்ச்சி கி.பி 9 ஆம் நூற்றாண்டளவில் மிகவும் உயர்வுகண்டது. இவர்கள் 108 திருமாலின் நயங்களைப் பாடியுள்ளனரென்பர். இவ்வாழ்வார்களின் அருட்பாடல்களைத் தொகுத்து "நாலாயிர திவ்விய பிரபந்தம்" என பெயரிட்டுள்ளனர். இந்நூலின் சிறப்புப் பொருளை ஆக்கித் தந்தவர் "நாதமுனிகள்" எனப்படுவார். இந்நூல் தேவாரப் பாடல்களைப் போன்று கனிந்தமொழியையும், எளிய

நடையையும் கொண்டு விளங்குவதாகக் குறிப்பிடுவர் அறிஞர். நாலாயிர திவ்விய பிரபந்த ஆக்கத்திற்கு வழிவகுத்த ஆழ்வார் பெருமக்கள், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருப்பாணாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், மதுர கவியாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், குலசேகர ஆழ்வார் போன்றோராவார். இவர்களின் பாடல்களில் அதிகஅளவு வடமொழிச் சொற்கள் கலந்திருப்பதைக் காணலாம்.

*வாழ்கதமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக தமிழ்ப்பண்பாடு!!!*

# பின்னிணைப்பு : 1

**ஒரு வரலாற்றுத் திரிப்பு நூலின் பகரமாக** *திரு.திருவேணிசங்கமம் அவர்கள் "செங்கதிர்" சிற்றிதழுக்கு எழுதிய கட்டுரைகள் (புரட்டாதி, ஐப்பசி 2012)*

**'சாய்ந்தமருது வரலாறு' என்னும்** நூலில் **மணிப்புலவர் மஜீத்** அவர்கள் **'பூர்வீக வரலாறு'** என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். அக்கட்டுரை ஆய்வுநெறி முறைமைகளுக்கு மாறானதாகவும் மனம் போன போக்கிலும் எழுதப்பட்டுள்ளது. அக்கட்டுரையில் சொல்லப்படும் கருத்துக்களைப் பின்பற்றிச் சிலர் பிழையான முடிவுகளை அடைய எத்தனிக்கும் தன்மையும் காணப்படுகிறது. எனவே அவை பற்றி விமர்சன பூர்வமான விளக்கங்களை முன்வைத்தல் அவசியமாகிறது.

**"உண்மையில் இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் மூதாதையர்கள் அதாவது மத்தியகிழக்கு வாசிகள் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே இங்கு வாழ்கின்றார்கள் என்பதற்கு ஆதாரங்கள் அநேகம் உண்டு" என்று எழுதுகின்றார் மஜீத் அவர்கள்**

மத்தியகிழக்கு என்பது இக்காலத்துக்குரிய வழக்காகும். கிழக்கில் ஈரான் தொட்டு மேற்கில் மொரக்கோ வரையும் இஸ்லாத்தைத் தழுவி நிற்கும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகளைச் (இஸ்ரேல் விதிவிலக்கு) சுட்டப்பயன்படும் சொல்லாகும் இது. இச்சொற்றொடரைப் பண்டைய வரலாற்று விடயங்களுக்குப் பயன்டுத்த முடியாது. அவ்வாறு பயன்படுத்தினால் அது அராபியர்களுக்கோ பாரசீகர்களுக்கோ எந்தவித சம்பந்தமுமில்லாத சுமேரியர், அசீரியர், சால்டியர், பாவிலோனியர், அக்கேடியர், கிரேக்கர், உரோமர், பினிசியர், துருக்கியர் போன்ற மக்களினங்களையும் மத்தியகிழக்கு வாசிகள் என்ற சொல் உள்ளடக்கிவிடும். அதனால் வரலாறு குழம்பும்.

இவர்களுள் முக்கியமாக கிரேக்கர், உரோமர், பினிசியர், இலங்கை, தென்னிந்தியா போன்ற இடங்களில் வர்த்தகம் செய்துள்ளனர். இதனைப் பண்டைய கிரேக்க, தமிழ், சமஸ்கிருத நூல்கள் குறிப்பிடுகின்றன. இவர்களின் மொழி பொறிக்கப்பட்ட

நாணயங்கள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. **கிரேக்கம், எகிப்து, ஆகிய இடங்களில் அண்மைக்காலத்தில் தமிழ் கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.** இவர்கள் பொதுவாக யவனர் என அழைக்கப்பட்டாலும் பிரதானமாக அது கிரேக்கர்களையே சுட்டும். மேற்குறிப்பிட்ட மத்திய கிழக்கு மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

முஸ்லிம்களின் முன்னோர் எனக் கருதப்படும் அராபியர் இஸ்லாம் தோன்றுவதற்கு முன் பாலைவனத்தில் மந்தை மேய்ப்பை மேற்கொண்டிருந்த மக்களாவர். அவர்கள் மொழியில் முதன் முதலில் நூல் என்று சொல்லத்தக்க படைப்பு 'திருக்குரான்'தான். அதற்கு முன் இலக்கியமெனக் கருதப்பட்டவை வாய்மொழிப் பாடல்களாகும். **இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னைய காலத்தை அரபு வரலாற்றாசிரியர் காட்டுமிராண்டிக் காலம் என்பர்**. அவர்கள் இலங்கையின் பண்டைய வர்த்தக பண்டங்களான முத்து, சங்கு மற்றும் வாசனைத்திரவியங்களைப் பயன்படுத்தக்கூடிய நாகரீக முதிர்ச்சியும் செல்வச் செழிப்பும் கொண்டிருந்தவர்கள் அல்லர். இஸ்லாமிய எழுச்சியின் விளைவாகப் பாரசீகம் போன்ற நாகரிகமுற்றிருந்த இடங்களோடு ஏற்பட்ட தொடர்புதான் அவர்களை நாகரிகம் பெற வைத்தது. ஆகவே முஸ்லிம்களின் முன்னோர்கள் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே இங்கு வாழ்கிறார்கள் என்பது ஆதாரமற்ற கூற்றாகும்.

**"இன்றைய முஸ்லிம்களின் மூதாதையர்களான மத்திய கிழக்கு வாசிகள் இலங்கையில் முதலில் குடியேறிய இடம் 'மண்டூர்' என்னும் இடமாகும். மண்டூர் ஆரம்பத்தில் ஊர் என்னும் பெயர் கொண்டு அழைக்கபட்டது. சிறிது காலத்தின் பின் ஊரில் குடியிருந்த மத்தியகிழக்கு வாசிகள் தெற்கே இடம்பெயர்ந்ததும் ஆரம்ப குடியேற்ற இடமான ஊர் பண்டூர் என்று அழைக்கப்பட்டது. பண்டூர் என்றால் பழைய ஊர் என்று பொருளாகும். இதுவே நாளடைவில் திரிந்து மண்டூராகியுள்ளது எனலாம்"** என்பார் மஜீத் அவர்கள்.

என்ன ஆதாரத்தின் அடிப்படையில் இவ்வாறான கருத்துக்கு மஜீத் வருகிறார் என்பது தெரியவில்லை. பண்டு என்பது பழைய

என்பதற்குரிய உயர் அல்லது இலக்கிய வழக்காகும். இதன்படி மக்கள் பேச்சு வழக்கின் வழி பழைய ஊர் அல்லது பழையூர் என்றே திரிபடைந்திருக்கும். மண்டூர் என்னும் பெயர் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப்படும் சீர்பாதகுல வரன்முறைக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

***"திருவாளர் சிந்தனின் செம்மை வங்கிசமே***
***மருவார் பணிந்து மலரடி பணியும்***
***மண்டூர்க் கோயிலின் மகிமையுரைக்கலாம்"***

எட்டாம் நூற்றாண்டுக்கு முன் ஒரு ஊர் எவ்வாறு அழைக்கப்பட்டது என்பதையும் அப்பெயர், திரிபடைந்த வரலாற்றையும் எந்தவித சான்றாதாரங்களுமில்லாமல் தனது அபார கற்பனைத் திறத்தை மாத்திரம் கொண்டு சொல்லும் மணிப்புலவர் மஜீத்தின் ஆற்றலை வியந்து போற்றுவோம்.

***"ஊர் என்ற சொல் நாம் நினைப்து போன்று திராவிட மொழிச் சொல் அல்ல. இது உலகின் முதல் நாகரிக மக்களாகிய சுமேரிய மக்கள் பேசிய சுமேரிய மொழிச் சொல்லாகும். சுமேரியர்கள் (மத்தியகிழக்கு வாசிகள்) வியாபாரத்துக்காக எங்கெங்கு செல்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் தங்க நேரிட்ட போது அந்த இடம் ஊர் என அழைக்கப்பட்டது"*** *(என்றும்).*

***உதாரணமாக ஈரானில் நிஜாப்பூரினையும் வங்களாதேசத்தில் கோணப்புத்தூரையும் காசிப்பூரினையும் இந்தியாவில் மைசூர், பெங்களூர், திருவிடைமருதூரினையும் மலேசியாவில் கோலாலம்பூரினையும் இலங்கையில் நல்லூர், மூதூர், மருதூர், தோப்பூர், மண்டூர் என்பவற்றையும் சிங்கப்பூரினையும் பாகிஸ்தானில் லாகூரினையும் கூறமுடியும்"*** *(என்கிறார் மயீத்).*

எந்த சிறிய வளர்ச்சியடையாத ஆதிவாசி மொழியும் ஒரு குறித்த தொகைச் சொற்களைத் தனது சொந்தமொழிச் சொற்களாகக் கொண்டிருக்கும். அவை அடிப்படைப் பாவனைச் சொற்களாகும். உதாரணமாக பசி, தாகம், பாசம், கோபம், அம்மா, அப்பா, நீர், நெருப்பு, ஊர், மனை மற்றும் உணவுப் பொருட்களுக்குரிய

பெயர்கள். இவைகள் சில திரிபுகளுடன் அல்லது திரிபுகள் இல்லாமல் பலமொழிகளில் வழங்குமாயின் அம்மொழிகள் குடும்பமொழிகளாகும். இந்த அடிப்படைச் சொற்களுக்குள் வரும் ஊரைக் குறிக்கச் சொல்லில்லாமல் பண்டைய தமிழர்கள் என்ன சிரமப்பட்டார்களோ அல்லது அவர்கள் ஊரில் வாழவில்லையோ! மத்திய கிழக்கு வாசிகளிடமிருந்து கடன் வாங்கியதும் அவர்கள் குழப்பம் தீர்ந்ததோ! மஜீத் அவர்களால்தான் இதற்கு விளக்கம் தரமுடியும்!

சங்க இலக்கியத்தின் சில பகுதிகள் கி.மு. 3ம் நூற்றாண்டு பழைமையுடையது என்பது யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். புறநானூறில் அநேக பாடல்கள் அவ்வாறு பழமையானவையாகும்.

| | | |
|---|---|---|
| யாதும் ஊரே யாவரும் கேளிர் | - | புறம் 192 |
| சீரூர் மன்னன் சிறியிலை எ.்.கம் | - | புறம் 308 |
| பிறர் வேல் போலாதாகி இவ்வூர் | - | புறம் 332 |

என்ற புறநானூறில் மட்டும் 25 இடங்களில் ஊர் என்னும் சொல் வருகிறது. பிராமிக் கல்வெட்டில் ஊர் என்ற சொல் குறிப்பிடப்படுகிறது. இது பற்றி 'பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும்' என்ற நூலில் வரலாற்றுப் பேராசிரியர் புஸ்பரெத்தினம் குறிப்பிடுவது நோக்கத்தக்கது!

'சமகாலத்தில் தென்னிந்தியாவில் ஆந்திராவில் ஊரா என்ற சொல்லும் (Ramachandaramurthy 1995:34) தமிழ் நாட்டில், ஊர், ஊரு என்ற சொல்லும் (Panneerselvam 1972:178) இடப்பெயர்களின் பொதுவிகுதியாக பிராமிக் கல்வெட்டுக்களில் வருகின்றன. இவற்றில் ஊரா ஊரே என்ற சொற்கள் ஊர் என்ற தமிழ்ச் சொல்லின் பாளி, பிராகிருதவடிவமாகும்.'

கன்னடம், தெலுங்கு மொழிகளில் ஊர் என்ற சொல் அம்மொழிகளின் இயல்புக்கிசைய 'ஊ..ர்' என்று நீண்டு ஒலிக்கிறது. தமிழிலும் மலையாளத்திலும் ஊர் என்று உள்ளது. தோடர் போன்ற ஆதிவாசி

திராவிட மொழிகளிலும் இச்சொல் அதே பொருளில் புழக்கத்தில் உண்டு என்று சொல்லப்படுகிறது. இதனால் ஊர் என்ற சொல் மூலத் திராவிடமொழிச் சொல் என்பது பெறப்படுகிறது. மூலத்திராவிடம் என்பது குறைந்தது கி.மு. ஓராயிரம் வருடங்களுக்கு முன் இருந்த மொழியாகும். இவ்வளவு பழமையான சொல் இரவலாக பெறப்பட்டது என்பது விந்தையாக உள்ளது.

ஊர் என்பது தமிழல்ல என்பதை நிரூபிக்க அச்சொல் பின் ஒட்டாக வரும் பல இடங்களின் பெயர்ப்பட்டியலைத் தருகிறார் கட்டுரையாசிரியர். அப்பட்டியலில் இரு பெயர்களைத் தவிர மற்றவை தமிழ்ப்பெயர்கள் அல்லது தமிழின் செல்வாக்கால் உருவாகியவை. ஈரானில் உள்ள நிஷாப்பூரும் பாகிஸ்தானில் உள்ள லாகூரும் விதிவிலக்காக வரும் இரு பெயர்களாகும். ஆகவே இவ்விரு பெயர்களிலும் ஊர் விகுதி அமைந்ததின் விபரத்தை நோக்குவோம்.

கி.பி.6ம் நூற்றாண்டில் நிஷாப்பூர் என்ற நகரம் சாசானிய வம்ச அரசனான ஷாப்பூர் என்பவனால் நிர்மாணிக்கப்பட்டது. ஷாபூரின் நகரம் என்ற பொருளில் அது நிஷாப்பூர் என அழைக்கப்பட்டது. (Encylobeadia Britanica (micro) VII 1979 edition) ஷாபூர் என்பது ஓர் அரசனின் பெயர் என்பதும் அதற்கும் தமிழில் உள்ள ஊர் என்பதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதும் தெளிவாகிறது.

அடுத்தது லாகூர். இதன் சரியான உச்சரிப்பு லாகூர் அல்ல. லாகொர் ஆகும். தமிழில் ஊர் என்னும் ஈற்று விகுதி ஊர்ப் பெயர்களின் பாணியில் லாகூர் என்று எழுதும் பழக்கத்தால் மஜீத் போன்றவர்கள் தவறு விட ஏதுவாகிவிட்டது. பிரான் நவிகே (Pran Navike) என்வரால் எழுதப்பட்ட லாகொர் (Lahore) என்னும் நூலில் பின்வரும் குறிப்பு காணப்படுகிறது.

“லாகொர் என்றால் லாவின் (Lah) கோட்டை என்பது பொருளாகும். இரண்டாவது விகுதி awur என்பது awuum என்ற சமஸ்கிருதமொழிச் சொல்லிருந்து வந்தது”

இதிலிருந்து தெளிவாவது என்னவென்றால் தமிழ்ச் சொல்லான

ஊர் என்பதற்கும் லாகொர் (லாகூர்) என்பதிலுள்ள இரண்டாவது விகுதிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதாகும். மேலும் 12ம் நூற்றாண்டில் நடந்த முஸ்லிம் படையெடுப்புக்கு முன்னர் லாகோரில் முஸ்லிம்கள் வாழவில்லை என்பதும் கி.பி.7ம் நூற்றாண்டில் வருகை தந்த சீன யாத்திரிகன் இந்நகரை இப்பெயராலே குறிப்பிடுகிறான் என்பதும் மத்திய கிழக்கு வாசிகள் இந்நகரின் பெயர் உருவாக்கத்தில் சம்பந்தம் கொள்ளவில்லை என்பதற்கு மேலதிக சான்றுகளாக அமையும்.

இனி சுமேரியர்கள் ஊர் அமைத்த கதையைப் பார்ப்போம்.

"கிட்டத்தட்ட கி.மு.5000 ஆண்டுகளில் கருக்கொண்ட சுமேரிய நாகரிகம் கி.மு.2000 ஆண்டுகளில் உலகத்தின் கண்களிலிருந்து மறைந்து விடுகிறது. அவர்களின் பின் அஸ்ஸீரியர்கள் பாபிலோனியர்கள் என்று ஒருவர் பின் ஒருவராக தம் நாகரிகத்தை அங்கு ஏற்படுத்துகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மேற்கு நாட்டுத் தொல்லியலாளர்கள் யூப்பிரடிஸ் - ரைக்கிரிஸ் நதிக்கரையில் உள்ள மண்மேடுகளைத் தோண்டும் வரை அவர்களைப் பற்றி யாருக்கும் தெரியாது"

இது முன்னணி சுமேரியவியல் அறிஞரான பேராசிரியர் கிரமர் தனது 'நாகரிகத்தின் தொட்டில்' (Vardle of Civilization) என்ற நூலில் மேற்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

இன்னொரு மேற்கோளைப் பார்ப்போம். இது பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் 'தமிழ் வரலாற்றிலக்கணம்' என்ற நூலில் வருவதாகும்.

'அராபியர், யூதரை உள்ளடக்கிய செமிதிக் நாகரிகத்துக்கு முந்திய மேற்காசிய கலாச்சாரங்களோடு திராவிட மக்கள் தொடர்புபடுத்தப்படுவதுண்டு. அராபியர், யூதர் மேற்காசியாவிற்கும் ஆரியர் இந்தியாவுக்கும் வருமுன்பு இப்பகுதிகளில் விளங்கிய நாகரிகம் பல ஒற்றுமை உடையதாக இருந்தது. மேற்காசியாவின் சுமேரிய நாகரிகம் முதலியன ஆரியருக்கோ அராபியருக்கோ, யூதருக்கோ

*உரியதல்ல என்பது இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.' (தமிழ் வரலாற்றிலக்கணம் பக் - 03)*

**"சுமேரியர்கள் (மத்திய கிழக்குவாசிகள்) எங்கெங்கு சென்றார்களோ அங்கெல்லாம் அவர்கள் தங்க ஏற்பட்டபோது அந்த இடம் ஊர் என்று அழைக்கப்பட்டது."** *(என்னும் மயீத் கூறுவார்)*

*என்பது உலகில் உள்ள அபத்தக்கதைகள் எல்லாவற்றையும் விஞ்சும் அபத்தக் கதையாகும். இந்த அபத்தக்கதை உருவானதன் பின்னணி பற்றி சற்று விளக்குவது அவசியமாகிறது.*

*சுமேரியர்கள் தமது நாகரிகத்தின் இறுதிக்காலத்தில், கி.மு.2500 - 1500 காலப்பகுதியில் செழித்திருந்த சிந்துவெளி நாகரிகத்தை அறிந்திருந்தனர் என்று கொள்ள இடமுண்டு என்று பேராசிரியர் கிரமர் குறிப்பிடுகிறார். எனினும் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஹாராஸ் பாதிரியார் போன்றவர்கள் திராவிட நாகரிகத்துக்கும் சுமேரிய நாகரிகத்துக்குமிடையே காணப்பட்ட ஒற்றுமைகளைக் கருதிச் சுமேரியர்கள்தான் திராவிட நாகரிகத்தைத் தோற்றுவித்திருக்க வேளண்டும். அதாவது திராவிடர்களின் முன்னோர் சுமேரியர்கள் என்னும் முடிவுக்கு வந்தனர்.*

*புராதன சுமேரியர்கள் சிந்துநாகரிகத்தைத் தோற்றுவித்து அங்கிருந்து தெற்கு நோக்கி நகர்ந்து திராவிட நாகரிகத்தை தோற்றுவித்தனர் என்றும் அவர்கள் கடல்மார்க்கமாக வந்து திராவிட நாகரிகத்தைத் தோற்றுவித்தனர் என்றும் இந்த ஊகத்தை முன்வைப்பவர்களிடையே இரு பிரிவினர் உண்டு. இவ்வூகத்துக்கு மானிடவியல், மொழியியல் மற்றும் பண்பாட்டு அம்சங்களான "வேல் வணக்கம், ஈமச்சின்னங்கள், கோயில்கள் நடனமாதரைக் கொண்டிருத்தல்" போன்ற ஒத்த பண்புகள் காரணமாக அமையினும் வரலாற்றுச் சான்றுகள் எதுவுமில்லை. சுமேரியர் முற்றாக அழிந்தது கி.மு.2000 ஆண்டாகும். தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் மற்றும் இலக்கியங்கள் கிடைப்பதும் கி.மு.3ம் நூற்றாண்டாகும். இடையே சுமார் 1700 ஆண்டுகள் வெற்றிடமாக உள்ளன. இக்காரணங்களால் இது வெறும் ஊகமாகவே எஞ்சி நிற்கிறது. ஒருவேளை இன்னும் வாசிக்கப்படாமல் உள்ள சிந்துவெளி*

*எழுத்தின் மர்மம் துலக்கப்பட்டால் இந்த ஊகம் உறுதிப்படலாம் என்ற கருத்து நிலவுகிறது.*

*சுமேரியர்களுக்கும் செமிடிக்குகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பது நிரூபிக்கப்பட்ட விடயம். செமிடிக்குகளின் முன்னேறிய பிரிவினராக இருந்த ஹுபுறுகள் ஆட்சியதிகாரம் பெறுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றி நாகரிகம் படைத்துச் சுமேரியர்கள் அழிந்துவிட்டனர். இவ்வரலாறுகளைப் பொறுத்தவரையில் செமிடிக்குகளின் இன்னொரு பிரிவினரான அராபியர்களின் எழுச்சி மிகவும் பிற்பட்ட 7ம் நூற்றாண்டாகும்.*

***"மண்டூரில் இன்றும் இறந்தவர்களை அடக்கம் செய்ய அல்லது எரிக்க கோயிலுக்குப் பணம் செலுத்த வேண்டும். அப்பணம் மண்டூரில் இன்னும் திறசால் என்றே அழைக்கப்படுகிறது. திறசால் என்ற சொல்லோ இன்றைய அராபியரின் நாணயமான றியால் என்னும் சொல்லின் ஆதிச் சொல்லாகும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்"*** *(மயீத் கூற்று)*

*யார் இந்த ஆய்வாளர்கள் என்பதை மஜீத் அவர்கள் வெளிப்படுத்த வேண்டும். மண்டூரில் மாத்திரம் அல்ல மட்டக்களப்பின் பல ஊர்களில் இறந்தவர்களை அடக்கம் அல்லது எரிக்க நிலத்தைக் கூறிவிற்கும் சம்பிரதாயம் ஒன்று உண்டு. இங்கு கூறப்படும் நாணயம் ரியால் (Reaal) என்றழைக்கப்படும் ஒல்லாந்து நாணயமாகும். இந்த நாணயம் ஒல்லாந்தர்களின் ஆட்சி மட்டக்களப்பில் பலமாக வேரூன்றி இருந்த காலத்தில், 1617ம் ஆண்டு புழக்கத்துக்கு விடப்பட்டது.*

*இந்த நாணயம் மட்டக்களப்புத் தமிழர்களின் உச்சரிப்புப் பாங்கில் திறசால் என்றும் இறசால் என்றும் ஒலிக்கிறது. அரேபிய உலகத்தில் புழக்கத்தில் இருந்த பண்டைய நாணயங்கள் தினார், திர்ஹாம் ஆகும். ரியால் அல்ல. அது மிகவும் பிற்பட்ட நாணயமாகும். மத்திய அதிகாரத்தைக் கொண்டுள்ள அரசுகள்தான் நாணயங்களைப் புழக்கத்துக்கு விடமுடியும். அப்போதுதான் அது பெறுமதியுடையதாகும். அரபுகளின் ஆட்சி மட்டக்களப்பில் நிலவியதாகச் சரித்திரமில்லை. மட்டக்களப்புப் பகுதிகளில் VOC*

சின்னம் பொறிக்கப்பட்ட றியால் (Reaal) நாணயங்கள் பெருமளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இலங்கை பொருட்காட்சிச்சாலைகளில் அவைகளை அதிகம் காணலாம். புராதன அரபு ரியால் நாணயத்தை யாரும் கண்டெடுத்ததாகத் தகவல் இல்லை. அந்தப் பெயரில் அக்காலத்தில் ஒரு அரபு நாணயம் இருக்கவில்லை.

**"சவளக்கடை அருகே உள்ள துறைநீலாவணையிலும் மத்திய கிழக்கு வாசிகளே குடியிருந்தனர் என்பதற்கு இவ்வூரில் அமைந்துள்ள 'இப்றாஹிம் திட்டி' என்று ஊரின் ஒரு பகுதி அழைக்கப்படுவதை குறிப்பிடலாம்."** (என்கிறார் மயீத்)

துறைநீலாவணையில் 'இப்றாஹிம் திட்டி' என்று இடமொன்றுமில்லை (இக்கட்டுரையாசிரியர் துறை நீலாவணையைச் சேர்ந்தவர்) சிலர் பூரான் பிட்டி என்ற இடம் உள்ளது என்று குறிப்பிடுவர். அப்பெயரிலும் ஓர் இடம் அங்கே இல்லை. 'இப்றாஹிம் பிட்டி' பூரான்பிட்டி என்று மருவியதாகவும் அதனால் துறைநீலாவணையில் முஸ்லீம்கள் குடியிருந்தனர் என்பது நிரூபணமாகிறது என்றும் ஜெஸ்மி.மூஸா என்பவர் தினக்குரல் ஞாயிறு பதிப்பில் எழுதினார். அக்கருத்தை ஆணித்தரமாக மறுத்து அட்சரன் என்பவர் 2010.07.25, 2010.08.25ந் திகதிகளில் எழுதியுள்ளார். அவைகளை ஆர்வமுள்ள வாசகர்கள் பார்க்குமாறு வேண்டி அடுத்த விடயத்துக்கு வருகிறேன்.

**"கிட்டங்கி அருகே இருந்த துறைமுகப்பட்டினமே சவளக்கடை எனலாம். சவளக்கடையின் ஆரம்பப் பெயர் ஜவுளிக்கடை என்பதாகும்."**

பண்டைக்காலத்தில் அரை மைல் அகலமான வாவி கிட்டங்கிக்கும் சவளக்கடைக்குமிடையே இருந்த நிலப்பகுதிகளின் தொடர்பைப் பெருமளவு துண்டித்தது. "1975ம் ஆண்டளவில் கிட்டங்கி - சவளக்கடை வீதியும் தாம்போதியும் வாவிக்குக் குறுக்கே அமைக்கப்ட்டது." என்று அறிஞர் எஸ்.எச்.எம்.ஜெமில் கூறுவதைப்போல் அதற்குமுன் இரு நிலப்பகுதிகளுக்குமிடையே பெரிய தொடர்புகளுமில்லை. அதற்கான அவசியமுமிருக்கவில்லை. இவ்வாறிருக்கையில் சவளக்கடை, நாவிதன்வெளி, அன்னமலை என்று அடுத்து

அடுத்து மூன்று கிராமங்களில் தாழ்த்தப்பட்ட வறிய மக்கள் துறைமுகத்தில் இறக்குமதியான பண்டங்களை நுகர்வோராகவும், ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களை உற்பத்தி செய்வோராகவும் இருந்திருப்பார்களா? அக்காலத்தில் உபரி வருமானத்தைத் தரத்தக்க விளைநிலங்களோ அக்கிராமத்தவர்களுக்குக் கிடையாது. இருக்கின்ற சொற்ப நிலங்களும் எழுவான் கரையில் உள்ள கிராமத்தவர்களுக்குப் பாரம்பரியமாகச் சொந்தமான காணிகளாகும். வாயும் கையுமாக வாழ்வதற்குரிய வருமானத்தை ஈட்டிக் கொள்ளுவதற்கே அக்காலத்தில் அவர்கள் செய்த சவரத் தொழிலும், கைவினை தொழிலும் போதுமானதில்லையே. இக்கிராமங்கள் இருந்த நிலைமையை அறிந்தோருக்கு இங்கு துறைமுகப்பட்டினம் இருந்ததென்னும் செய்தி அதிசயத்திலும் அதிசயமாக இருக்கும்.

மட்டக்களப்பு படுவான்கரையிலிருந்து பல காட்டாறுகள் மேற்கிலிருந்து உற்பத்தியாகி வாவியில் விழுகிறது. அவ்வாறான காட்டாறு ஒன்று வீரமுனைக்கும் சொறிகல்முனைக்குமிடையே பல கிளைகளாகப் பிரிந்து வாவியில் கலக்கிறது. வடக்குப்பக்கமாக அதனை அடுத்த காட்டாறு ஒன்று தம்பலவத்தை இரட்டைக்கானடி என்று அழைக்கப்படும் இடத்தினூடாகப் பாய்ந்து வாவியில் விழுகிறது. அதனை அடுத்து மூங்கிலாறு என்னும் பெயரில் ஒரு பெரியகாட்டாறு மண்டூரில் வாவியில் கலக்கிறது. இவ்வாறான காட்டாறுகள் பாயும் செழிப்பான வடிநிலங்கள் வாவியின் கரையில் பெருமளவில் அமைந்திருந்ததாலேயே வீரமுனை, மண்டூர் ஆகிய இடங்களில் புராதன குடியிருப்புக்கள் சாத்தியமாகின.

ஆனால் வடக்குத் தெற்காக சொறிக்கல்முனை தொட்டு தம்பலவத்தை இரட்டைக்கானடி வரையும் கிழக்கு மேற்காக மட்டக்களப்பு வாவியிலிருந்து அக்கிலாவெளி ஈறாக பரந்துள்ள கிட்டத்தட்ட ஆறுமைல் சதுரப்பிரதேசம் ஒரு கட்டாந்தரைப் பிரதேசமாகும். இதன் அடியில் பாறை ஒன்று படிந்துள்ளது என்று கூறப்படுகிறது. இதனால் நெற்செய்கை மிகுவிக்கும் வண்டல் மண் படியும் விரிந்த வயல்வெளிகள் இங்கு இல்லை. கல்லோயாத்திட்டத்திற்கு முன்னர் இப்பிரதேசம் ஆங்காங்கே பொட்டல் வெளியாயும், பற்றைக்காடுகளுமாயிருந்த பிரதேசமாகும். சேனைப்

பயிர்ச்செய்கை கூட நடைபெற்றதில்லை என்று முதியவர்கள் கூறக் கேட்டுமிருக்கின்றேன். மழை பெய்யாத காலங்களில் குடிதண்ணீரைக் காணுவதே முயற்கொம்பாகும். இவ்வாறான இடத்தில் பட்டினம் உருவாவதெப்படி? அதுவும் துறைமுகப்பட்டினம்! அப்படித்தான் ஒரு மாயமந்திரத்தால் சவளக்கடையில் துறைமுகப்பட்டினமிருந்திருந்தால் அங்கு கோயில்கள், பள்ளிவாசல்கள், களஞ்சியசாலைகள் போன்றவற்றின் அழிபாடுகள் மண்ணில் புதைந்தும் வெளியிலும் காணப்படுமே. அங்கு ஒரு புராதன நாணயமாவது அல்லது ஒரு கல்வெட்டாவது அகப்படவில்லை ஏன்? மகாவம்சம், தீபவம்சம், மட்டக்களப்பு மான்மியம் ஆகிய வரலாறு கூறும் நூல்களில் இந்நகரம் குறிப்பிடப்படாமல் போனதன் மர்மம் என்ன?

ஆனால் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த புலவர்களால் எழுதித் தொகுக்கப்பட்டவை என்று வரலாற்றாசிரியர்களால் கருதப்படும் ' மட்டக்களப்பு மான்மியம்', 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' ஆகிய நூல்களில் வேறொரு தொடர்பில் சவளக்கடை என்ற இடப்பெயர் வருகிறது. மட்டக்களப்பில் வாழும் முக்குகர், வேளாளர், சீர்பாதர், பறையர், சாண்டார் ஆகிய சமூகத்தலைவர்களை ஏழேழ் குடிகளாக மகோன் என்னும் மன்னன் வகுத்த விபரம் வருகிறது. அந்தவகையில் மட்டக்களப்பில் வாழும் நாவிதர்களையும் ஏழு குடிகளாக அவன் வகுக்கிறான். அதை மட்டக்களப்பு மான்மியம்,

சாரியுறு மண்முனை வரையிறவு தங்கும் மகிழடித்தீவு
எரியுறு பாலமுனை அனல் வாயிலங்கு சம்மான்துறையென்னுமேழாய்
வாரிதுயியல் மால் நிழலரசு செய்யும் மகோனும்
இவர் குடியை வகுத்துவைத்து நாசிவனை
தாரணியிலறிந்தவர்கள் தக்கபடி வைத்து முறை சாரலாமே

இந்த விடயத்தை மட்டக்களப்பு மான்மியத்தின் திருத்தப்பதிப்பு எனப்படும் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் சில பாடபேதங்களுடன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

சாரியுறு மண்முனையதிலறவு தங்கும் மகிளடித்தீவு சவளக்கடை
எரியுறு பாலமுனை வழலவாயிலங்கு சம்மான்துறை யெனுமேழாய்

இவ்விடப் பெயர்கள். கன்னன்குடா மா.வேலாயுதப்போடி என்பவரிடமுள்ள ஏட்டுப்பிரதியில் பின்வருமாறு மிகத் தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கிறது என்று தனது 'மாகோன் வரலாறு' என்னும் நூலில் க.தங்கேஸ்வரி தகவல் தருகிறார்.

மண்முனை நாவிதர், வலையிறைவு நாவிதர், மகிழடித்தீவு நாவிதர், சவளக்கடை நாவிதர், பாலமுனை நாவிதர் வலைவாய் நாவிதர், சம்மான்துறை நாவிதர்.

இதிலிருந்து தெளிவாகும் விடயம் என்னவெனில் ஒல்லாந்தர் ஆட்சிக்கு முன்பிருந்தே சரியாகச் சொல்லப் போனால் மகோனின் காலமான 12ம் நூற்றாண்டிலிருந்தே சவளக்கடை என்ற இடப்பெயர் வழங்கி வருகிறது என்பதும் அங்கே நாவிதர் என்னும் சமூகத்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதுமாகும். இப்போதும் அங்கு வாழ்பவர்கள் அச்சமூகத்தின் பரம்பரையினர் ஆவர். பக்கத்தில் உள்ள நாவிதன்வெளியில் தற்போது வேறு சமூகத்தவர்கள் வாழ்ந்தாலும் முன்பு அங்கும் வாழ்ந்தவர் நாவிதர்களாவர். அதற்கடுத்த அன்னமலையில் வாழ்கிறவர்கள் கம்மான சமூகத்தினர்.

இனி சவளக்கடை என்ற பெயருக்கான காரணங்களைப் பார்ப்போம். புடவையை அன்றும் சரி இன்றும் சரி ஜவுளி என்று மட்டக்களப்பில் யாரும் கூறுவதில்லை. எனவே ஜவுளிக்கடையிலிருந்து சவளக்கடை வந்தது என்பது சற்றும் பொருந்துமாறில்லை. 'நாவிதர்க்கு சவரர், சவுரர் என்ற பெயர்களுமுண்டு. சவரர்கடை சவுரர் கடை என்பதுதான் சவளக்கடை என்றாகியது' என்று பண்டிதர் வீ.சி. கந்தையா தனது 'மட்டக்களப்புத் தமிழகம்' என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அது சரியான விளக்கமாகும். எனினும் கந்தையா அவர்கள் கடை என்ற சொல்லின் அக்காலக்கருத்தை விளக்கத் தவறிவிட்டார். இக்காலத்தில் செய்வது போல் அக்காலத்தில் கடை (saloon) வைத்துத் தொழில் செய்யவில்லை. 60 - 70 ஆண்டுகளுக்கு முன்னர் கூட அவர்கள் வீடுகளுக்குச் சென்று தமது தொழிலைச் செய்து வந்தனர். மற்றக் குடிமகன்களினது சேவையும் அவ்வாறே. அறுவடையின் போது தமது சேவைக்கான

நெல்லை அவர்கள் பெறுவார்கள். அப்படியானால் கடை என்ற பின் ஒட்டின் தாற்பரியம் என்ன? கடை என்பது பக்கம், ஒதுக்குப்புறம், புறம்சாயல் என்ற கருத்தில் வருகிறது. மட்டக்களப்புத் தமிழில் கூறுவதானால் சவரர்களின் புறம் சாயல் அல்லது சவரர்களின் பக்கம் என்பது கருத்தாம். முகமயிர் மழிப்பதை இன்றும் மட்டக்களப்புக் கிராமங்களில் சவரம் செய்தல் என்று குறிப்பிடுவர்.

**மட்டக்களப்பு என்னும் சொல் அரபுமொழியில் இருந்து திரிபுபட்டு வந்த சொல்லாகக் கருதமுடியும். மஹ்பார் என்னும் அரபுச் சொல்லே நாளடைவில் திரிந்து மட்டக்களப்பாகியது.**

இக்கருத்து பற்றி ஆராய்வதற்கு முன்னர் மட்டக்களப்பு பற்றி வரலாற்று மற்றும் இலக்கியச் சான்றுகளில் குறிக்கப்பட்டிருப்பவைகளில் சிலவற்றை வரிசைப்படுத்துவோம்.

'மல்வத்தையூரும் அதற்கு சேர்ந்த குளமும் வெளிக்காடும்
மட்டக்களப்பு நாடு முழுதும்'

வீரமுனை கல்வெட்டு
8ம் நூற்றாண்டு

பரராச்சுரவிக்குறும பிரதயாராகிய
ராசசிங்க மகராசா ஆண்டவர் திருக்கருணை புரிந்து
மட்டக்களப்பு பிரதேசத்திலே

சம்மான்துறை செப்பேடு 8ம் நூற்றாண்டு

ஓடமுமோடி உறுபுகழ் ஓங்க
நீடு புகழ் மட்டக்களப்பின் கரையாய்
வளமிகு வீரமுனையெனுமிடத்தில்

சீர்பாதவரன் முறைக்கல்வெட்டு 8ம் நூற்றாண்டு

பன்றித்தீவு, சல்லித்தீவு, பாலமுனை, பாசிக்குடா
என்றெக்காலமும் வழங்கும் ஏறாவூர் கடந்து

*தென்றெப்போ புளியன் துறைசேரப் புறக்கிட்டோடி*
*மன்றலொத்த தொடை மார்பர் மட்டக்களப்பில் விட்டார்.*
*கண்ணகி வழக்குரை 12ம் நூற்றாண்டு*

*விட்டனரே கெவுளிமுனை விரைவாக பண்டித்தீவு*
*மட்ட சல்லித்தீவுடனே பாலமுனைதான் கடந்து*
*மட்டு புன்னை கடந்து மட்டக்களப்பில் விட்டனரே*
*Inscripition of ceylon, Ed.S.Paranaviththana*

*"ஆகவே மட்டக்களப்பு என்னும் பிரயோகம் பதினைந்தாம் நூ ற்றாண்டில் இலக்கியத்தில் ஏறியுள்ளதெனலாம்".*

*'மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்'*
*தொகு.எவ். எக்ஸ்.சி.நடராசா*

*இவ்வாறு புராதன கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் குறிக்கப்பட்டிருக்கும் மண்டூர், சவளக்கடை, மட்டக்களப்பு ஆகிய இடப்பெயர்கள் திரிந்த வரலாற்றை அப்பெயர்கள் தமது இறுதி வடிவத்தை பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எய்தி இருந்தபோதிலும் - எவ்வித சான்றுகளுமின்றிசொல்லும் மணிப்புலவர் மஜீத் அவர்களின் ஞான திருஷ்டியைக் கண்டு வியக்காமல் இருக்கமுடியவில்லை.*

***"சோழநாட்டு இளவரசியின் அந்த நேர்த்தியான கப்பல் பிரயாணம் சிந்துபாத் யாத்திரை என்று அழைக்கப்பட்டதாக அருள் செல்வநாயகம் எழுதிய சீர்ாதகுலவரலாறு என்னும் நூல் கூறுகின்றது. இச்சம்பவத்திலிருந்து நாம் அறிவது என்னவெனில் சோழநாட்டு அரசி தான் வந்த பிரயாணம் சிந்துபாத் வந்த வழிப்பாதையால் அமைந்தபடியால் தனது பிரயாணத்தையும் சிந்துபாத் யாத்திரை என அழைத்ததில் தவறில்லை எனலாம்".***

*சோழநாட்டு அரசியின் கப்பல் பிரயாணத்தை அருள் செல்வநாயகம் தனது நூலில் சிந்துபாத் யாத்திரை என்றே குறிப்பிடுகிறார். சிந்து என்றால் கடல். யாத்திரை என்றால் பயணம் ஆகவே சிந்து*

யாத்திரை என்றால் கடற்பயணம் ஆகும். இவ்வாறு நூலாசிரியர் சொல்லாததை சொன்னதென்று குறிப்பிடுவது சுத்த மோசடியாகும். இது கண்டிக்கத்தக்கது.

அடுத்து சிந்துபாத் என்று எழுத்தாளரும் யாத்திரிகருமான ஒருவர் உலகில் இருந்தவர் இல்லை. மஜீத் அவர்கள் ஆயிரத்தொரு அராபியக் கதைகளில் வரும் சிந்துபாத் என்ற கற்பனைக் கதாபாத்திரத்தைத்தான் அவ்வாறு குறிப்பிடுகிறார். அலிபாவா, அலாவுதீன் என்று அக்கதைகளில் வரும் கற்பனைப் பாத்திரங்கள் போன்றவன்தான் சிந்துபாத் என்பவன். அந்த சிந்துபாத் என்ற மாலுமி அதே பெயரைக் கொண்ட சுமைதாங்கிக்குத் தனது கடற்பிரயாணங்களைச் சொல்வதாக அக்கதை அமைந்துள்ளது. இந்த இடத்தில் ஆயிரத்தொரு இரவு அராபியக் கதைகள் பற்றிய மேலதிக விபரங்களை அறிவது இங்கு அவசியமானது.

பல நூற்றாண்டுகாலமாக செவி வழியாகச் சொல்லப்பட்டு வந்த கதைகள் பல ஆசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், கல்விமான்களால் திருப்பித் திருப்பி எழுதப்பட்டு 10ம் நூற்றாண்டில் இறுதி வடிவம் பெற்றன. அராபிய, பாரசிக, இந்திய, எகிப்திய, மேசோபட்டோமிய நாட்டார் கதைகள், இலக்கியங்களின் கூறுகள் இக்கதைகளில் இணைந்திருக்கின்றன என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இறுதியாக அச்சிட எடுத்துக்கொண்ட பிரதி 15ம் நூற்றாண்டுக்குரிய கையெழுத்துப்படியாகும். இவ்வாறான கற்பனைக் கதாபாத்திரம் சொல்வதை வரலாற்றுச் சான்றாகக் காட்டுவது குழந்தைப் பிள்ளைத்தனமானதும் நகைப்புக்கிடமானதுமாகும்.

**"முன்னாள் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கலாநிதி பாலேந்திரா சோனகர் இந்நாட்டு பழங்குடி மக்கள். அவர்கள் 2000 வருடங்களுக்கு முன்பிருந்தே இங்கு வாழ்கிறார்கள்"**

**"கலாநிதி அந்திரியெஸ்நெல் கி.பி.177ல் அநுராதபுரத்தில் அராபியர்களுக்குப் புறம்பான இடம் இருந்தது எனக் கூறுகிறார்".**

என்று இரு மேற்கோள்களை கட்டுரையின் ஆரம்பத்தில் ஆசிரியர்

குறிபிடுகிறார். வரலாறு, தொல்லியல் துறைகளில் துறைபோனவர்கள் பலர் இருக்க மிகவும் அறியப்படாத இருவரின் மேற்கோள்களை ஆசிரியர் குறிப்பிடுகிறார். அம்மேற்கோள்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டன என்பதையும் குறிப்பிடவில்லை. இவைகளைக் கருத்தில் கொள்ளும் போது ஆசிரியரின் நேர்மையையிட்டுப் பலத்த சந்தேகம் எழுகிறது.

இங்கிருந்த சொற்பதொகை அராபிய வர்த்தகர்களில் அரேபியாவுக்கு மீண்டவர்கள் போக மீந்த இரண்டொருவர் உள்ளூர் சனத்தொகையுடன் இரண்டறக் கலந்திருப்பர். அக்காலத்தில் இஸ்லாம் தோன்றுவதற்கு முன் அரேபிய தீபகற்பத்தில் நிலவிய சமய நம்பிக்கைகளை நோக்குகின்றபோது இது மிக இலகுவாக நிகழ்ந்திருக்கும் எனத் தோன்றுகிறது. முஸ்லிம் என்ற பிரிவும் காபிர் என்ற பிரிவும் ஏற்பட்டமை இஸ்லாமின் தோற்றத்துக்குப் பின்னதாகும். அதன் தோற்றம் எளிதில் நிகழவில்லை. புதிய சமயத்தை ஏற்க மறுத்தும் பழைய நம்பிக்கைகளை இழக்க மறுத்தும் பல கோத்திரங்கள் வாளெடுத்துப் போராடின. இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. எந்த ஒரு சமயமும் பிற சமயத்தவர்கள் பார்வையில் மிக கீழ்த்தரமானதாகக் கருதப்பட்டாலும் (அவ்வாறு கருதுவதே பெரும்பாலும் வழமை) அதை பின்பற்றுவரிடையே அது மிக உயர்ந்த மதம் என்ற கருத்து இருக்கும். அச்சமயத்தவராகப் பிறந்ததற்காக அவர்கள் பெருமை கொள்வர்.

பொதுவாக வெளி அழுத்தங்கள், லௌகீக நலன்கள், அரசியல் பொருளாதாரப் பின்னணிகள், இராணுவ வெற்றிகள் இவைகள் இல்லாமல் சமூகங்கள்மதம் மாறுவதில்லை. வெற்றி கொண்ட மதம் தனது ஏற்புடைமையை அதைப் பின்பற்றுகிறவர்களிடையே வலுவாக ஊன்றும். தோற்ற சமயங்களைப் பற்றி அவதூறான பிரச்சாரத்தை மேற்கொள்ளும் இந்நிலைதான் இஸ்லாத்துக்கு முனிருந்த சமயநம்பிக்கைகளுக்கு ஏற்பட்டது. அவை பற்றிய விளக்கங்களை இஸ்லாம் தான் தருகிறது. அவை தம்மைப்பற்றிச் சொல்வது என்னவென்று தெரியாது. அவைகள் அழிக்கப்பட்டு விட்டன. அவைகள் அரேபியாவில் நிலைகொண்டிருந்த காலத்தை அறியாமைக்காலம் அல்லது காட்டுமிராண்டிக்காலம் என்ற பொருளில்

ஜாகிலியாக் காலம் என்று இஸ்லாம் குறிப்பிடுவதிலிருந்து இது வெளிப்படுகிறது.

**இங்கு வாழ்ந்த அராபியர்கள் இஸ்லாமிய எழுச்சிக் காலத்தின் போது அரேபியாவில் என்ன நடைபெறுகின்றது என்று அறிவதற்காக ஒருவரை அனுப்பியதாகவும் அங்கே இஸ்லாம் என்னும் நன்மார்க்கம் தோன்றியுள்ளதைக் கேள்விப்பட்டு அதனைத் தழுவிக் கொண்டதாகவும் யாரோ எழுதியதைப் படித்த ஞாபகம்.**

*என்ன சிறுபிள்ளைத்தனமான கற்பனை. பல்வேறு சமயப் பிரிவுகளில் கோத்திரங்களில் இருந்து முட்டிமோதிக் கொண்டிருந்த அராபியர்கள் தமது சமய நம்பிக்கைக்கு என்ன ஆபத்து நேரிட்டிருக்கிறதோ என்பதை அறியும் ஆதங்கத்தால் அவ்வாறு ஒருவரை அனுப்பி இருக்க முடியுமே தவிர புதுமார்க்கம் தோன்றியிருக்கிறது. அதனை தழுவிக்கொள்ள வேண்டும் என்ற ஆவலால் அல்ல.*

*இரண்டாவது மேற்கோளில் அராபியர் என்ற சொல்லுக்கு பதில் யவனர் என்று இருக்கும் என நினைக்கின்றேன். கிரேக்க தொன்னூல்களில் இலங்கை, இந்தியா போன்ற கிழக்கு நாடுகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கை, இந்தியா தமிழக சான்றுகளும் யவனரைப் பற்றியும் அவர்களின் வணிகம் பற்றியும் நிறையத் தகவல்களைத் தருகின்றன. தமிழர்களோடு அவர்களுக்கு வணிகத்துக்கு அப்பாலான பண்பாட்டு உறவுகளும் உள்ளன என்று சொல்கிறார்கள். ஊழ் அல்லது விதிக்கோட்பாடு அவர்களின் தாக்கத்தால் தான் தமிழ் வாழ்வில் கருக்கொண்டது என்று சொல்லப்படுகிறது. இவற்றைவிட தொல்லியல் சான்றுகளும் யவனர்கள், கிரேக்கர்கள் என்பவர்களின் பிரசன்னத்தை நிரூபிக்கின்றன. தமிழகத்தில் கி.மு.300 ஆண்டுகளுக்குரிய கிரேக்கர்களின் நாணயங்கள் கிடைக்கப் பெற்றமையை நோக்கும் போது உரோமருக்கு முன்னரே கிரேக்க நாட்டினர் தமிழகத்துடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தமை தெளிவாகின்றது. இவ்வணிகம் பின்னர் உரோமரின் கைக்கு மாற அவர்களும் யவனர் என அழைக்கப்பட்டனர் என்று வரலாற்று தொல்லியல் துறைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் குறிப்பிடுகிறார்.*

*(பண்டைய தமிழகம் - சி.க.சிற்றம்பலம்) இவைகளிலிருந்து யவனர் என்றால் கிரேக்கரையும் ஓரளவு உரோமரையும் குறிக்கும் என்பது புலனாகிறது.*

*யவனர் என்பது எக்காலத்திலும் அராபியரைக் குறித்ததில்லை. அராபியரின் வருகை 12ம் நூற்றாண்டுகளில்தான் தெளிவாக வெளிப்படுகிறது. "12ம் நூற்றாண்டுக்குப் பின் (இக்காலம் இல்லாவிட்டால் இதற்குப் பின்னர்) கணிசமான தொகையினராக இருந்து தென் இந்தியா மற்றும் இலங்கை துறைமுகங்களில் வர்த்தகம் செய்ய தமிழ் பேசும் முஸ்லிம்களின் முன்னோடிகள் என்று அஞ்சுவண்ணத்தாரை கருதலாம்" என்ற வரலாற்றாசிரியர் கே.இந்திரபாலாவின் கூற்று இங்கு கருதத்தக்கது.*

*"What is of great interest is that the Anjuwannam could be reckened among the forerunner of the Tamil - using (and Later, if not at this time tamil speaking) muslim traders who were settled in considerable numbers in south Indian and Sri Lankan post towns after twelth century."*

*(The Evolution of an Ethnic identity pa.284)*

*கிழக்கு மாகாணத்தில் அவர்களின் பிரசன்னம் 17ம் நூற்றாண்டுக்குப் பின்னராகும்.*

*முடிவாக ஒரு குறிப்பு இங்கே கி.மு. பல வெளிநாட்டவர்கள், அபிசீனியர், அராபியர், யூதர், ஆப்கானியர், இந்தியர், துருக்கியர், பாரசீகர், கிரேக்கர், சீனர் வந்தார்கள், போனார்கள். தங்கிய ஒரு சிலர் உள்ளூர்மக்களுடன் இரண்டறக்கலந்து போனார்கள். கி.பி. 7ம் நூற்றாண்டுக்குப் பின் அதாவது இஸ்லாமியத் தோற்றத்திற்குப் பின் அரேபியர் வந்திருந்தால் மதவிதி காரணமாக தமது இஸ்லாமிய அடையாளத்தைப் பேணமுற்ட்டிருப்பர். ஆனால் அவர்களின் வருகை 12ம் நூற்றாண்டுகளில்தான் நிகழ்கிறது. அராபியாவில் இருந்து வந்த முஸ்லிம்களை விட இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து வந்த முஸ்லிம்களே அதிகமாக இருந்தனர். அரேபிய முஸ்லிம்கள் கருதத்தக்க எண்ணிக்கையில் இங்கு*

குடிபெயரவில்லை. அராபியர்கள் பெரும்பான்மையினராக இருந்தால் அரபு சமூக சாயலில் - தந்தைவழி உறவுக்குடும்பமுறையும் சமூக அமைப்பும் கொண்டதாக முஸ்லீம் சமூகம் அமைந்திருக்கும். ஆனால் மாறாக முஸ்லிம் சமூகம் தாய்வழிச் சமூகமாக அமைந்துள்ளது. திராவிடர்களான தமிழர்களை விட முஸ்லிம் திராவிடத் தன்மைகளைக் கூடக் கொண்டுள்ளதைக் கண்டு மானிடவியலாளர்கள் ஆச்சரியப்படுகின்றனர்.

உலகில் உள்ள தாய்வழி உரிமை பேணும் மூன்று முஸ்லிம் சமூகங்களில் கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகமும் ஒன்று என்று அச்சமூகம் பற்றி ஆய்வு நடத்திய மானிடவியலாளர்கள் மக்ஜில்வரே, கணநாத் ஒபயசேகர என்போர் கூறுகின்றனர். இவ்வாறு யதார்த்தம் இருக்க இலங்கை முஸ்லிம்களில் ஒருசாரார் நாங்கள் அரபுவழித்தோன்றல்கள் என்று கூறுவது அப்பட்டமான அரசியல் வெளிப்பாடாகும். இது வெறும் கருத்தியலாகும். உண்மை அல்ல. உண்மை வரலாறு என்பது நடந்த சம்பவங்களின் மீது அமைவதாகும். அதனால் அது ஒரு சமூக விஞ்ஞானமுமாகும்.

1) 12 நூற்றாண்டு முடியும் தறுவாயில்... மேலும் இலங்கையின் மேற்குக் கரைத் துறைமுகங்களில் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் செலுத்திய தமிழ்பேசும் முஸ்லிம்களின் முன்னோர்கள் என்று அடையாளம் காணத்தக்க முஸ்லிம் வர்த்தக சமூகத்தைப் பற்றிய தகவல்களை முதற்தடவையாக பெறக்கூடியதாக உள்ளது.

*"Up to the end of the twelth century. In addition, for the first time we get information about a muslim mercantile community identifiable as one of the forerunners of the later Tamil speaking Muslim traders who controlled the posts along the west coast of Sri Lanka"*

*(The Evolution of an Ethnic identity pa.282)*

2) ரியால் என்னும் நாணயத்தின் ஆதிவடிவம் அல்றியால் பிரான்சிக் (Alreyal Alfransi) என்பதாகும். இதன் பொருள் பிரேஞ்சு றியால் என்பதாகும். ஹெஜாஸ் ரியால் என்னும் நாணயமும் அங்கே புழக்கத்தில் இருந்தது. 1902ல் மன்னர் அப்துல் அஸிஸ் பின் சவூத்

ஒட்டமன் ராச்சியத்துள் அடங்கி இருந்த அரேபியாவை மீட்டெடுத்து அங்கே தனி அரசொன்றை நிறுவினர். அது அவர் பெயரில் சவுதி அரேபியா என்று அழைக்கப்பட்டது. 1925ல் தனது அரசுக்கென்று பிரத்தியேக நாணயமுறைமையை வகுக்க விரும்பிய மன்னர் ஏற்கனவே மக்களுக்குப் பழக்கமான நாணயங்களின் பின் ஓட்டின் பெயரில் நாணயத்தை வெளியிட்டார்.

றியால் (Reyal) என்து ஓர் அரபுச்சொல் அல்ல. அரசர், அரசருக்குரி என்ற கருத்தில் வரும் இலத்தின் வேர் சொல்லிலிருந்து பிறந்த சொல்லாகும் அது. இன்று Royal என்று ஆங்கிலத்தில் வழங்கும் சொல்லின் ஆதிவடிவமே றியால் ஆகும். 14ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல ஆங்கில கவிஞரான ஜியோவெறி சோஸர் மன்னன் ஒருவனை u;is rial Majesty என்று விளிக்கிறார். 1913 வரையும் வெப்ஸ்டுரரின் (Webteri) அகராதி இந்த சொல்லை இதே பொருளில் கொண்டிருந்தது.

இலத்தின் மொழிகளான ஒல்லாந்து, ஸ்ானிஸ், போர்த்துக்கீஸ் மொழிகளில் இயல்பாகவே இச்சொல் இப்பொருளில் வழங்கி வருகிறது. ஸ்பெயின், போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரேஸில் ஆகிய நாடுகளில் இப்பெயரில் நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடப்படுகின்றன. கம்போடியா போன்ற நாடுகளிலும் பிரேஞ்சு காலனித்துவம் நிலவியதால் அங்கும் ரியால் என்ற பெயர் கொண்ட நாணயம் புழக்கத்தில் உண்டு.

3) மேலும் சுமேரியர்கள் தமது செழிப்பான யூப்பிரடீஸ் - ரைக்கிரீஸ் வடிநிலங்களை விட்டு தகிக்கும் தென்னிந்தியாவுக்கு ஏன் புடைபெயர்ந்தனர் என்ற கேள்விக்கும் பதிலில்லை.

4) இதைத்தான் நோம்சொஸ்க்கி என்னும் சிந்தனையாளர் தோற்றவருக்கு வரலாறு கிடையாது என்று சொன்னார். இது பிரபஞ்சவிதி.

குறிப்பு : தடித்த எழுத்தில் உள்ளவை மயீத் அவர்களின் கட்டுரையில் அல்லது விமர்சனம் திரு.திருவேணிசங்கம் அவர்கள்

பின்னிணைப்பு : 2

# ஒரு வரலாற்றுத் திரிப்பின் விடையாக (பன்முகப்பார்வை)

நா.வை.குமரிவேந்தன்; நிறுவநர்; குமரித் தமிழ்ப்பணிமன்றம்

மணிப்புலவர் மயீத் அவர்களின் "சம்மாந்துறை வரலாற்று நூலின் ஒரு கட்டுரை "தொல் (பூர்வீக) வரலாறு" - இக்கட்டுரை எந்தவொரு ஆய்வறிஞரின் ஆய்வில், கல்வெட்டுகளில், செப்புப்பட்டயத்தில், இலக்கியங்களில், தொன்ம(புராண)க் கதைகளில் அல்லது அகழ்வுகளில் சொல்லப்படாத, வெளிப்படுத்தாத, இனம் காணப்படாத உயர்வு நவிர்ச்சிக்கற்னையின் வெளிப்பாடாய் உள்ளது. இது தாம் ஒரு தனித்த, இன்றைய நடு (மத்திய)கிழக்கு ஆசியாவைச் சேர்ந்தவர்களான அராபியரின் வழித்தோன்றல்கள் என்று காட்டவும், தம் மதத்தவரைத் தூண்டவும் திரித்து எழுதப்பட்ட கட்டுக்கதை போல் காட்சி தருகிறது. இங்கு காணப்படும் கூற்றுக்கள் பேரன் பாட்டனைப் பெற்ற கதைக்கே ஒப்பிடமுடியும். அத்தோடு "மொட்டம் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதாயும்", கட்டுரையில் காணப்படும் ஆய்வுகளும் "முட்டையில் மயிர் பிடுங்கி அதில் பேன் பார்ப்பவர்களையும்" நினைவுகூர்வதாயுமுள்ளது.

"தமிழ், வடமொழியாளர் (ஆரியச்) சூழ்ச்சியினால் நெடுங்கணக்கு முதல் பொருளிலக்கணம் வரை எல்லா நிலைகளிலும், எல்லாத்துறைகளிலும் ஏரண (தர்க்க)ப் பொருளாய் ஆக்கப்பட்டிருப்பதால் (இதில் மயீத் போன்றோரும் அடக்கம்), தமிழர்கள் எத்துணை பெரும்புலவரேனும், மொழியாராச்சியும், நடுநிலை, அஞ்சாமை, தன்னலமின்மை, மெய்யறியவாளர் என்னும் நற்பண்புகள் உள்ளவர்களாலேயே இதற்கான விடைகாண முடியும். கல்வி வேறு, ஆராய்ச்சி வேறு, என்பார் மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள் தமது "வேர்ச் சொற் கட்டுரைகள்" என்னும் நூலில். புலவர் மயீத் அவர்களின் நடுநிலையற்ற தன்மையை வெளிக்கொணர திரு.சா.திருவேணி சங்கமம் அவர்கள் எடுத்த முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

இவர் இன்றைய இதழியல் மரபுப்படி, ஊர், சுமேரியர், அராபியர்,

மண்டூர், நாவிதர் பகுதிகள், சவளக்கடை போன்றவை சார்பான புலவரின் கூற்றுக்களுக்கு மாறாக சங்க இலக்கியம், அறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகள், மட்டக்களப்பு மானியம் கூறும் மாகோனின் ஆட்சிப்பிரிப்பு, கல்வெட்டுகள் அதன் காலங்கள் போன்ற பல சான்றுகளைச் சுட்டிக்காட்டி முரண்பாடுகளையும், புனைவுகளையும் வெளிப்படுத்துகின்றார். இன்றைய வரலாறென்பது மேலாண்மை செலுத்துபவர்களின் உரிமையாகவும், சான்றுகள் அற்றதுமான நடைமுறையையே கொண்டுள்ளது. திரு.சா.திருவேணி சங்கமம் போன்ற மனச்சாட்சியும், நடுநிலையும், எழுத்தியல் நேர்மையும் கொண்ட எழுத்தாளர்கள் ஊடாகத்துறையினரால் உள்வாங்கப்பட வேண்டும். ஆனால் ஊடகத்துறை இவர்களுக்கு முன்னுரிமை தந்து வரவேற்பார்காள என்பது முயற்க்கொம்பு போன்றது தான்.

தமிழிய (திராவிட) மொழி பேசுநர் நடுமேற்கு, மேற்கு ஆசியாவில் இருந்து வந்து இந்தியாவில் குடியேறியவர்களென்று கமில சுவலபில், சட்டர்யீ போன்ற பலர் குறிப்பிடுகின்றனர். இக்கருத்து தமிழ்மொழிப் பரம்பலின் அடிப்படையில் நோக்கினால் தவறானதாகவே உள்ளது. ஊரல் அல்டாய்க் குடும்பமொழிகள், அவுத்திரேலிய பழம்குடிமக்களின் மொழிகள், அமெரிக்க இந்திய மொழிகள், சுமேரியம், எலாமைட் மொழிகள், யப்பானிய நிப்பன்மொழி, கொரியநாட்டு மொழி, ச்பெயின் நாட்டு பாச்க்கு மொழி ஆகிய மொழிகளின் சொற்கள், அவற்றின் வேர்ச் சொற்களுக்கு இடையில் காணப்படும் ஒற்றுமை மேற்குறித்த அறிஞர்களின் கருத்துக்கு முரணாகவே உள்ளது.

தொல் தமிழர்கள் இந்தியாவிலிருந்தே வடக்காகவும், மேற்காகவும், கிழக்காகவும் சென்று குடியேறியிருக்கவேண்டுமென்பார்; கீராசு அடிகள், இராமச்சந்திர தீட்சகர், ஞானப்பிரகாச அடிகள், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், தனிநாயகம் அடிகள் போன்றோர். இதை "முக்கடற் புதிர்கள்" (1974) என்னும் ஆங்கில நூலில் கொண்டிராவ்வும் சான்று காட்டுவார். தமிழர் தமிழ்மொழிப் பரம்பலை ஞானப்பிரகாசர் - தேவநேயன் ஏற்றக்கோட்பாடு என இன்று வழங்குகின்றனர் (விரிக்கின் தனி நூலே யாக்கலாம்).

மொழியியலில் முனைவர் கால்டுவெல் காலம் வரை "தமிழிய" மொழிக்குடும்பம் என வழங்கிய பெயரை திராவிட மொழிக்குடும்பமென மாற்றித் தமது "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை" எழுதினார். (1856 இல் - திருத்திய பாதிப்பு 1875) இச்சொல் முதன் முதலில் குமாரிலபட்டரின் தந்திர வார்த்திகத்தில் வருகிறதாம். மாமரபில் (மகாவம்சத்தில்) "தமிள" என்ற குறிப்பு, தண்டியின் "அவனி சுந்தரி கதையில்" "த்ரமிள" என உருமாறி பின்னும் திரிபுற்று "திராவிட" என மாற்றப்பட்டு விட்டது. எனவே தமிழர்கள் தமது எழுத்துக்களில் திராவிடம் தவிர்த்து "தமிழிய" என எழுத வேண்டும். தமிழனைத் தவிர திராவிடமொழிக்குடும்பத்தைச் சேர்ந்த எந்த மொழிக்காரனும் தன்னைத் திராவிடன் என்றோ, தன் மொழியைத் திராவிடமொழியென்றோ கூறுவதில்லை, எழுதுவதில்லை. அராபியமொழி ஒரு செமித்திய மொழி. இது அவ்வாறே ஆசியமொழிக் குடும்பத்தின் பெரிய கிளைக் குடும்பமாகும். இது இசுலாமிய மத விரிவாக்கத்தின் மூலம் 7ஆம் - 8ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் பரவியது. இன்று 10 கோடி மக்களின் தாய்மொழி, 94 கோடி மக்களின் மதமொழி. இசுலாமியரின் மதநூலான குர்ஆன் எழுதப்பட்ட செம்மொழி. இதன் வளர்ச்சி இறைதூதர் மொகம்மது நபி அவர்களின் இசுலாத் மத உருவாக்கத்தினால் கி.பி 622 பின் உயர்ச்சி கண்டதாகும்.

இந்தியாவில் இசுலாமியரின் ஆட்சி கி.பி 13ஆம் நூற்றாண்டில் தொடங்கி கி.பி 17 ஆம் நூற்றாண்டில் முடிவுற்றது. இக்கால இடைவெளியில் இசுலாம் மதம் இந்தியத் தென்னாடு வரை பரவியது. தென்னாட்டுத் தமிழர்கள் பலர் சாதிய ஏற்றத்தாழ்வுகளால் மனமுடைந்திருந்த வேளை இசுலாம் அவர்களுக்குக் கைகொடுத்துதவியதால் தமிழர்கள் பெருவாரியாக மதம் மாறினர். இவர்களின் வீட்டுமொழி, தாய்மொழி இன்றுவரை தமிழாகவே உள்ளது. தமிழ்நாட்டில் அராபியக் குடியிருப்புக்கள் எதுவும் இருப்பதாகவே தெரியவில்லை. இந்த நான்கு (4) நூற்றாண்டு இடைவெளியில் பல இசுலாமியர் (தமிழ்) இலங்கைக்கு வணிகத்திற்காக வந்துள்ளனர். வந்தவர்களும் இங்கிருந்த தமிழச்சிகளைத் திருமணம் செய்து கொண்டு வாழத் தொடங்கினர்.

கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன் இலங்கையின் அம்பாந்தோட்டை, மாத்துறை, திசைமாறாத கமம், கதிர்காமம் போன்ற இடங்களில் வாழ்ந்த இசுலாமியர்களில் சில ஆண்களைத் தவிர மற்றக் குடும்பத்திலுள்ள எவருக்குமோ தமிழைத் தவிர வேறொரு (சிங்களம் கூட) மொழி தெரியாமலேயே இருந்தது. இது எப்படி? ஆம் இவர்கள் தமிழராயிருந்தனர், தாய்மொழி தமிழாகவும், தாய்வழிக் குமுகாயமுமாக (சமுதாய) இருந்ததுதான் காரணம். (என்பட்டறிவு)

2500 ஆண்டுகளுக்கு முன் வந்த மகத நாட்டு பாலிமொழிக்காரரான விசயனும் அவன் நண்பர்களும் கி.பி.10 ஆம் நூற்றாண்டுக்குப் பின் புதுமொழி கண்டு (சிங்களம்) பல்கிப்பெருக முடியுமாயின் 2000 ஆண்டுகளுக்கு முன் சுமேரியர் (மத்தியகிழக்கு) வருகை தந்து இங்கிருந்திருந்தால் இன்று இலங்கையின் பெரும்பான்மையினராக அராபிக்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் வாழ்ந்திருப்பார்களே! உண்மையாகவே புலவரின் ஒவ்வொரு வரியும் திரு.கா.திருவேணி சங்கமம் குறிப்பிடுவது போல் வியப்பின் மேல் வியப்பூட்டுவதாயுள்ளது. சுமேரியமொழிக்கும் அராபிய மொழிக்கும் தொடர்பேதும் உண்டா? இங்கு வந்த சுமேரியர் தமிழரா? அல்லது இங்கு வந்து குடியிருப்பு அமைத்த அராபியர் தமிழரா? அல்லது இரு இனத்தவரும் தமிழரா? ஊர் என்பது (திராவிட) தமிழியச் சொல்லல்லவென்றால் அது எந்த மொழிக்குரியது? தலை சுற்றுகிறதே! வெடித்துவிடும் போலவுள்ளதே!

எச்.ஆர்.கால் எழுதிய "நடு(மைய) கிழக்கு நாடுகளின் பண்டைய வரலாறு (1913)" என்னும் ஆங்கில நூலில் தொல் இந்தியாவில் (பாகிச்தான், இந்தியா, பங்களதேசம், இலங்கை) தான் நாகரிகம் (நாகர் + இகம்) வளர்ச்சியடைந்து பட எழுத்தாகி திருந்திய எழுத்துமுறை சுமேரியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும், இத்தொல் தமிழரே சுமேரிய நாகரிகத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும் என்றும், சுமேரியரின் உருவப்படிமங்கள் (சிலை) பண்டைத்தமிழரின் உடலமைப்பைப் பெரிதும் ஒத்துள்ளதாகவும் கூறுவார். இந்த திருந்திய எழுத்து முறையே நாளடைவில் **"குனேபார்ம்" ஆப்பெழுத்தாக** உருப்பெற்றிருக்க வேண்டும் என்றும்

*கூறுவார். இவர்கள் சுமேரியா செல்லும் வழியில் எலாம் (ஈழம்) பகுதியிலும் தம் நாகரிகத்தை விட்டுச் சென்றுள்ளனர்.*

*செமித்தியரும் ஆரியரும் அல்லாத கிழக்கிலிருந்து வந்த ஓயானன், ஓடக்கோன் ஆகியோர் வந்து சுமேரிய நாகரிகத்தைக் கட்டியெழுப்பியதாக கி.மு.3500 முற்பட்டதான "பெரோசசு"க் கதை கூறுகிறதாம். சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் 1921 இல் அகழ்ந்தெடுக்கப்பட்ட போது எச்.ஆர்.காலின் கூற்றுக்கள் மெய்மையாகிவிடுவதை "கீராசு அடிகளார் தமது 1953 நூலில் "பழந்தமிழர் கடல்கோள்" செய்திகளே சுமேரிய வெள்ளக்கதைக்கும், கிறீத்தவர்களின் "நோவா"க்கதைக்கும் கருவானதென்பார். அத்தோடு "மனு" கடல்கோள்களுக்கு தப்பிய கதை "சதபத பிராமணம்", மத்சயதொன்மம் (புராணம்), பாகவதொன்மம் கூறும் கதைகளும் தமிழர் கடல்கோள் செய்திகளே என்பார் மறைமலைகள் எனப்பட்ட சுவாமி வேதாச்சலம்.*

*கிறீத்தவர்களின் மத நூலின் பழைய ஏற்பாட்டின் தொடக்கப் பகுதியாகிய தொன் நூலின் (ஆதியாகமம்) முதல் அதிகாரத்தில் உலகப்படைப்பு, மாந்தப்படைப்பு பற்றிக் கூறுகிறது. இங்கு ஏதேன் தோட்டத்திலே உலகின் முதல் மாந்தரென கிறீத்தவம் கூறும் ஆதாம் ஏவாள் படைக்கப்படுகிறார்கள். அத்தோட்டத்திலுள்ள ஒரு கனியை அவர்கள் உண்ணக்கூடாதென்பது கட்டளை. ஆனால் அங்கு ஒரு பாம்பு (சர்ப்பம் - நாகம்) வந்து அக்கனியை உண்ணும் படி அவர்களைத் தூண்டுகிறது. அவர்கள் உண்டபோது தாம் ஆடை இல்லாமல் பிறந்த உடலோடு இருப்பதை உணர்ந்து இலைகளால் தமக்கு உடை செய்து, உடலை மறைக்கிறார்கள். இங்கு பாம்பெனக் குறிப்பிடப்பட்டது தொல் தமிழரான நாக இனத்தவரான தமிழர்களையே. தொல் நாகரிகங்களான சுமேரிய, எகிப்திய, மாய போன்ற உலக முதற்குடிகளான நாக இனத்தவரே ஆவர். எனவேதான் உலக வரலாற்றில் நாகரிக உருவாக்கத்திற்கு பாம்பைக் குறியீடாகக் கொண்டனர் வரலாற்றாசிரியர்கள் போலும்.*

*இவ்வாண்டு பன்மொழியியலாளர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் 100 ஆவது ஆண்டுப்பிறப்பை நினைவுகூர்ந்து விழாக்கள்*

*நடைபெறுகின்றன. இவர் தமது ஆங்கில நூலான "பண்டை தமிழ்சங்க இலக்கியப் பாடல்களின் உள்ளீடு" (1953) இல் சங்கத்தமிழ் நூல்கள் தமிழக மண்ணிலேயே தொல் வரலாறாகத் தோன்றியவை என்பதைக் காட்டும் அனைத்து அடையாளங்களுமுள்ளன. வேறெந்த நாட்டில் இருந்தோ தமது மொழியுடனும், இலக்கியத்துடனும் தமிழர் தமிழகத்திற்கு வந்து குடியேறினார்கள் என்தற்கான சான்று எந்நூலிலும் இல்லை" என்பார்.*

*1974 இல் யே.டபிள்யு.கின்னர் வில்சன் அவர்கள் எழுதிய இந்தோ சுமேரியன் என்ற ஆங்கிய நூலில் சுமேரிய ஆப்பெழுத்தும் சிந்துவெளி முத்திரை எழுத்துக்களும் உறவுடையவை என்பார். எச்.பி.ஏ.கலோலா (பின்லாந்து) "1000 துர்லயன் வேர்ச்சொற்கள்" (2000) என்னும் நூலில் தமிழிய மொழிகள், உரால் - அல்தாய்க், இடையிலான ஒப்புமைகளையும், 2003 இல் "கயத் அசாதியனுடன்" சேர்ந்து வெளியிட்ட நூலில் மேற்குறித்த மொழிகளுக்கும் கி.மு 3500 - 1900 காலப்பகுதியிலே பேசப்பட்ட சுமேரிய மொழி தமிழிய மொழியே என (1965) நிறுவுகின்றனர். இதில் காணப்படும் சொற்களில் ஊர் (ஊரு) என்தும் ஒன்று. இன்றுவரை நிலைத்திருப்பது. பொதுவான மொழிகள் இயற்கை மொழிகள், செயற்கைமொழியென இருவகையுள் அடங்கும். தமிழ் மட்டுமே இயற்கை மொழி, மற்றையவை செயற்கை மொழிகள். எனவேதான் தமிழ் இயன்மொழி (பிறிமிற்றிவ் இலாங்குச்) என்றும், ஏனைய திரிமொழி (டெறிவேற்றிவ் இலாங்குச்) என்றும் வழங்கப்படும்.*

*"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (தொ.பெயர்.1) என்னும் தொல்காப்பிய சூத்திரத்திற்கு அமைய எல்லாமொழிக்குமுள்ள பெரும்பாற் சொற்களை பகுதிப் பொருளுடன் இயற்கை வடிவில் வழங்குவது தமிழே என்று மொழிநூலால் (பிலோலொயி) விளங்குமென்பார் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள். இவற்றுள் ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் சென்று வழங்கும் தென்சொற்களை பட்டியலிட்டுக்காட்டுகிறார் தமது "மொழியாராச்சிக் கட்டுரைகள்" என்னும் நூலில்.*

*"மொழிபொருட் காரணம் விழிப்பத்தோன்றா" (தொ.உரி.96).*

பல மரங்கள் பின்னிபிணைந்து இருக்கும் போது பார்த்தமட்டில் அவற்றின் இடிகளைக்கண்டு வேரைக்காண்பது அரிது. அதன் நுனிக்கொழுந்திலிருந்து இணுக்கும், வளாரும், குச்சும், போத்தும், சினையும், கொம்பும், கிளையும், கவையும் ஆக மரத்தின் அடியை நோக்கிவருவதைக் காணலாம். அம்மரத்தடியைத் தோண்டினாலன்றி அதன் வேரைக் காணமுடியாது. அதேபோன்று பல அடிகளிலிருந்து கவைத்து கிளைத்துப் பல்கிப் பெருகியுள்ள சொற்றொகுதிகளும் பார்த்தமட்டில் பிரித்துரைக்கப்படாதவாறு தம்முள் மயங்கிக் கிடக்கின்றன. இதைப்பலர் தமக்கு ஏற்ப நடுநிலையில் நின்று வழுவி தம்மதம் சார்ந்து, தம்மை வேற்றினமாகக் காட்டிக் கொள்ளவும், இருப்பை உறுதிப்படுத்தவும் முனைந்து காரியங்களைச் செயற்படுத்துகின்றனர். தமிழாலேயே உயிர்வாழ்பவர்கள் தமிழன்னையைக் கொச்சைப்படுத்துகின்றனர்.

"உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?" என்ற பழமொழி தொன்றுதொட்டு தமிழர் வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பழமொழியில் உயர் (உயர) என்பது நுண்ணிய நோக்கில் உயரம் என்றும் உயர்வு என்றும் இருபொருட்பட்டு நிற்கிறது, பொருள் வேறுபட வேண்டுமானால் சொல்லிலும் வேறுபடவேண்டுமென்பது சொல்லியல் நெறிமுறை. இது சொல் அமைதியில் வேறுபடுவதாயினும் அதன் அடிமூலம் ஒன்றே. என்னைப் பார்த்த மாத்திரத்து ஒருவர் கேட்பது நீர் இன்னாரின் மகனா? அல்லது இன்னாரின் உடன்பிறப்பா? என்பது தானே. ஆம் எனது சாயல் தாய், தந்தை, உடனிறப்பைப் போல் இருப்பதுதானே காரணம். இதுவே சொல்லமைதியிலுமுண்டு. அடிச்சொற்கள் திரிந்தும், விரிந்தும் அமைந்தாலும் அதன் மூலப்பொருள் மாறுவதில்லை. "ஊர்" என்ற பெயர் உலகளாவிய சிறப்பினது. அறிவியல் வளத்தில் அமைந்த பெயர். இரு குறில்கள் ஒரு நெடிலாகி சொற்பொருள் தருதல் சொல்லியல் நெறிமுறைகளுள் ஒன்று. (எ.கா) வியர்வை - வேர்வை, பகல் - பால், அகழி - ஆழி, மிகுதி - மீதி, அகல் - ஆல்; இதேபோன்று "உயர் - ஊர்" ஆனது.

மக்கள் எவ்விடத்தில் இருப்பிடம் அமைத்தாலும் அவ்விடத்தில் நீர் தேங்காமலும், தேங்கிய நீர் வழிந்து ஓடத்தக்கதான உயரமான

இடத்திலேயே தம் குடிமனைகளை அமைத்தனர். இது துலங்க ஊர் என்று பெயரிட்டனர். பொருள் குறித்த, நலம் மலிந்த இவ் அடிப்படைப் பெயர் இலங்கை, இந்தியா முதல் உலக நாடுகள் எங்கும் "ஊர்" என்ற பெயர்கள் அனைத்தும் தொல்தமிழர் கொடையாகும். சொல்லின் செல்வர். இரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் நூலொன்றின் பெயர் கூட "ஊரும் பேரும்" ஆகும். இங்கு பெயர் - பேர், பெயரன் - பேரன், பெயர்த்தி - பேர்த்தி, இவையெல்லாம் நாம் அறிந்தது. பழந்தமிழர் அறிவியல் சிறப்பு "ஊர்" அதன் வழிப்பட்ட ஆற்றூர், மலையூர், கடலூர் போன்ற சொல்லமைப்பிலும் புலப்படுகின்றது.

உயிர்வகைகளுள் ஊர்வன என ஒரு வகையுண்டு. இவை பள்ளம், குண்டு, குழி, பொந்து, புற்று போன்றவற்றில் உறைபவை. இவை கறையான், எறும்பு, பாம்பு, உடும்பு போன்றனவாகும். இவை உயர வருவதாலும் உயர் - ஊர் - ஊர்வன என்று ஆனது. இவற்றை சிவவாக்கியச்சித்தர் ஊரி என்றார். மழைமுகிலும், புல்லுருவியும் ஊரியானது (நிகண்டு நூலார் இணைத்தது). பண்டைய நாட்களில் மக்கள் செலவுகள் (பயணங்கள்) காளை, எருமை, குதிரை, ஒட்டகம், வண்டி போன்றவற்றில் நடைபெற்றது. இவற்றையும் ஊர்தி என்றனர்.

"ஊர்திவால் வெள் ஏறே" - புறப்பாடல்

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வம் அன்று" என்பது நற்றிணைப்பாடல்.

கால்நடை ஊர்தி, கால்(காற்று) உருள்(சில்லு - சக்கரம்) ஊர்தி அமைந்த பின் இன்று விண்ணில் பறக்கும் ஊர்திகளையும் பார்க்கின்றோம்.

"விசும்பின் வலவன் ஏவா வான ஊர்தி"

இவ்வடியில் இரண்டு அறிவியல் கலைச்சொற்களைக் காணலாம். ஒன்று ஊர்தியை இயக்குவோனாகிய வலவன், இரண்டு வானில் (விசும்பு) பறக்கும் ஊர்தியை "வான ஊர்தி" எனப் பெயரிட்டுள்ளான் (உயரத்தில் பறப்பதால் ஊர்தி) பழம் தமிழ்ப்பாட்டன். இயற்கை வளங்கிய உயரம் உயிரிகளின் உயர்த்தலுக்காகியச் செய்பொருளுக்குமானமை ஒன்றினுள் ஒன்று வளர்ச்சியாகும். உயர் ஊராகி ஊராட்சி, ஊரவை, ஊர்மன்றம் என்றெல்லாம் ஆனது. இது காட்சிப்பொருளாய் மட்டும் நில்லாமல் கருத்துப்பொருளுமானது.

போர்க்களத்தில் வீரம் காட்டுவது ஆண்மை. களத்தில் வீழ்ந்துபட்ட எதிரிக்கு உதவுவது உயராண்மை (ஊராண்மை) இதையே உலகவாழ்வியல் தந்த வள்ளுவனார் படைச்செருக்கு என்னும் அதிகாரத்தில்

பேராண்மை என்ப தறுகண்; ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எ·கு - (கு.773) என்பார்.

கல்வி நான்கு சுவர்களுக்கிடையில் நின்றுவிடக் கூடாது. அது ஊருக்கு, உலகத்திற்குப் பயன்பட வேண்டும். எனவேதான் கல்விநிலையத்திற்கு “கல்லூரி” என்றார் சிவகசிந்தாமணி தந்த திருத்தக்கதேவர். (கி.பி 7 ஆம் நுற்றாண்டு) கல்வி உயர்ந்து செல்ல வாய்த்த இடம் கல்லூரி. இதைக் “கலை பயில் கழகம்” என்பார் கம்பர்.

ஊர்வது ஊரியானால், உயிரை உடையது உயிரிதானே. எனவே நீரில் வாழ்வன - நீர்வாழி - நீரி என அழைக்கலாம். பாம்பை அகடூரி என்பது அகடு (வயறு) + ஊரி - அகடூரி. அதாவது வயற்றால் ஊர்வது. எனவேதான் தமிழ் இயற்கைமொழி, இயக்கமொழி என்பதற்கான சான்றுகள் ஆகும்.

கிறீத்தவர்களின் வேதநூலின் பழைய ஏற்பாட்டின் தொடக்கநூல் (ஆதியாகமம்) 11ஆம் அதிகாரத்தில் கடல்கோள்களுக்குத் தப்பிய நோவாவின் கொடிவழியினராகிய ஆபிரகாமின் முன்னோர்கள் கிழக்கிலிருந்து வந்து ஊர் என்று சொல்லப்பட்ட கல்தேயர் நாட்டில் செங்கற்களை அறுத்துச் சுட்டு, கிலைக்காரையாகவும் கொண்ட பெரிய கோபுரம் ஒன்றைக் கட்டுகிறார்கள். இவர்கள் ஒரேவிதமா மொழியையும், சொற்களையும் பயன்படுத்திப் பேசினார்கள் என்றும், இவர்கள் கட்டிய கோபுரமான பாபேல் இடையில் விடப்பட்டு, பல நாடுகளுக்கும் சிதறுண்டதாகக் கூறுகிறது. அத்தோடு ஆபிரகாமும் அவனுடைய உறவினரும் ஊரென்னும் கல்தேயர் நாட்டிலிருந்து கி.மு.2000 ஆம் ஆண்டளவில் கானான் (காணாத இடம்) ஆகிய இன்றைய இசுற்ரேல், சீரியா, யோர்டான் உள்ளடக்கிய நாட்டிற்கு இடம்பெயர்கின்றனர்.

இக்காலகட்டமே சுமேரிய நாகரிகத்தின் வீழ்ச்சிக்காலமாகும்.

*நோவாவின் தலைமுறையினர் இராமா, இராம், நாகர் என்றும் இந்திய மண்ணுக்கே உரித்தான பெயர்களைக் கொண்டிருந்தாரெனலாம். எகிப்தில் கூட நைல்நதி முகத்துவாரத்தில் இராமா என்ற பண்டகசாலை தொல்பழம்காலத்தில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.*

*கிழக்கிலிருந்து வந்தவர்கள் என்பது இந்தியாவையும், மேற்குறித்த பெயர்கள் இந்திய மண்ணையும் சார்ந்திருப்பது சுமேரியர்களெனக் குறிபிடப்படுவோர் தொல் தமிழர்கள் தான் என்பதை உறுதி செய்வதாயுள்ளது. ஆபிராம் - ஆப் + இராம் அப் என்பது சுமேரிய மொழியில் அப்பாவைக் குறிப்பது. ஆபிராம் தமது 99 ஆவது அகவையில் ஆபிரகாம் என மாற்றிக்கொண்டார். இவர்களின் தலைமுறையினரே மேற்கு, நடு ஆசிய நாடுகளில் யூதர்களாக, இசுரேலியர்களாக, அராபியர்களாக பரந்துபட்டனர்.*

*இசுலாம் மதம் தோன்றிய பின்னரே (கி.பி 7 ஆம் நூ ற்றாண்டு) அராபிய மொழி வளர்ச்சியுற்றது. இதனால் இவர்களின் முன்னோர்களின் பெயர்கள் இம்மானுவேல், ஆபிரகாம் (ஆபிராம்) போன்ற பெயர்கள் திரிக்கப்பட்டு இம்மானுவேல் ச்மயிலாகவும், ஆபிரகாம் - இப்றாகாமாகி - இப்றாகிம் ஆகியதென்பதுதான் வெளிப்படை. இதுவும் அரேபியாவில் உருக்கொண்டு இந்தியாவிற்கு கி.பி. 12-17 ஆம் நூற்றாண்டு காலத்தில் வந்து இலங்கையில் குடியேறி இருக்க வேண்டும். இதற்குப் புலவர் நடுகிழக்கு (மத்திய) வாழுநர்களை, இழுத்துவந்து "இப்றாகிம் பிட்டி"யில் குடியமர்த்தியுள்ளார். இதுபோல் மட்டக்களப்பை மக்பார் ஆக்கியும், மண்டூரை பண்டூராக்கியும் இதுபோன்ற இன்னும் பல வரலாற்றுப் பிறழ்ச்சிகளையும் ஏற்படுத்தியுள்ளார். இவற்றிற்கெல்லாம் திரு. சா.திருவேணிசங்கமம் அவர்கள் சான்றுகாட்டி மறுத்துரைத்துள்ளார். 21 ஆம் நூற்றாண்டை வரலாற்றுத் திரிப்பு ஆண்டாக உலக நாடுகள் வெளிப்படுத்தினால் நன்றாயிருக்கும் போலுள்ளது இவர்களின் செயற்பாடு.*

*2004 ஆண்டு பிலிப்ச்சின் கலைக்களஞ்சியத்தில் (என்சைக்குளோப்பீடியா) இலங்கையில் தமிழர் வருகை கி.பி.8 ஆம் நூற்றாண்டாம். அதாவது இராசராசசோழன் காலத்துடன்*

தொடர்புபட்டதாயுள்ளது. ஆனால் கி.மு.500களில் இந்நாட்டில் கரையொதுங்கிய பாகத மொழியாகிய மாகதி (பாலி) மொழியைப் பேசிய விசயனும் அவன் தோழர்களும் திருமணம் செய்தது பாண்டியத் தமிழச்சிகளையே. அவர்கள் ஆண் மேலாண்மைக் குமுகாயமாக இருந்ததால் பாலி, சமற்கிருதம், தமிழ் கலந்த மொழியையே பேசியிருக்க வேண்டும். இவர்களுக்கான நூல்கள் பாலி, சமற்கிருத மொழிகளிலேயே தொடக்க காலத்தில் எழுதப்பட்டன.

இவர்களின் தொல்நூலெனப் போற்றப்படும் மாமரபு (மகாவம்சம்) என்னும் நூல் கி.பி.5 ஆம் நூற்றாண்டில் விசயனின் வருகையின் 1000 ஆண்டுகள் கழித்தே பாலிமொழியில் எழுதப்பட்ட நூலாகும். இதன் பின்பே சிங்களமொழி இலக்கிய இலக்கணம் கண்டு கி.பி.10-12 ஆம் நூற்றாண்டுகளில் சிங்களமொழியாக முழுமைபெற்றதெனலாம். இன்று (800 ஆண்டுகளின் பின்) இலங்கையின் பெரும்பான்மையினமாக 11/2 கோடி மக்கள் பேசும் மொழியாகவுள்ளது. நிலமை இப்படியிருக்க 2000 ஆண்டுகளுக்கு முன் அராபிக் குடியேற்றங்கள் இங்கிருந்திருந்தால் அராபிய மொழிக்காரர் எத்தனை இலக்கங்களாக(இலட்சம்)ப் பெருகியிருப்பார். சிலவேளை இவர்களே இலங்கையின் பெரும்பான்மையினராயும் ஆகியிருக்கலாம். இப்படியான உண்மைக்குப் புறம்பான திரிப்புக்களைச் செய்வதன் மூலம் தமது தகுதியை, பட்டத்தை உயர்த்திக்கொள்ள முயல்கின்றனரா? தமிழனையும் தமிழையும் சொச்சைப்படுத்த எவ்வளவு முயற்சிகள் எம் கைவிரல் கொண்டே எம் கண்கள் குத்தப்படுகின்றன.

விசயனின் இலங்கை வரவை நினைவுகூர 1956 இல் அஞ்சல்தலை (25 காசு) வெளியிடப்பட்டது. அதில் கடற்கரையில் நூல் நூற்கும் (நாகரிகமடைந்தவர்கள்) பெண்ணொருவர் இருப்பதைப் போலவும், சில ஆண்கள் நாவாயில் (ஓடத்தில்) இருந்து இறங்கி கடற்கரை நோக்கி வருவது போன்றதுமான ஒரு காட்சியுடன் காணப்பட்டது. விசயனும் இலங்கை அரசுரிமை பெறுவதற்காகக் குவேனியென்ற இயக்கர் இனப்பெண்ணை மணந்ததாகவும், பின் அவளை விடுத்து விசயனும், அவன் நண்பர்களும் பாண்டியநாட்டு தமிழச்சிகளை மணந்துகொண்டதாகவும் மாமரபு (மகாவம்சம்)

*கூறுகிறதாம். எனவே இலங்கையில் விசயன் முன் தமிழர்கள் இருந்திருக்கவில்லையென்று மறுத்தாலும் விசயனுடன் இலங்கையில் தமிழர் வாழ்வு தொடங்கிவிட்டதைக் காணலாம்.* ***இலங்கையில் 40 ஆண்டுகளுக்கு மேல் நல்லாட்சி செய்த தமிழரசன் எல்லாள மன்னனை வென்று கி.மு.117 ஆம் ஆண்டில் அரசுக்கட்டில் ஏறிய துட்டகெமுனு (தமிழ்ச்சிற்றரசன் ஒருவரின் தலைமுறையில் வந்தவர் - ஆய்வுக்குரியது)*** *சிறுவனாய் இருந்தபோது தனது படுக்கையில் கூனிக்குறுகிப் படுத்திருந்ததாகவும் அவனது தாயார் நீட்டி நிமிர்ந்து படுக்கும்படி கூறியபோது "தெற்கில் கடலும் வடக்கில் (அநுராதபுரம்) தமிழரும் நெருக்குவதால் எப்படி நீட்டி நிமிர்ந்து படுக்க முடியுமெனத் தாயை வினாவியதாகவும் மகாநாமதேரர் எழுதிய பாலிமொழி மாமரபு (மகாவம்சம்) கூறுகிறதாம். எனவே 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழரும், தமிழரசுகளும் வாழ்ந்ததை, அரசோச்சியதை மாமரபு (மகாவம்சம்) தெட்டத் தெளிவாகக் காட்டும் போது தற்குறிகளும், நடுநிலை அற்றவர்களும், சமயவாதிகளும், தமிழின் இருப்பை, தமிழரின் இருப்பை கேள்விக்குறியாக்குவதிலும், இருட்டடிப்புச் செய்வதிலும் முனைந்து முயல்கின்றனர்.*

*இன்று மாந்தவியல், குமுகவியல், மொழியியல், புவியியல், அகழ்வாய்வுகள், கல்வெட்டியல், செப்புப்பட்டயம், இலக்கியங்கள் போன்றவற்றில் அமிழ்ந்து கிடக்கும், வெளிப்பட்டு நிற்கும் எந்தச் சான்றுமின்றி வல்லவன் பலவான் என்னும் தோரணையில் மேலாண்மைவாதிகள் தாம் நினைப்பவற்றைச் செயற்படுத்துகின்றனர். இதன் வெளிப்பாடுகள் இன்றைய கலைக்களஞ்சியங்கள், கட்டுரையாளர் போன்றோரின் திரிப்புக்கள். சிங்களமொழி வழக்கிற்கு வராத காலகட்டத்தில் பாலி மொழியில் மாமரபு (மகாவம்சம்) எழுதிய மகாநாமதேரர் எப்படியாகத் தமிழர் காழ்ப்புணர்வை விதைத்திட்டார் என்பதை அவர் வாழ்ந்த காலத்திற்கு 600 ஆண்டுகள் முற்பட வாழ்ந்த ஒருவரின் (துட்டகைமுனு) கூற்றாகக் கூறுவதன் மூலம் உய்த்தறியலாம். இன்றுவரை இது தொடர்வதுதானே. ஆனால் தமிழன் தன் இன்னல்களை, இடர்பாடுகளைத் துயரங்களை வெளிப்படுத்தினால் அதை இனவாதம் என்கின்றனர். மொழிஞாயிறுபாவாணர் அவர்கள் குறிப்பிடுவது போல பல தமிழ்ச்சொற்கள், ஆங்கிலம், இலத்தீன், கிறீக் மொழிகளின் சொற்களுக்கும் வேராயுள்ளது.*

பண்டைய நாட்களில் தமிழர் இடங்களில் வேலை செய்த தொழிலாளர்கட்குக் கூலியாக (சம்பா) அரிசியும், உப்புமே வழங்கப்பட்டது. எனவேதான் கூலியை சம்பளம் எனக்குறிக்கும் முறை ஏற்பட்டது. அரிசியை பொதுவாக சம்பா என்றே குறித்தனர். அளம் என்து நெய்தல் நிலமாகிய உப்பு நிலத்தை (உப்பைக்) குறித்தது. எனவேதான்

சம்பா + அளம் → சம்பளம் ஆனது

இதேபோன்று பண்டுதொட்டு இறை என்னும் சொல் இறைவனை, முதல்வனை, அரசனைக் குறிப்பதாகவும், திறை, இறை என்பன குடியிறையாகவும், அரசர்க்கு உரியதாகவும், அதாவது வரியாகவும், கப்பமாகவும் கொள்ளப்பட்டது.

த் + இ → தி, தி + றை → திறை → (த் + இறை)

இறை, திறை ஆகிய பழந்தமிழ்ச் சொற்கள் இற, திற என மக்கள் வழக்கில் மருவுவது இயல்பு. அரசன் → ரசன் → ராசன் → ராச் → ராயல் அரசன் என்ற பழந்தமிழ்ச் சொல்லும் மருவுதலுற்று "ராச்" என ஆங்கிலச் சொல்லாகி "ராயால்(றியால்)" என்ற அரசற்குரியது என்ற பொருளில் ஆங்கிலச் சொல்லானது. இந்த அடிப்படையிலேயே இறை (திறை) என்ற சொல் இலத்தீனுக்கான வேராகி ஒல்லாந்து, ச்பானிசு, போர்த்துக்கீசு மொழியாகிய "டொச்" இல் றியாலாக, திரிபுற்றதெனக் கொள்க.

உலகமொழிகளின் வேர்ச்சொல் பற்றிக் கூறவந்த பன்மொழியியலாளரும், பன்மொழி வேர்களை ஆய்ந்தவரும் உலக அறிஞர்களால் வெகுவாகப் போற்றப்பட்டவரும் ஆன தமிழ்த்துறவி நல்லூர் ஞானப்பிரகாச அடிகளார் தமிழ்ப்பண்பாடு (கல்ச்சர்) 11-தை 1953 இதழில் வெளிப்படுத்தியதாவது இந்தோ - ஐரோப்பிய மொழிகளில் வேர்களென உன்னிக்கப்படுபவை பொருள் தொடர்பற்ற வெறும் குறியீடுகள் தாம். தமிழிய (திராவிட) மொழி வேர்களோவெனில், ஐயத்திற்கு இடமின்றி பொருளையும் காரணத்தையும் காட்டுபவையாக உயிரோட்டமுள்ள முளைக் கருப்போலத் தோன்றும் எந்தக் கருத்தோட்டத்தில் பல்வேறு சொற்கள் உருவாயின என்பதைத்தெற்றென அவை காட்டும்வகையில் அமைந்துள்ளன.

இத்தன்மை இந்தோ - ஐரோப்பிய மொழிகளுக்கு இல்லாததால் அவற்றின் வேர்கள் இருள் மண்டிப் பொருளற்ற வெறும் ஒலிக்குவியல்களாகவே தோன்றும். அவற்றிற்கும் தெளிவு தந்து ஒளிகாட்டி உயிரூட்டம் தரக்கூடியவை தமிழிய (திராவிட) மொழி வேர்கள் தாம். பிறமொழி வேர்களுக்கும் இக்கருத்துப் பெரும் அறிவிற்குப் பொருந்துவதாகும்.

புலவர்களின் கட்டுரையானது தொல்மாந்த இனப்பரம்பலை அடிப்படையாக வைத்துப் புனையப்பட்டதாகும். மாந்த இனப்பரம்பலைப் பொறுத்தவரையில் அறிஞர்கள் இரண்டுபட்டு நிற்கின்றனர். உலக மொழியியல் அறிஞர்கள் தென்கிழக்கு ஆபிரிக்காவில் தோன்றிய மாந்த இனம் முதலில் மேற்காசியாவிற்கும் அங்கிருந்து நடுமேற்கு ஆசியாவிற்கும் பின் இந்தியாவிற்கும் பரவியிருக்கவேண்டுமென்றும் கூறுகின்றனர். இதை **மாந்த இனப்பரம்பலின் இறக்கக் கோட்பாடு** என்கின்றனர். இது மொழியென்று ஒன்று உருவாகாத காலத்திற்கு ஏற்புடையதாயிருக்கலாம் ஆனால் மொழியுருவாகிய பின் மொழியடைப்படையில் நோக்கினால் இது தவறான ஒரு கோட்பாடாகவே தோன்றும். ஏனெனில் கி.மு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட யப்பானிய நிப்பான் மொழிக்கும், 20000 ஆண்டுகளுக்குமேல் உலகுடன் எந்தத் தொடர்புமே அற்றிருந்த அவுத்திரேலியப் பழம்குடி மக்களின் மொழிக்கும், தமிழியமொழிக்கும் இடையிலான தொடர்பாகும். இது கடல்கோள்களால் அமிழ்ந்து போன தென்கிழக்காபிரிக்காவையும் தொல் இந்தியாவையும் இணைத்த பெருநிலப்பரப்பின் (குமரிக்கண்டம்) ஊடாக தொல் மாந்தர் இலங்கை (28500 ஆண்டுகளுக்கு முற்பட்ட மாந்த பாசிப்படிவுகள் 1982 கண்டுபிடிக்கப்பட்டது) இந்தியாவினுட் புகுந்து அங்கிருந்தே மொழிப்பரம்பல் நடைபெற்றிருப்பதை உறுதி செய்வதாயுள்ளது. இதையே **ஞானப்பிரகாசர் தேவநேயர் ஏற்றக்கோட்பாடென்று** கூறப்படுகிறது. இந்த அடிப்படையில் ஆய்வு செய்யப்டுமேயானால் மொழிப்பரம்லையும், நாகரிகப் பரம்பலையும், மாந்தப் பரம்பலை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சிபெறுக தமிழர் பண்பாடு!!!

குறிப்பு : முடிந்தவரை வட, கிரந்த எழுத்துக்கள், சொற்கள் தவிர்க்கப்பட்டுத் தனித் தமிழில் எழுதப்பட்டுள்ளது.

## நூல்யாக்கத் துணைநின்ற நூல்கள்

தமிழிலக்கிய வரலாறு - முனைவர்.பே.ரா.எம்மார்.அடைக்கலசாமி

புதியநோக்கில் தமிழிலக்கிய வரலாறு - முனைவர் தமிழண்ணல்

பெய்யெணப்பெய்யும் மழை - நாவை குமரிவேந்தன்

தொல்காப்பியம் (ஓர் அறிமுகம்)
திருக்குறள் (ஓர் அறிமுகம்) } முதுமுனைவர்.இரா.இளங்குமரன்

## ஆசிரியரின் வெளிவந்த நூல்கள் ...

- பெய்யெனப்பெய்யும் மழை
- ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி
- அகனின் விழிப்புக் கதைகள்
- தமிழியச் சான்றோர்
- மதுரை எரிகிறது
- உலக உயர்தனிச் செம்மொழி செந்தமிழ்
- தமிழர் இலக்கிய இலக்கணம் (ஓர் அறிமுகம்)
- தமிழர் மெய்யியல் கோட்டுபாடு (திருக்குறள் ஔவைநூல்கள்

## வெளிவர இருப்பவை

- தொடக்க காலக் கல்வியற் சான்றோர் - 01 (நெடுந்தீவின் வாழ்வியல் வரலாறு)
- தொல் தமிழர் (இலங்கை)
- தமிழ்த் தூய்மை
- தமிழியற் சான்றோர் பகுதி 02, 03
- திருக்குறள் சிந்தனைகள்

Vaani Computer Printing Centre.
No.85, Kanthasamy Kovil Road, Vavuniya.
T.P: 024 2223658, Email: vaaniprinting@gmail.com